
Canada Karai Cultural Association

கனடா காரை கலாச்சார மன்றம்

# காரை வசந்தம் 2010




10TH YEAR
10
வது வருடம்

OCTOBER 09,

# Karai Vasantham 2010

TORONTO, ONTARIO, CANADA


DOUBLE SEAL
INSULATING GLASS LTD.
453 Signet Drive
North York, Ontario, M9L 1V5
Tel: 416. 742 0146
Fax: 416. 742 4593
Contact: Mahadevan Balasubramaniam
Email: mo@doubleseal.ca
Cell: 416.716 7052
*Commercial Buildings
* Condomeniums * Hi Performance



## கனடா - காரை கலாச்சார மன்றம்
## பெருமையுடன் வழங்கும்

# காரை வசந்தம் 2010

## பத்தாவது ஆண்டு கலைவிழா
## சிறப்பிதழ்

ஒக்ரோபர் 09, 2010 சனிக்கிழமை மாலை 5:30 மணி

***Chinese Cultural Centre***

***5183 Sheppard Ave East (Markham & Sheppard )***

பிரதம விருந்தினர்

**டாக்டர். G. சாயுச்சியதேவன்**

MBBS, LRCP, MRCS (Eng), DORCS (Eng). FRCS (Eng), FRCS (Canada)

Oohthalmic Surgeon, Sudbury Hospital, ON.

# கனடா-காரை கலாச்சார மன்ற கீதம்

கனடா காரை கலாசார மன்றம்
வாழிய வாழியவே!
இனிதே காரை நகர்வாழ் மக்கள்
இன்புற்று வாழியவே!

மருதமும் நெய்தலும் மருவித் தோன்றும்
மாநிலம் காரைநகர்
கருதும் கல்வி கலையொடு ஒழுக்கமும்
கண்டபண் பாட்டுநகர்!

பால்நிறமான கடலலை மோதிப்
பரவிடும் கரையினிலே
மேலொளி வீசும கலங்கரை விளக்கம்
விளங்கிடும் மேன்மைநகர்!

அருளம் பலவனார் அல்லின் ஏபிரகாம்
ஆனோர் வளர்த்தநகர்
பொருளை வளர்க்கும் வர்த்தக ராலே
பொலியும் பொன்னகரம்!

பாரிற் புகழொடு பஞ்ச ரதம் வரும்
பதியும் இதுவே தான்
தேரில் பொலிதரு சுந்தரேஸ் வரரும்
திகழ்வதும் இங்கேதான்!

ஈழத்துச் சிதம்பரம் இலங்கிடும் காரை
என்றென்றும் வாழியவே!
தோளொத்த காரை - கனடா மக்கள்
தொடர் பென்றும் வாழியவே!

இம்மன்ற கீதத்தை ஆக்கியவர்: தமிழருவி ஆசிரியமணி
த.சிவகுமாரன்

இசையமைப்பு
குரல்: சங்கீத பூஷணம் காரை ஆ. புண்ணியமூர்த்தி
வயலின்: அளவையூர் இசை ஞானபூபதி கேசவமூர்த்தி
மிருதங்கம்: மிருதங்க கலாவித்தகர் பரஞ்சோதி ரதிரூபன்



# சமர்ப்பணம்

கலைத்தாயாம் கலைமகளின்
பாதக்கமலத்தில் பத்தாவது
ஆண்டு காரை வசந்தத்தில்
மலரும் கலைப் பூக்களை
காணிக்கையாக்கி
களிப்புறுகின்றோம்.



# கனடா-காரை கலாச்சார மன்றம்
# நடப்பாண்டு நிர்வாக சபை (2009-2010)

| | |
|---|---|
| தலைவர் : | திரு. ரவி. ரவீந்திரன் |
| உபதலைவர் : | திரு. தர்மலிங்கம் பரமசிவம்(துரை) |
| செயலாளர் : | திருமதி. மலர் குழந்தைவேலு |
| உபசெயலாளர் : | திரு. பாலசுப்பிரமணியம் கணேசன்(பாலன்) |
| பொருளாளர் : | திரு. தவராஜா சங்கரப்பிள்ளை |
| உபபொருளாளர் : | திரு. திரு. நடனசபேசன் பொன்னம்பலம்(ரூபன்) |

**நிர்வாக சபை உறுப்பினர்கள் :**

திரு. கோபால் மயில்வாகனம்
திரு. குகதாசன் செல்லத்துரை
திரு. மோகன் சங்கரப்பிள்ளை
திரு. நாதன் தர்மலிங்கம்

**தயார்நிலை உறுப்பினர்கள்:**

திரு. சோதிநாதன் ஆறுமுகம்
திரு. ஜெயரட்ணம் கணபதிப்பிள்ளை
திருமதி. பரமேஸ்வரி பரமசிவம்
திரு. அம்பலவாணர் நமசிவாயம்
திரு. மாறன் கணேசன்

**திட்டமிடல் போஷகர் சபை உறுப்பினர்கள்:**

திரு. கனக சிவகுமாரன்
திரு. சிவராமலிங்கம் சிவசுப்பிரமணியம்
திரு. சபாரத்தினம் பாலச்சந்திரன்
திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம்
திருமதி. கிருஸ்ணவேணி சோதிநாதன்

**கணக்காய்வாளர் :** திரு. முருகேசம்பிள்ளை வேலாயுதம்பிள்ளை
**இணையத்தள பராமரிப்பு:** திருமதி. மலர் குழந்தைவேலு
**இணையத்தள பராமரிப்பு ஆலோசனை:** திரு.விமலராஜா குலசேகரம்

**மலர்க் குழு**

திரு. கனக. சிவகுமாரன்
திருமதி மலர் குழந்தைவேலு
திருமதி. கிருஸ்ணவேணி சோதிநாதன்

முன் அட்டை வடிவமைப்பு: பா. ஞானபண்டிதன்
மலர் வடிவமைப்பு: மா. கனகசபாபதி
கணணனி அச்சுப் பதிவு: திருமதி மலர் குழந்தைவேலு

# உங்களில் ஒருவன்...........



பத்தாவது ஆண்டில் பரிணமிக்கும் 'காரை வசந்தம் 2010' ல் உங்களைச் சந்திப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழுக்கு முடிசூட்டும் முயற்சியில் முனைந்து நிற்கும் காரை வசந்தம் விழாவில் வெளிவரும் 10வது ஆண்டு மலரிற்கு மன்றத்தின் ஆசிகள்.

உங்கள் மன்றம் தம் சொந்த மண்ணின் மேல் பற்றுக்கொண்ட மக்களாலும், மன்ற உறுப்பினர்களின் விலைமதிப்பற்ற நேரப் பங்களிப்பினாலும், வர்த்தகப் பிரமுகர்களின் நன்கொடையாலும் மிகவும் சிறந்த முறையில் ஒற்றுமையாக இயங்கிய வண்ணமுள்ளது. அதற்காக உங்கள் அனைவரிற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றேன்.

**'பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்**
**நன்மை கடலின் பெரிது'**

என்ற வள்ளுவன் வாக்குக்கு அமைய பிரதிபலன் பாராது எமது ஊரின் மேம்பாட்டிற்காக உங்கள் கடின உழைப்பின் மூலம் உழைத்த பணத்தை வாரி வழங்கும் உங்களுக்கு எமது மனமார்ந்த நன்றியை மீண்டும் தெரிவிப்பதுடன் நீங்கள் வழங்கிய நன்கொடைகள் எமது ஊரின் வளர்ச்சிக்காகவும் மன்றத்தின் வளர்ச்சிக்காகவும் உரிய முறையில் பயன்படுத்துவோம் என்று உங்கள் மன்றம் சார்பாக உறுதியளிக்கின்றேன்.

உலகம் வாழ் காரைமக்களை ஒன்றிணைக்கும் மன்ற இணையத்தளம் karainagar.com தினமும் எமது ஊர்ப் புதினங்களுடனும் மன்றச் செய்திகளுடனும் உலகம் வாழ் காரை மக்களின் செய்திகளுடனும் புதுப்பிக்கப்படுகின்றது. உங்கள் ஆக்க பூர்வமான விமர்சனங்களையும் கருத்துக்களையும் மின்னஞ்சல் மூலமாகவோ அன்றி தொலைபேசி மூலமாகவோ அறியத்தந்து எமது மண்ணின் வளர்ச்சியையும், மன்றத்தின் வளர்ச்சியையும் மேலும் மேம்படுத்துங்கள்.

நன்றியுடன்
**ரவி ரவீந்திரன்**
தலைவர், கனடா-காரை கலாச்சார மன்றம்

# காரை வசந்தம் 2010 இல் உங்களுடன் சில நிமிடங்கள்.....



நான் கனடா-காரை கலாச்சார மன்றத்தை ஆரம்பம் தொட்டு அவதானித்து வருகின்றேன். அந்த வகையில் கடந்த காலங்களில் இருந்த நிர்வாக சபைத் தலைவர்கள், செயலாளர்கள், சக நிர்வாகசபை உறுப்பினர்கள் எல்லோரும் ஏதோ ஒருவகையில் நல்லமுறையில் தங்களுக்குக் கிடைத்த நேரத்தைப் பயன்படுத்தி இந்த மன்றத்திற்கு உழைத்துள்ளார்கள். அவர்களது உழைப்பின் பெறுபேறுகளினால் இரு தசாப்தங்களை அடைந்துள்ள இந்த மன்றத்தில் நானும் ஒரு அங்கத்தவராக இருப்பதில் பெருமகிழ் வடைகிறேன்.

இன்று கனடாவில் காரை வசந்தம் காரைநகர் மக்களிடம் மட்டுமல்லாது கலைநயம் கொண்டவர்களிடமிருந்தும் பாராட்டுதல்களைப் பெற்றிருக்கிறது.

எமது மன்றம் கனடாவில் உள்ள காரைநகர் மக்களை பல நிகழ்வுகளின் மூலம் இணைத்துக் கொள்வதுடன் நின்றுவிடாமல் காரைநகரில் வாழும் எமது உறவுகளின் அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் செயற்பட்டு வருவதையிட்டு பெருமையடைகின்றோம்.

ஒரு முன்னேறிய நாட்டில் இருக்கும் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன், முன்னேற்றமான சிந்தனைகளுடன் எமது மன்றத்தில் கடமையாற்ற முன்வர வேண்டும். இனிவரும் காலங்களிலும் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு காரைநகரில் இருக்கும் எமது உறவுகளுக்காகவும், கனடாவில் இருக்கும் எமது வருங்கால சந்ததியினருக்கும் உதவுவோமாக.

**மலர். குழந்தைவேலு**
செயலாளர் - கனடா காரை கலாச்சார மன்றம்

# காரைக் கலாச்சாரம் மிளிரும் காரை வசந்தம்

காரை வசந்தம் 2010 இல் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.



புலம்பெயர் மண்ணில் காலச்சக்கரத்தில் விநாடிகள் நிமிடங்காளாகி நிமிடங்கள் மணித்தியாலங்களாகி மணித்தியாலங்கள் நாட்களாகி நாட்கள் மாதங்களாகி மாதங்கள் ஆண்டுகளாகி ஆண்டு 10 வசந்தம் பெற்றிருக்கிறது. வசந்தத்தில் இன்புறுபவர்கள் நீங்களும் நாங்களுமே.

கடந்த கால மன்ற உறுப்பினர்களின் அயராத உழைப்பினாலும் வர்த்தகப் பெருமக்களினது அனுசரணையாலும் பெயர் குறிப்பிடவிரும்பாத நலன்விரும்பிகளின் நன்கொடையாலும் ஆலமரம் போல விருட்சமாக வலுப்பெற்றிருக்கிறது கனடா - காரை கலாச்சார மன்றம்.

அகவை 10இல் பெருமிதமாய் மண்ணின் கலை, கலாச்சாரங்களை வெளிக்கொணர்வதில் கனடா காரைநகர் மக்களது முயற்சியால் விருப்பெற்றிருக்கிறது காரை வசந்தம் 2010. இவ்வாறான கலைநிகழ்வுகளின் மூலம் புலம்பெயர் நாடுகளில் வாழும் காரைநகர் மக்கள் தங்களது பிணைப்பை பிறந்த மண்ணிற்கு எடுத்துச்செல்வதற்கு உறுதுணையாக காரை வசந்தம் வேரூன்றியிருக்கின்றது.

காரை வசந்தம் பல தசாப்தங்களைக் கடக்க நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம்.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு'

T - Together
E - Every One
A - Achieve
M - More

**தவராஜா சங்கரப்பிள்ளை**
பொருளாளர்
கனடா - காரை கலாச்சார மன்றம்.



Mayor

# DAVID MILLER

## A Message from the Mayor

It gives me great pleasure to extend greetings and a warm welcome to everyone attending the 10th annual Karai Vasantham hosted by Canada Karai Cultural Association.

Founded in 2000, Canada Karai Cultural Association is a non-profit organization established to preserve the values and traditions of Tamil culture and heritage through community unity. The organization aims to teach young Tamil-Canadians the respect and values of Canadian culture while embracing the values and culture of their own heritage. They provide a forum for youth to learn about their roots and build self-esteem and confidence to become successful leaders in our communities.

Now in its 10th year, Karai Vasantham cultural program brings together people of the Karainagar community across Canada who have come from the Sri Lankan Diaspora.

Toronto is one of the world's most multicultural cities and it is important to preserve one's culture and the traditions of our diverse communities. I applaud Canada Karai Cultural Association for its continued dedication to the Tamil community.

On behalf of Toronto City Council, I thank the organizers who made this event possible. Please accept my best wishes for a memorable program and continued success.


Yours truly,

David Miller

Mayor David Miller

TORONTO

City Hall • 100 Queen Street West • 2nd Floor • Toronto, Ontario M5H 2N2
Telephone: 416-397-CITY • Fax: 416-696-3687 • E-mail: mayor_miller@toronto.ca


துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா?
19 வருடங்கள் கனடாவில்
பொன்விழா கண்ட ஸ்தாபனம்
பணமாற்றுச் சேவையிலும்
52வருட வணிகத் துறையிலும்
தமிழ் மக்கள் இதயங்களில் இடம் பிடித்தவர்கள்
இரு இடங்களில் சேவை
Tel: 416.267.8221
3228 Eglington Ave. East
Suite 3 (Markham & Eglinton)
Scarborough, ON, M1J 2H6
Tel: 416.321.8221
3351 Markham Road,
Suite 109 (Markham & Steels)
Scarborough, ON, M1X 0A6



கனடா-காரை கலாச்சார மன்றம்
நடப்பாண்டு நிர்வாக சபை (2009-2010)

## காரை வசந்தம் 2010
## நிகழ்ச்சி நிரல்

**மங்கள விளக்கேற்றல்:** திரு. திருமதி. தம்பிராஜா, திரு.திருமதி. சிவகுரு கந்தையா
**அகவணக்கம்**
**தமிழ்த்தாய் வாழ்த்து**
**கனேடிய தேசிய கீதம்**
**மன்ற கீதம்**
**வரவேற்பு நடனம்:** பால விமல நர்த்தனாலய அதிபர், பரத கலா வித்தகர் **திருமதி சித்திரா தர்மலிங்கம்** அவர்களின் மாணவிகள்
**வரவேற்புரை**
**நடனம் :** கோபாலகிருஷ்ணா
பால விமல நர்த்தனாலய அதிபர், பரத கலா வித்தகர் **திருமதி சித்திரா தர்மலிங்கம்** அவர்களின் மாணவிகள்
**தலைவர் உரை:** திரு. ரவி . ரவீந்திரன்
**பிரதம விருந்தினர் உரை:** வைத்தியக் கலாநிதி சாயுச்சியதேவன்

**நூல் வெளியீடு:** முன்னாள் இந்து கலாச்சார அமைச்சர் திரு..தியாகராஜா மகேஸ்வரன் அவர்களின் 'அரசியல் வாழ்வும் தமிழர் பிரச்சனையும்'
ஏற்புரை: திரு. ஐ.தி.சம்பந்தன்
அறிமுகவுரை: திரு. கனக. சிவகுமாரன்

**சிறப்பு விருந்தினர் உரை:** லண்டன் காரை நலன்புரிச் சங்க தலைவர் திரு வி. நாகேந்திரம்

**நாடகம்** - தோற்ற மாயை நெறியாள்கை: **திரு. நா. சாந்திநாதன்**
**நடனம்:** தீம் தில்லானா
நடனகலா பாரதி, நாட்டியக் கலைமணி **செல்வி நிர்த்திகா சித்திரவடிவேல்** அவர்களின் மாணவிகள்

**நாடகம்: Luxury வறுமை**
உருவாக்கம்: திரு. இரா சம்பந்தன்
நெறியாள்கை: கனடா-காரை கலாச்சார மன்றத்தின் கலைப்பிரிவு

## இடைவேளை

**வாத்திய பிருந்தா:** சப்தஸ்வரா **கே. உதயகுமாரின்** நெறிப்படுத்தலில் காரைநகர் இளங்கலைஞர்கள் வழங்கும் இசைநிகழ்ச்சி

**நாடகம்: *facebook.com***
**காரை மணிவண்ணனின்** நெறியாள்கையில் ஜெனனி சுப்பிரமணியம், ராகவன் சுப்பிரமணியம், திருவாதர் தருமராஜா ஆகியோர் வழங்கும் நகைச்சுவை நாடகம்

**திரையிசை நடனம்:** காரை இளங் கலைஞர்கள் வழங்கும் திரையிசை நடனம்

**பரிசளிப்பு:** தமிழ்மொழித்திறன், பண்ணிசைப் போட்டிகளில் வெற்றிபெற்ற மற்றும் பங்கு பற்றிய மாணவர்களுக்கான பரிசில்கள்

நன்றியுரை-செயலாளர் திருமதி. மலர் குழந்தைவேலு
நிகழ்ச்சித் தொகுப்பு: தவராஜா சங்கரப்பிள்ளை, பா.ஞானபண்டிதன், P. S. சுதாகரன்

# பிரதம விருந்தினரின்

# வாழ்த்துச் செய்தி

'பெற்ற தாயும பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே'



என்பதை நன்குணர்ந்த கனடா வாழ் காரைநகர் மக்கள் கனடா காரை கலாச்சார மன்றத்தின் ஊடாக தாம் பிறந்து வளர்ந்து ஊரின் முன்னேற்றம் கருதி பணியாற்றி வருவது வியந்து போற்றுதற்குரியதாகும். ஒரு இனத்தின் அடையாளத்தை வெளிப்படுத்துகின்ற முக்கிய கூறாக அவர்களுடைய கலைகள் அமைகின்றன. பல்கலாச்சார சூழலில் அடிபட்டு எமது கலைகள் அழிந்து விடாதிருக்க 'காரை வசந்தம்' போன்ற கலை விழாக்கள் உதவுவதுடன் இளம் சமுதாயம் கலைகளில் ஈடுபாடுகாட்ட ஊக்குவிக்கிறது. அந்த வகையில் கனடா-காரை கலாச்சார மன்றம் வழங்கும் காரை வசந்தம் இம்முறை பத்தாவது ஆண்டாக வெற்றிகரமாக நடைபெறுவதையிட்டு பாராட்டி மகிழ்கின்றேன். இவ்விழா சிறக்கவும், கனடா-காரை கலாச்சார மன்றத்தின் பணிகள் மேலோங்கவும் மனதார வாழ்த்துகின்றேன்.

**டாக்டர். G. சாயுச்சியதேவன்**
MBBS, LRCP, MRCS (Eng), DORCS (Eng).
FRCS (Eng), FRCS (Canada)
Oohthalmic Surgeon, Sudbury Hospital, ON.

# காரை வசந்தம் தென்றலாக வீசட்டும்



எமது ஊரின் பெருமைகளை உலகறியச் செய்யும் அன்பு உள்ளங்களிற்கு எனது முதற்கண் வணக்கங்கள்.

இலங்கையிலேயே எமது ஊரான காரைநகருக்கு விசேட தன்மையும் அழகான கலை கலாச்சாரமும் உண்டு. இத்தகைய எமது ஊரின் கலை கலாச்சாரத்தினை கட்டிக்காத்து உலகளாவிய ரீதியில் பாதுகாத்து வளர்க்க முற்படுவது பாராட்டுக்குரியது. அத்துடன் காரைநகர் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டு அவர்களை ஊக்கப்படுத்திவரும் கனடா - காரை காலச்சார மன்றத்தின் பணி பாராட்டுக்குரியது.

இதே நேரம் என்னையும் எனது கணவன் வழியில் பாராளுமன்றம் செல்ல வைத்ததும் எமது ஊரே. ஆதலால் எமது ஊரின் அபிவிருத்திப் பணியில் என்னால் ஆன முயற்சியை எடுக்கவுள்ளேன். அத்துடன் தாங்கள் மேற்கொள்ளும் இப்பணிக்கு நான் என்றும் உறுதுணையாக இருப்பேன்.

கனடா - காரை கலாச்சாரமன்றத்தினால் நடாத்தப்படும் 10ஆவது காரை வசந்தம் விழாவிற்கு எனது வாழ்த்துக்கள் என்றும் இருக்கும். இன்றைய காரை வசந்தம் தென்றலாகி வீசி அனைவரும் இன்பம் பெற எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தானைப் போற்றி வணங்குகின்றேன்.

திருமதி. விஜயகலா மகேஸ்வரன்
பாராளுமன்ற உறுப்பினர்
இலங்கை

DR. V. VIJAYARATNAM, M.D.
M.R.C.P. (UK), M.R.C.P.C.H, F.R.C.P (C.), F.A.A.P, D.C.H. (LOND.), D.C.C.H. (EDIN.)
PAEDIATRICS, GASTROENTEROLOGY AND NUTRITION

*6A-3430 Finch Avenue East, Scarborough, Ontario M1W 2R5 Tel: 416-496-1990 Fax: 416-496-1984*

# ஊடகங்களினால் பதியப்படும் சிறப்புமிக்க கலைவிழா காரைவசந்தம்



10ஆவது ஆண்டாக நடைபெறும் காரை வசந்தம் கலைவிழா மிகவும் முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்த ஒரு நிகழ்வாகும். காரை வசந்தம் ஒவ்வொரு வருடமும் புதுப்பொலிவுடன் கலை, கலாச்சார நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றது. ரொறன்ரோ நகரில் வருடம் தோறும் நடைபெறும் பல கலை விழாக்களில், காரை வசந்தம் ஒரு முக்கியமான கலைவிழாவாக ஊடகங்களினால் பதிக்கப்படுவது காரைநகர் மக்கள் பெருமைப்படக்கூடியதாகும்.

இவ்விழாக்களின் வெற்றிக்குக் கனடா - காரை கலாச்சார மன்றத்தினரின் அயராத உழைப்பே காரணமாகும். கனடாவில் வசிக்கும் காரைநகர் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் இம்மன்றம் இலாப நோக்கற்ற முறையில் செயல்பட்டு பல நற்பணிகளைக் கனடாவிலும், காரைநகரிலும் செயல்படுத்திவருகிறது. இம்மன்றத்தின் செயற்பாடுகளில் பங்கெடுப்பதன் மூலம் காரைநகர் மக்கள் தாம் பிறந்த ஊரின் மேம்பாட்டுக்காக உதவி புரிந்து வருகிறார்கள்.

கனடா - காரை கலாச்சார மன்றம் மேன்மேலும் வளர்ச்சி பெற்று இனனும் பல நற்பணிகளை காரைநகருக்கு ஆற்றவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

காரை வசந்தம் 2010 மாபெரும் வெற்றியடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

டாக்டர் வி. விஜயரட்ணம்

உ

சிவமயம்


# சைவ சித்தாந்த மன்றம், கனடா

## Saiva Sidhdhantha Manram, Canada

தோற்றம்(Established): 1-12-1995

1008-50 Elm Drive East, Mississauga, ON, Canada. L5A 3X2

Email: saivamanram@gmail.com     Fax/Tel: (905) 566-4822




### கூத்த பிரான் வணக்கம்

ஆர்த்தெழுந்து உலகோடு உயிர் ஆடிட
நீத்தத் தண்மதி நீள்சடை ஆடிட
ஏத்தும் திண்ணபுரத்து நின்று ஆடிடும்
கூத்தன் சேவடி கும்பிடு வாமரோ.

- ஈழத்துச் சிதம்பர புராணம்

## வாழ்த்துரை

கனடா காரை கலாச்சார மன்றம் நடத்தும் காரை வசந்தம் – 2010 ஆனது அதன் பத்தாவது ஆண்டு விழா எனவும், அவ்விழா 2010 ஒக்ரோபர் 09 மாலை நடைபெற உள்ளதாகவும் அறிந்து மகிழ்கிறோம். அவ் விழாவில் நடைபெற உள்ள கலை நிகழ்ச்சிகள் யாவும் மக்கள் மனங்களில் அமைதியையும், மகிழ்வையும், ஒற்றுமையையும், தமிழுணர்வையும், இறையுணர்வையும், மனித நேயத்தையும் ஏற்படுத்தக் கூடியனவாக அமையத் திருவருள் துணை நிற்க வேண்டுகிறோம்.

எதிர்காலச் சந்ததியினரைத் தமது சைவத்தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களில் ஈடுபடுத்த எடுக்கும் கலைவிழா சிறப்புற நிகழவும், வெளிவரும் "காரை வசந்தம்" மலர் சைவத்தமிழ்க் கருவூலமாக அமையவும் ஈழத்துச் சிதம்பர சிவகாமி உடனுறை நடராசப் பெருமானை வணங்கி, வாழ்த்தி அமைகிறேன்.

"திண்ணபுரத் தெம்பெருமான் திருவடிக ளேத்துஞ்
சிவதொண்டர் திருக்கூட்டத் தடியார்க்கு மடியேன்"

- ஈழத்துச் சிதம்பர புராணம்

தி. விசுவலிங்கம்
தலைவர், சைவசித்தாந்த மன்றம், கனடா
நிர்வாக ஆசிரியர் **அன்புநெறி**
30-09-2010

# காரைநகர்
# தொழில் வளம்பெறவேண்டும்



பல்துறை ஆற்றல்பெற்ற காரைநகர் மக்கள் புலம்பெயர் நாடுகளில் தங்கள் தாய்நாட்டின் மேம்பாட்டிற்காகவும் வாழும்நாடுகளில் தமிழையும் தமிழ், கலை கலாச்சாரத்தையும் வளர்ப்பதில் ஏனையோருக்கும் முன்னோடியாக விளங்குகின்றனர். புலம் பெயர்நாடுகளில் இயங்கும் காரை கலாச்சார மன்றங்கள் பிறந்த மண்ணுக்கு அளப்பரிய பணிகள் ஆற்றிவருகின்றன.

பிறந்த மண்ணிற்கும் மக்களது முன்னேற்றத்திற்கும் கனடா-காரை கலாச்சார மன்றம் ஆற்றிவரும் பணிகள் பாரட்டத்தக்கன.

அதே வேளை கனடாவில் காரை மக்களை ஒன்றிணைக்கவும் ஐக்கியத்தையும் வளர்ப்பதற்கு ஒன்றுகூடல், கலை கலாச்சார விழாக்கள் காரை வசந்தம் போன்ற நிகழ்ச்சிகளை நடத்திவருவது போற்றத்தக்கது.

காரை மக்கள் வர்த்தகத்துறையிலும் மேம்பாடு பெற்றவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்கிச் சாதனைபடைத்தவர்கள். பாரிய தொழில்அதிபர்களாகவும் விளங்கிய பெருமைக்குரிய வர்த்தகப்பெருமக்களை உருவாக்கிய பூமி காரைநகர்.

இன்று புலம்பெயர்நாடுகளில் வர்தகப்பரம்பரையினர் சிதறுண்டு வாழ்கின்றார்கள். படித்த வர்த்தக விற்பன்னர்களும் வாழ்ந்து வருகின்றனர். இலங்கையில் மாற்றமடைந்து வரும் அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப தொழிற்துறையையும் வளர்க்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. நாம் கூட்டுமுயற்சியாக எமது மண்ணில் பொருளாதார வளத்தைக் கட்டியெழுப்பவேண்டிய நிலையிலுள்ளோம்.

அதற்கு முன்னோடியாக காரைநகரில் ஒரு பாரிய தொழிற்சாலையை உருவாக்கவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் சர்வதேச காரை அபிவிருத்தி ஒன்றியம் சீநோர் கப்பல் கட்டும் தொழிற்சாலைக்கான திட்டம் ஒன்றைத்தயாரித்து வருகிறது. புலம்பெயர்நாடுகளிலுள்ள காரை-கலாச்சார மன்றங்கள் ஒன்றிணைந்து பாரிய தொழிற்சாலை ஒன்றை உருவாக்க கனடா - காரை கலாச்சார மன்றம் முன்வரவேண்டும். ஒரு புதிய பொருளாதாரப் பாதையை நோக்கி கனடா- காரை கலாச்சார மன்றம் பயணிக்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஐ. தி. சம்பந்தன்
ஆசிரியர்- சுடர் ஒளி, லண்டன்




Special Care For Nervous Drivers

Driving For All Ages

Discount Certificate for car Ins (With full course)

Early Road Test Arrangements

Defensive Driving Course (C.S.C)

Individual Lessons are also Available

# SAABI DRIVING SCHOOL

**M.T.O. Approved Beginner Driver Edu. Course Provider**

## A. A. KANDASAMY

**41 Densgrove Rd. Scarborough, Ont. M1G 2A2**

**Res: 416 431 0832**
**Tel: 416 750 0411**

**Cell: 416 569 1421**
**Cell: 416 879 3641**

யா/ கலாநிதி ஆ. தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்,
காரைநகர்.
(காரைநகர் இந்துக்கல்லூரி
J/ Dr.A.Thiagarajah Madya Maha Vidyalayam, Karainagar.
(Karainagar Hindu College)
Email :- karaihindu @gmail.com
Mr. P. Sivanandarajah
TP NO :- 021 222 5406

03.10.2010

## காரை வசந்தம் - 10 வது ஆண்டு நிறைவு விழா

ஈழத்துச்சிதம்பரம், கசூரினா கடற்கரை, வெளிச்சவீடு, கடல்கோட்டை, வயல்நிலங்கள், பனந்தோப்புகள், தென்னந்தோப்புகள், பதினான்கு பாடசாலைகள் போன்ற பெருமை சேர்க்கும் விடயங்களைத் தன்னகத்தே கொண்டு தனியாக, அமைதியாக, மகிழ்ச்சியாக காணப்படும் ஊரே எமது மதிப்புக்குரிய காரைநகர் என்னும் புண்ணிய பிரதேசம். இவ் ஊர் எந்தவொரு இயற்கை அனர்த்தத்தாலும் பாதிக்கப்படாத, இயற்கையை வெற்றி கொண்ட ஊர் என்பதில் நாம் அனைவரும் பெருமிதம் அடைகின்றோம்.

இவ் ஊரைச்சேர்ந்த கனடாவில் வசிக்கும் மக்கள் கனடா காரை கலாசார மன்றம் ஒன்றை நிறுவி அதனூடாக எமது ஊருக்கு உதவி செய்து வருவது வெள்ளிடை மலை. இம்மன்றத்தின் அப்பழுக்கற்ற செயற்பாடுகள் எம்மை மகிழ்ச்சிக்கடலில் திளைக்க வைக்கின்றது. இம்மன்றம் தொடர்ந்து பத்து வருடகாலம் பல சவால்களையும் வெற்றி கொண்டு இன்று பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறது என்றால் அது எமது மக்களுக்கு ஓர் முன்னுதாரணமாகும்.

கனடா வாழ் காரைமக்கள் எமக்கு நீண்ட தூரத்தில் இருந்தாலும் அவர்களது உள்ளார்ந்த அன்பு எமக்கு மிக அருகில் இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றமானது ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி, உலக வளர்ச்சிக்கு சமாந்தரமாக எமது ஊரையும் எடுத்துச்செல்லும் என்ற நம்பிக்கை நிறையவே உண்டு. புலம்பெயர்ந்து சென்றாலும் எமது ஊரின் மேல் இவர்கள் கொண்டுள்ள அன்பை, பாசத்தை, கரிசனையை எண்ணி மனம் மகிழ்கின்றேன்.

இன்று 10வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் **“கனடா காரை கலாசார மன்றம்”** எல்லோர்க்கும் பெருமை சேர்க்கும் விதத்தில் தொடர்ந்து தனது பாதையில் வீறுநடை போட எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மன்றத்தின் செயற்பாடுகட்கு எல்லாம் வல்ல ஆண்டிகேணி ஐயனாரின் அருளாசி கிடைக்கவேண்டும் என பிரார்த்திக்கின்றேன்.

“போற்றுவார் போற்றட்டும் புழுதி வாரி
தூற்றுவார் தூற்றட்டும்
தொடர்ந்து செல்வோம்...”



வருக வருக **“காரை வசந்தம்”** மலர்
வளர்க வளர்க **கனடா காரை கலாசார மன்றம்**
வாழ்க வாழ்க எம் ஊர் **இனிய மக்கள்**

நன்றி

பொ. சிவானந்தராஜா,
அதிபர்,
**P. SIVANANDARAJAH**
**PRINCIPAL**
**J/Dr. THIYAGARAJAH M.M.V.**
**KARAINAGAR**

# CAP REIT

## Canadian Apartment Properties Real Estate Investment Trust

We have you covered in Scarborough

1757 Victoria Park Ave
(Victoria Pk & Lawrence)
1,2 Bedrooms from $850
Utilities Included 416-759 9977

10 & 30 Tuxedo Court
(Markham & Ellesmere)
1,2,3 Bedrooms from $929
Utilities Included 416-289 7423

25 Bay Mills Blvd
(Warden & Sheppard)
1,2 Bedrooms from $960
Utilities Included 416-293 0924

215 Markham Road
(Markham &Eglinton)
1,2 Bedrooms from $880
Utilities Included 416-267 5223

370 McCowan Road
(McCowan & Eglinton)
1,2,3 Bedrooms from $905
Utilities Included 416-266 7025

567 Scarborough Golf Club
(Scarborough Golf Club & Lawrence)
1,2 Bedrooms from $865
Utilities Included 416- 431 6994

1050 Markham Rd
(McCowan & Ellesmere)
Jr1,1,2 Bedrooms from $720
Utilities Included 416 - 438 3400

4000/4010 Lawrence Avenue East
(Lawrence & Kingston)
1,2,3 Bedrooms from $825
Utilities Included 416- 724 4040

30 Livonia Place
(Neilson & Ellesmere)
1,23 bedrooms from $870
Utilities Included 416- 281 5353

## மிகவும் தரமான வாடகை குடியிருப்பு

Visit our website

**www.capreit.net**

பல ஆண்டுகள் தமிழர்களின் பேராதரவைப் பெற்ற NaNo Computer ஸ்தாபனத்தின் விரிவுபடுத்தப்பட்ட உங்கள் முகவர்

# Search For A New Home With Me...



# RAJ NADARAJAH

**Sales Representative**

## Direct:416-333-6115

E-mail: nanohomes@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/Future Realty Inc.,** Brokerage*

262 Markham Road, Scarborough, ON.M1J 3C5

**Bus: 416-264-0101 Fax: 416-261-1519**

Higher Standards Agents...Higher Results. Satisfaction Guaranteed

*Independently Owned and Operated, REALTOR®


Computer துறையில் 14 YEARS

# NANO MICRO COMPUTERS INC.

SALE SERVICE UPGRADES REPAIRS ONSITE

NANO COMPUTER








Tel: 416.333 6115

Web: www.nanomicrocomputers.com

E-mail: nano@bellnet.ca

4465 Sheppard Ave. Unit 9
Scarborough, ON, M1S 5H9

## Call: Raj 416-333-6115


GTA
Banquet Services
"Making Your Happiness A Priority"
Your Connection for
Indoor & Outdoor
Event Planning
Exclusive Rights For
Event Planning At
TOSCANA
For all your complete and custom packages
www.GTABANQUETSERVICES.com
Jegan Gunaratnam
Event Coordinator
416-538-3500
Sasi Kunaratnam
Manager
416-358-8638
Banquet Services
A Division Of Auspicious Party Planners

# காரை மண்ணின் உயிரென விளங்குவது சைவத் தமிழ்ப் பண்பாடு



ஈழமணித்திருநாட்டின் நித்திலமாய் விளங்கும் காரை மண்ணின் நலியாத கலாசார விழுமியங்கள் செழிப்புற்று ஓங்குதற்கு, தோன்றாத் துணையாக நிற்கும் கனடா காரை கலாச்சார மன்றம் 'காரை வசந்தம்' தசவிழா ஆண்டில் காலடி பதிக்கின்ற இவ்வேளை அதன் பணி மேன்மேலும் சிறந்தோங்க எமது கல்லூரிச் சமூகம் மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

'தோன்றிற் புகழோடு தோன்றுக' எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க காரை மண்ணின் உயிரென விளங்கும் சைவத் தமிழ்ப் பண்பாட்டு வளர்ச்சியே தனது குறிக்கோளாக வரித்துக் கொண்டு ஈர்பத்து ஆண்டுகள் மக்கள் பணியில் இடையறாது உழைத்துக் கொண்டிருக்கும் அன்பு உள்ளங்களுக்கு எமது கல்லூரித்தாயின் ஆசிகளும், மணற்காடு முத்துமாரி அன்னையின் அருளும் என்றும் உரித்தாகும்.

'தூயவை துணிந்தபோது பழிவந்து சேர்வதில்லை'

நன்றி
வாழ்த்துக்கள்

**T.சோமசேகரம்**
அதிபர் யா/யாழ்ற்ரன் கல்லூரி
காரைநகர்


Delta Limousine Services
Best Limousines in Town
Discounts available for All Day Packages
SERVICES
* Weddings
* Casino
* Birthday
* Parties
* Airport
* Night Out
* Niagara Tours
* City Wine Tours
* Meet & Greet
* Stork Services
* Corporate Functions
* Proms / Graduations
Bala or Raj
1677 Wilson Ave., Toronto, ON, M3L 1A5
Tel:905.677.6006, 647.802.5466
Toll Free:1.877.677.6006 Fax:647.438.6160
email: info@deltalimousineservices.com
Web: deltalimousineservices.com
Open 24 Hrs
7 Days A Week

# கனடா காரை வசந்தத்திற்கு என் உள்ளத்திலிருந்து.......



நம்மினத்தவருக்காய் தேசம் விட்டு தேசம் வாழ் காரை மண் பெற்றெடுத்த கனடா வாழ்-காரை பிரஜைகளே மக்கள் நலன், மாணவர்கள் நலன், சமூக நலன், கலை கலாச்சார சமய நலன் கருதி அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்குமாய் நலன்புரிச் சங்கம் உருவாக்கி அதன் நிறைவாக இருபது ஆண்டினை நிறைவு செய்யும் காலத்தில் ஆற்றிய பணி என்னே! தன் இன விருதுகளை தேசம் விட்டு தேசம் சென்று - வித்திடும் சபையே!

மாணவர்கள் கல்வியினை ஊக்குவிக்கும் பொருட்டு பரிசில்கள் வழங்கியும் பாராட்டியும் கலை கலாச்சார நிகழ்வுகளை அளித்தும் நம் சந்ததியினருக்கு நம் தேசத்தின் பண்பாட்டினைக் காட்டியதோடு நின்று விடாமல்...... சாதி, மத, பேதமின்றி நம் இனத்தவர்கள் இன்னலுற்ற வேளையில் நம் மனதினுள் நடத்திய போராட்டங்களை நினைந்து கண்ணீர் விடாமல் எது வந்தாலும் வரட்டும் நம்மால் இயன்ற பணியை செய்திடுவோம் என திட சங்கற்பம் கொண்டு தங்களால் இயன்ற பணியைச் செய்த சபையே!

மலையில் இட்ட தீபம் போல் ஒளி விளக்காய் தேசமெங்கும் ஒளி வீசும் கனடா வாழ் காரை கலாச்சார மன்றமே! உன்பணி நதிபோல் பரவிச் சென்று வளப்படுத்தும். உங்கள் பணி சிறப்புறவும், பத்தாவது காரைவசந்தம் இதமாக வீசவும் வாழ்த்துகின்றேன்.

கே. சுந்தரலிங்கம்
அதிபர் - யா/வியாவில் சைவ வித்தியாலயம்
காரைநகர்


With the best compliments from
Abina's Textiles
அபினாஸ் ரெக்ஸ்டைல்ஸ்
BRAMPTON
We have a large selection of ready - made
Party & Casual Wear
105 Kennedy Road South, Unit#9 Brampton, ON L6W 3G2
Tel:905-459-4900 Fax:905-459-4909
e-mail: abinastex@hotmail.com Web:abinastextiles.com
by:gtm365.com, 647-706-6611



# மண்ணின் நினைவுகளையும், கனவுகளையும் மீட்டிப்பார்க்கும் விழா

கனடா - காரை கலாச்சார மன்றத்தால் நடாத்தப்படுகின்ற கலைநிகழ்வான 'காரை வசந்தம்' இம்முறை 10வது ஆண்டுவிழாவாக வெகு சிறப்பாக நடைபெற உள்ளது என்ற செய்தி கேள்வியுற்று உவகையடைகின்றேன்.

காரை மண்ணின் நினைவுகளையும், கனவுகளையும் மீண்டுமொரு தடவை கனடா காரை அன்பர்கள் அனைவரும் இணைந்து மீட்டிப்பார்க்கும் நிகழ்வை நடத்துவது பெருமகிழ்வு தருகிறது. அத்துடன் வழமைபோல காத்திரமான விழா மலரும் வெளிவரவுள்ளமை பாராட்டுக்குரியது.

தாய் மண்ணின் நினைவுடன் புலம்பெயர்ந்து வாழும் சேய்கள் முன் எடுக்கும் இன் ரன்ன நடவடிக்கைகளை நானறிவேன். இவர்களின் முயற்சிகளுக்கு வேறுபாடு களைந்து தோள்கொடுத்து உதவுவதன் மூலம் காரை மண்ணின் வளர்ச்சி, அபிவிருத்தியை துரிதப் படுத்த முடியும் என்பது எம் அசையா நம்பிக்கை.

இதற்கு எமது ஆசியும் ஒத்துழைப்பும் என்றும் இருக்கும் என்பதை தெரிவித்து 'காரை வசந்தம' விழா சிறக்க என் வாழ்த்துக்களைத் தெரிவித்துப் பணிகிறேன்.

இ. த. ஜெயசீலன்
உதவி அரசாங்க அதிபர்
காரைநகர்.

*With the best compliments from*

# Dr. Ganeshan Sayuchchiyadevan

**Opthalmologist**

**233 Brady Street, unit 14**
**Sudbury,ON P3B 4H5**
**Tel: 1-705-675-1115**
**Fax: 1-705-674-9169**

by:gtm365.com, 647-706-6611

# காரை அன்னைக்கு அணிசேர்ப்போம்! அது கண்டு பூரிப்போம் வாரீர்!



கனடா நாட்டில் இருந்து கனவுகள் பலவற்றையும் சுமந்து ஆண்டுதோறும் தோன்றும் வசந்தம் காரைவசந்தம் எழில்பெற மணம் பரப்பி வையத்தில் மலர வாழ்த்துவதில் பேருவகையடைகிறேன்.


காரை மாதா ஈன்றெடுத்த அருத்தவப் புதல்வர்கள் புலம்பெயர்ந்து கனடா நாட்டில் கால்ஊன்றி தொழில்வளம் பெருக்கி வாழ்கின்றபோதும் பெற்றதாயை எண்ணி மகிழ்வதுபோல் பிறந்த பொன்நாட்டை நினைத்து அதன் வளர்ச்சி வேண்டி பெருநிதி உவந்தளிக்கும் பெருங்கொடையாளர் கூடி எடுக்கும் வசந்தவிழா சிறக்க வாழ்த்துகிறேன். காகம் பறக்காத ஊர் உண்டோ? காரைதீவான் போகாத இடமும் உண்டோ? இல்லை உலகநாடுகள் பலவற்றிலும் வேர் ஊன்றி விழுதுகளாகிவிட்ட நம்மவர்கள் பல்வேறு நாடுகளிலும் காரைநகர் அபிவிருத்திக்காகப் பல சபைகளை அமைத்து நிதி தேடி அனுப்புவதில் ஆர்வம் கொண்டுள்ள போதிலும், அவர்களுக்கிடையே சிறு போட்டிகளும் பூசல்களும் இருப்பது மனவேதனையைத் தருகிறது.

காரைநகரில் இருந்து வந்த போட்டி பூசல் நீங்கி புதுச்சபையால் எல்லோரும் சேர்ந்து ஏகமனதாக தெரிவு செய்த நல்ல சபையாக காரைநகர் அபிவிருத்திச் சபை மிளிர்வதைப் போல புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஊர்வளர்ச்சி கருதி எல்லோரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக 'ஊர்கூடி தேர் இழுத்தால் தேர் ஓடும்' என்பது போல காரைமண்ணின் மைந்தர்கள் அனைவரும் ஒன்றுபட்டு காரை அன்னைக்கு அணிகலன்கள் கட்டி மகிழ்வோம். ஓரிரு ஆண்டுகளில் அன்னையின் வளர்ச்சி கண்டு பூரித்து நிற்போம் என்று கூறி காரைநகர் அபிவிருத்திச் சபையை பொறுப்பெடுத்த புதிய தலைவர் என்ற வகையில் எங்கள் கரங்களைப் பலப்படுத்துங்கள் எங்கள் ஊர் வளம்பெறும் என்று கூறி எல்லோரும் ஒன்றுபட்டு வளம் சேர்க்க ஐயப்பன் அருள்வேண்டி நிற்கிறேன்.

**மகாராணி க.சோமசேகரம் J.P**
தலைவர் காரைநகர் அபிவிருத்திச் சபை
காரைநகர் 27.9.2010

# AAS Customs Services Inc

**Customs Brokerage and Freight Services**





## KANA SUNDARAM, CCS
## (SIVA)

Certified Customs Specialist



Tel: 905 785 7319
Cell: 416 529 8872
Fax: 905 785 8479
Email: kanasiva@hotmail.com




3958 Milkwood Crescent
Mississauga, ON, L5N 8H2



The customer driven solutions of AAS Customs Services will make your cross-border shipping, importing and exporting seamless

# KK ELECTRONICS

Digital Video Production & State-of-the-art Digital Imaging




## FULLY DIGITAL VIDEO DVD PRODUCTION

- Specializing in the Fine Art of Video Production
- DVD Mastering/Authoring
- Media Duplication CD, DVD, Tape, Disk
- Videos Available on DVD
- Overseas-PAL-NTSC-SECAM Transfers
- Custom Packages Available

*We capture memories forever...*
*Simply the best in quality, service & price*
*Satisfied customers since 1985*

tel: 905.472.0877 • 416.566.9776 • 416.566.4139

**www.kkelectronics.ca**




# *Home Life GTA Realty Inc., Brokerage*

தரமான சுற்றாடலில்
உங்கள் முகவரியை தெரிவு செய்திட...
அழையுங்கள்



***Sekhar Kandiah** B.Sc.Eng*
*Sales Representative*

**206-1711 McCowan Road,Toronto ON. M1S 2Y3**
**Bus: 416-321-6969 Fax:416-321-6963**
**Cell: 416-294-6518**
**e-mail: s.kandiah@rogers.com**

# எமது உணர்வுகளையும் சிந்தனைகளையும் எமது எதிர்கால சந்ததியினரிடமும் விதைப்போமாக!



அறிவு, ஆற்றல், ஆளுமை விருத்தி, கடின உழைப்பு, தயாள சிந்தை, மண் பற்று என்பவைகளையெல்லாம் இயற்கையாகவே கொண்ட காரைநகர் மக்கள் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் தாம் வளம்பெற வாழ்ந்து, தமிழையும் சைவத்தையும் வளர்த்து, தமது பொன்னாடாம் காரைநகரையும் வளம்பெற வைப்பவர்கள். சூழ்நிலை காரணமாக காரைநகர் மக்களில் பெரும்பாலானவர்கள் காரைநகர் மண்ணைப் பிரிந்து வாழ்ந்தாலும், உணர்வுகளாலும் சிந்தனைகளாலும் காரை மண் மீதே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். காரை மண் மீதான இந்த உணர்வுகளையும் சிந்தனைகளையும் இன்றைய சந்ததியினரான நாம் எமது எதிர்கால சந்ததியினரிடம் விதைத்து வளர்க்காது விட்டால் எதிர்காலத்தில் அநாதையாகப் போவது காரை மண் மட்டுமல்ல எமது எதிர்கால சந்ததியுமேயாகும்.

கனடா-காரை கலாசார மன்றமானது, கனடா மண்ணிலே சமூக, கலை, கலாசார மற்றும் ஆன்மீக பணிகளில் ஈடுபட்டு, தமிழையும் சைவத்தையும் கனடா மண்ணில் வளர்த்து, பல்வேறு நிகழ்வுகளையும் போட்டிகளையும் நடாத்தி வருவது கனடா வாழ் காரை சமூகத்திற்கு மட்டுமன்றி தமிழ் சமூகத்திற்கும் ஆற்றிவரும் பெரும்பணியாகும். இம் மன்றத்தின் செயற்பாடுகள் எமது இன்றைய சந்ததியினரை மட்டுமன்றி எதிர்கால சந்ததியினரையும் இணைக்கின்ற பாலங்களாக இருப்பதுடன் காரை மண்ணின் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் எமது அடுத்த சந்ததியினருக்குக் கடத்துபவைகளாகவும் உள்ளன.

இம் மன்றமானது, நாட்டில் நடந்தேறிய நிகழ்வுகளால் தன் செழுமையை இழந்து, நலிந்து மெலிந்து விட்ட காரைநகரை மீண்டும் கட்டியெழுப்பும் வகையில் பல்வேறு கல்வி, சமூக, அபிவிருத்தி மற்றும் மனிதநேயப் பணிகளில் ஈடுபட்டு வருவது காரைநகரின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை அளிப்பதாகவும் உள்ளது. நாம் ஒவ்வொருவரும் ஏதேனும் வகையில் எங்களால் இயன்ற பங்களிப்பை எமது மண்ணிற்கு வழங்கக் கடமைப்பட்டுள்ளோம். அவ்வகையில் கனடா வாழ் காரை சமூகத்தினர் தமது பங்களிப்பை இம் மன்றத்தினூடாக வழங்கி வருவது ஏனையவர்களுக்கும் முன்மாதிரியாக அமைந்துள்ளது.

கனடா-காரை கலாசார மன்றம் தனது பத்தாவது வசந்த கால கலை விழாவைக் கொண்டாடுவதுடன் காரை வசந்தம் என்ற சிறப்பு மலரையும் வெளியிடுவது காரைமண்ணின் மைந்தர்களான எங்களுக்கெல்லாம் பெருமையை தருகின்றது. இம் மன்றத்தின் செயற்பாடுகள் இன்றுபோல் என்றும் தமிழையும், சைவத்தையும், காரை மண்ணையும் வாழ வைக்கவேண்டுமென வேண்டி இம் மன்றத்தின் விழாவிற்கும் மலருக்கும் எனது வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

**அருளானந்தம் சர்வேஸ்வரன்**
LL.B (Hons), M.A (UN – UPEACE) (Costa Rica), M.Phil (Colombo)
Attorney-at-Law

சிரேஷ்ட விரிவுரையாளர், சட்ட பீடம், கொழும்புப் பல்கலைக் கழகம்
வருகைதரு விரிவுரையாளர், சட்டப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
வருகைதரு விரிவுரையாளர், சட்டப் பிரிவு, திறந்த பல்கலைக் கழகம்
வருகைதரு விரிவுரையாளர், தொழில்கற்கைகளுக்கான தேசிய நிறுவகம்
இணைப்பாளர், முரண்பாடுகள் மற்றும் சமாதானம் பற்றிய பட்டமேற்படிப்பு கற்கைகள், கொழும்புப் பல்கலைக் கழகம்


Fashion Florist inc.
தரம்
நட்பு
நியாயவிலை
பாபு பூக்களஞ்சியம்
பாபுவின் கைவண்ணத்தில் பூக்கள் மாலையாகின்றது
Design: Thakaval.ca · 416-841-0285
மாலைகள், வட்ட மணவறை, பூ மணவறை, அரை வட்ட மணவறை, முத்து மணவறை,
பூக்கள், அலங்காரத்திற்கு தேவையான பொருட்கள் தவறாத நேரத்தில் கிடைக்கும்.
தரமான சேவைக்கு நாடுங்கள்... பாபு
Fashion Florist Inc.
Web: fashionflorist.ca
email: fashion@fashionflorist.ca
Unit 5 - 4400 Sheppard Avenue East
Scarborough, ON M1S 5J5
(Brimley & Sheppard)
(416) 754-8282
A 16 - 80 Nashdene Road
Scarborough, ON
(Middlefield & Nashdene)
(416) 297-0959



உ
சிவமயம்
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

காரைநகர்

# மணிவாசகர் சபை

பதிவு இல : HA / 4 / J / 168
ஆரம்பம் : 01.01.1940

## Karainagar Manivasagar Sabai

தலைவர்:
பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை

பொருளாளர்:
திரு. ந. பாரதி

செயலாளர்:
திரு. து. நாகேந்திரன்

காப்பாளர்கள்:
பண்டிதர் க. வைத்தீஸ்வரக்குருக்கள்
பேராசிரியர் இ. கனகசுந்தரம்
திரு. தி. விசுவலிங்கம்

உப தலைவர்கள்:
திரு. க. தில்லையம்பலம்
திரு. க. பாலசுப்பிரமணியம்

துணைச்செயலாளர்:
திரு. சு. அகிலன்

துணைப்பொருளாளர் :
திரு. வே. சிவகுருநாதன்

பரீட்சைச் செயலாளர் :
திரு. க . நேத்திரானந்தன்

உறுப்பினர்கள்:
திரு. செ. இராமுப்பிள்ளை
திரு. சு. விசுவலிங்கம்
திரு. ப. ஜங்கரன்
திரு. தி. சண்முகசுந்தரம்
திரு. க. சிவஸ்ரீசாந்திநாயகம்
திரு. வே. சபாலிங்கம்
திரு. நா. சுந்தரேசன்
திரு. ச. இராசநாயகம்

காரைநகர்
....................



கனடா–காரை கலாச்சாரமன்றத்தின் "காரைவசந்தம்" பத்தாவது ஆண்டு மலருக்கு மனப்பூர்வமான வாழத்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

1991ஆம் ஆண்டு சித்திரை மாதம் நாம் பூசித்து வணங்கிய தெய்வங்களை விட்டு கட்டி வாழ்ந்த வீட்டைத் துறந்து தேடிய பொருளை மறந்து நாம் பிறந்து வளர்ந்து விளையாடி கல்விகற்ற மண்ணைவிட்டு ஏதிலிகளாக அகதிகளாக வெளியேறினோம். அன்று இருந்த ஊரை எண்ணிப் பார்த்தால் மனம் வெதும்புகின்றது. இருந்தபோதும் காரைநகர் மண்ணில் பிறந்தவர்கள் எதற்கும் அஞ்சாமல் சளைக்காமல் கருமமே கண்ணாக கடமை செய்பவர்கள். அந்த வகையில் கனடாவாழ் காரைமக்கள் காரைவசந்தம் பத்தாவது ஆண்டு மலரை வெளியிடுவது போற்றுதற்குரியதாகும். தொடர்ந்தும் வெள்ளிவிழா, பொன்விழா மலர் வெளியிடும் திறமை கனடா–காரை கலாச்சாரமன்ற உறுப்பினர்களுக்கு உண்டு என்பதனை நான் நன்கு அறிவேன். ஏனெனில் உறுப்பினர்கள், உறுப்பினர்களின் பெற்றோர்கள் சிறியேனுடன் காரைநகர் மணிவாசகர் சபையில் முக்கிய பதவி வகித்தவர்கள். அவர்களின் வழிகாட்டலில் காரைநகர் மணிவாசகர் சபை இடம்பெயர்ந்தபோதும் யாழ்ப்பாணம், சித்தன்கேணி, வழக்கம்பரை போன்ற இடங்களிலும் சிறப்பாக பரீட்சைகளையும் விழாக்களையும் நடாத்தி வந்தது என்பதை தெரிவிப்பதில் உவகை கொள்கிறேன்.

கனடா–காரை கலாச்சாரமன்றம் கடந்த பல ஆண்டுகளாக காரைநகர் மணிவாசகர் சபைக்கு பல உதவிகளைச் செய்து ஊக்குவித்தமைக்கு இச்சந்தர்ப்பத்தில் மனம்நிறைந்த நன்றிகளைத் தெரிவிக்கும் கடமையும் எனக்கு உண்டு. தொடர்ந்தும் மன்றம் சபைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவும் கனடா–காரை கலாச்சாரமன்றத்தின் பணிகள் நூற்றாண்டுகளாக தொடர எல்லாம் வல்ல ஆண்டிகேணி ஐயனாரையும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேசப் பெருமானையும் சிவகாமி சமேத நடராஜப் பெருமானையும் பிரார்த்திக்கின்றேன்.

து. நாகேந்திரன்
செயலாளர்
காரைநகர் மணிவாசகர் சபை

# மண்ணின் தேவை அறிந்து உதவுவது வரலாற்றுப் பொறுப்பு

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானும் நனி சிறந்தனவே'



புலம் பெயர்ந்த நிலையிலும் பிறந்த கிராமத்தினை மேம்படுத்தும் நோக்கில் எமது மக்கள் ஒன்றிணைந்து கனடா காரை கலாச்சார மன்றத்தினை உருவாக்கிப் பணிபுரிவது பாராட்டுக்குரியது. பல்லாயிரம் மைல்களுக்கப்பால் வாழ்ந்தாலும் பிறந்த மண்ணின் பண்பாட்டுடனும் கலாசாரத்துடனும் தங்கள் பிள்ளைகளையும் வளர்க்க வேண்டும், தமது அடையாளத்தினை உறுதிப்படுத்த வேண்டும் என்ற விருப்புடன் இம்மன்றம் அமைக்கப்பட்டிருப்பதும், பணியாற்றுவதும் நல்ல செயற்பாடுகளாகும்.

இம்மன்றம் எமது அனைத்துப் புலம் பெயர் கனடா வாழ் மக்களையும் ஒன்றிணைப்பதில் வெற்றி பெற வேண்டும். தங்கள் அனைத்து நாடுகளிலுமுள்ள காரை நலன்புரி மன்றங்களுடன் இணைந்து எமது கிராம மக்களின், அரசினால் நிறைவு செய்யப்படாத தேவைகளை இனம் கண்டு காரைநகர் அபிவிருத்திச் சபை ஊடாக மேற்கொள்ளும் சேவைகள் நன்றிக்குரிய "காலத்தாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப் பெரிது." இந்த உதவிகளை தேவைக்கேற்ப வழங்குவது தங்களது வரலாற்றுப் பொறுப்புமாகும்.

'எந்தையும் தாயும் இனிது குலாவி இருந்ததும் இந்நாடு,
எம் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மகிழ்ந்ததும் இந்நாடு'

இந்த நாட்டினைப் போற்றி வணங்கும் நீங்கள் பாராட்டுக்குரியவர்கள். தங்களால் வெளியிடப்படும் இவ்வாண்டு காரை வசந்த மலரூடாக தங்கள் மன்றத்தினரையும், எமது கனடா வாழ் அன்பு நெஞ்சங்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன். தங்களுக்கு எல்லா நலன்களையும் திண்ணபுரத்தில் திரு நடனம் புரியும் நடராஜப் பெருமான் வழங்கப் பிரார்த்திக்கிறேன்.

வாழ்க காரை மாதா, வளர்க நம் பணி.

**ப. விக்னேஸ்வரன்**
வட மாகாணக் கல்விப் பணிப்பாளர்.



# ஊர்ப்பற்றுடன் பணியாற்றும் கனடா - காரை கலாச்சார மன்றம்

இலங்கையில், தனக்கென சிறந்த பண்பாடு கலாச்சாரங்களை பேணிப் பாதுகாக்கின்ற பண்பினைக் கொண்டதினால், ஏனைய பிரதேச மக்களினது நன்மதிப்பினை பெற்றுத் திகழ்ந்த, சிறப்புமிக்க காரை மண்ணிலே பிறந்து தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்றுள்ள மக்களுள் பலர், அங்கிருந்து சொந்த மண்ணிற்கு பொருத்தமான சேவைகள் செய்வதற்கு முன்வந்துள்ளமையினையிட்டு மனப்பூரிப்படைகின்றேன். அந்தவகையில் அம்மக்களால் சேவையினை பிரதான நோக்கமாக கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்புகளுள் கனடா - காரை கலாச்சார மன்னறத்தின் சேவைகள் பாராட்டிற்குரியது. இம்மன்றத்தின் நிதிப்பங்களிப்புடன் அபிவிருத்திப்பணிகள் எமது மண்ணில் முன்னெடுக்கப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. இந்த அமைப்பானது தனது சேவையில் அகவு பத்தை அடைந்தமையினையிட்டு எமது கலாமன்றத்தின் சார்பில் வாழ்த்துவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு மண்ணினது வளர்ச்சி நனித்து புதிய கட்டிடங்கள் அமைப்பது மட்டுமல்லாது, அந்த மண்ணிற்கே உரிய சிறப்புகளை தொடர்ந்து பின்பற்றுவதும் அதனை நவநாகரீகத்திற்கு ஏற்ற வகையில் மாற்றம் செய்து அழிவதற்கு இடமளிக்காது பாதுகாப்பதும் தலையாய கடமையாகும். அத்துடன் இம்மன்றத்திற்கு சொந்த மண்மீது பற்றும் விசுவாசமுள்ள தியாக சிந்தை கொண்ட உள்ளங்கள் தமது ஆதரவினை வழங்குவதின் மூலம் இம்மன்னறத்தின் சேவையினை மேலும் மெருகூட்ட முடியுமென நம்புகின்றேன். இன்னும் எமது காரை மண்ணிற்கு சிறந்த சேவையினை பல்லாண்டு காலம் ஆற்றவல்ல வல்லமையினை வழங்க வேண்டுமென, எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகளை மனதார பிரார்த்தனை செய்கின்றேன்.

நன்றி

திரு.ந.சோதிநாதன்
தலைவர்
கிழவன்காடு கலாமன்றம்
காரைநகர்
இலங்கை

*Best Wishes*

உங்கள் மனங்கவர்ந்த புகைப்பட நிறுவனம்

**Bharat Studio**

*Soma* 905 507 2999, Cell: 416 566 9552

# காரைநகர் மக்களுக்கு பெருமை சேர்க்கும் 10ஆவது ஆண்டு காரை வசந்தம்



கனடா - காரை கலாச்சார மன்றம் வருடம் தோறும் நடாத்தும் காரை வசந்தம் விழா இவ்வருடம் 2010ம் ஆண்டு ஒக்ரோபர் 9ம்திகதி மிகுந்த சிறப்புடன் நடைபெறுகிறது. இவ்வருடம் பத்தாம் ஆண்டை நிறைவு செய்வதில் கனடா காரைநகர் வாழ் மக்கள் அனைவருக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். எனவே இவ்விழாவினையொட்டி வெளியிடப்படும் விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஈழத்தின் வடபால்அமைந்துள்ள யாழ்ப்பாண நகரின் கண்ணே உள்ள காரைநகர் கிராமத்தைச் சேர்ந்த மக்கள் உலகின் எந்தப் பாகத்திலும் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது ஊர்ப்பற்றை, சமய, கலை, கலாச்சார விழுமியங்களை தாம் வாழும் இடங்களில் எல்லாம் பேணி வளர்த்து வருவது மனமகிழ்வு தருகின்ற விடயமாகும். இந்த வகையில் கனடா வாழ் காரை மாதாவின் மைந்தர்கள் தாம் பிறந்த ஊரிற்கும் மக்களிற்கும் பல்வேறு வழிகளில் உதவி நல்கி வருவது சாலச் சிறந்தது.

'பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ
வானினும் நனி சிறந்தனவே'

என்பதற்கு அமைய புலம் பெயர்ந்து வாழும் காரைவாழ் தமிழர்கள் இதனை நிவேற்றி வருகின்றனர். அவர்களால் தமிழும் சமயமும் மேன்மேலும் செழுமை அடைகின்றது.

காரைநகர் மண்ணுக்கும் அன்னைத் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விழாவாக காரை வசந்தம் விழா திகழவும், அத்துடன் இவ்விழாவானது முத்தமிழ் கலைகளையும் சிறப்பாக வெளிக்கொண்டு வருவதோடு காரை மண்ணின் பெருமைகளையும் சிறப்புக்களையும் தாங்கி வரும் நூலாக 9.10.2010இல் வெளியிடப்படுவதையிட்டு எனது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

வாழ்வு சிறிது வளர்கலை பெரிது.

**நாட்டியக் கலைமணி ஸ்ரீமதி ஞானாம்பிகை குணரத்தினம்**
(Dip-in-Bharathanatiyam, Dip-in-Edu)
(சாயி சகானா நாட்டிய சேஷ்த்திரா)


With the best compliments from
Rajaram Ca$h Express. Inc.
WESTERN UNION
(துரித பணமாற்றுச் சேவை)
Cheque Cashing
Money Transfer
Currency Exchange
Western Union
3351 Markham Road, #116,Scarborough, ON M1X 0A6.
Tel: 416-297-4700 e-mail: rajaram@live.ca
Web: www.rajaramcash.com
(Red Building Indoor. Unit 116)
by:gtm365.com, 647-706-6611


PRINCE JEWELLERY
PRINCE JEWELLERY
EXCHANGE & PAWN BROKER
3351 MARKHAM ROAD, UNIT 106
SCARBOROUGH, ONTARIO
M1X 0A6
T: 416-613-2929
E: INFO@PRINCEJEWELLERY.CA
W: WWW.PRINCEJEWELLWERY.CA



# Home financing expert. On call.

**First home or larger home? Downsizing or renovating?**

No matter what you're planning, having the right financing in place is just as important as having the perfect home.

As a BMO Bank of Montreal® mobile Mortgage Specialist, I can help you before you choose a new home or start to renovate. Let me show you how to customize a mortgage to fit your needs and how to make sense of home financing. I'm available to meet where and when it's convenient for you. Contact me and let's get started.

For home financing expertise on call, contact:



Anil Sarad
Mobile Mortgage Specialist
Tel. : 905-791-1328
Cell : 416-358-5837
Anil.Sarad@bmo.com

Mortgage Expertise at Your Doorstep 24/7

BMO Bank of Montreal

Making money make sense™

®/™ Trade-marks/registered trade-marks of Bank of Montreal.




# Scotiabank Residential Mortgages

Whether you're buying or selling a home, or renewing or refinancing your existing mortgage, you can look to my 15 years of banking experience for:

- Expert Advice
- Competitive Rates and
- Innovative Financing Solutions

I am available at a time convenient for your schedule.

## Ask me about...

- The Scotia Free Down Payment™ Mortgage
- The Welcome to Canada Program
- The *Scotia* Total Equity™ Plan
- Refinancing
- Switching to Scotiabank
- Financing for the Self-Employed

Scotiabank has a mortgage plan that will suit your personal needs and meet your financial goals.

**Let's get started. Call today!**



**Sri T.Sridharan, B.Sc., AMP**
Mortgage Development Manager
(Scotiabank Residential Mortgages)

**Tel: 416.953.3297**
**Fax: 416.287-2483**
**E-mail: tharma.sridharan@scotiabank.com**

Scotiabank™

Life. Money. Balance both.™

™Trademarks of The Bank of Nova Scotia.
All mortgages are subject to certain credit criteria and the home meeting Scotiabank residential property standards. Mortgage plans can be changed or withdrawn at any time without notice.

# காரை வசந்தம் உலகெங்கும் வீசட்டும்



கனடா-காரை கலாச்சார மன்றத்தின் காரை வசந்தம் நிகழ்வு பத்தாவது ஆண்டில் கால்பதிப்பதையிட்டு மகிழ்வடைவதோடு காரைநகர் அபிவிருத்திச்சபை செயலாளராக வாழ்த்துச் செய்தி வழங்குவதயிட்டு மிகவும் மகிழ்வடைகின்றேன்.

நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் புலம்பெயர்ந்த எம்மவர்கள் தாமுண்டு, தம்வாழ்வுண்டு என்று வாழாமல் எமது ஊரின் கலாசார செயற்பாடுகளை கட்டிக்காப்பதற்கு மன்றம் அமைத்து விழா எடுத்து வசந்தமாக வீசுவது பெருமைக்குரியது.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனி சிறந்தனவே'

என்ற வாக்கிற்கு அமைய எமது ஊர்ப் பெருமைகளை அறியவைக்கும் முயற்சி பாராட்டப்பட வேண்டியதாகும். காரைநகர் அபிவிருத்திச் சபையில் தெரிவு செய்யப்பட்ட நாம் தூரநோக்குடன் செயற்பட்டு வருகின்றோம்.

'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதற்கிணங்க பன்னாட்டு காரை அபிவிருத்திச் சபைகளும் ஒன்றுபட்டு அபிவிருத்திப் பணிகளை துரிதமாக செயற்படுத்த முன்வரல் வேண்டும்.

அத்துடன் குடாநாட்டு வர்த்தகர்களும் எமக்கு பல லட்சம் ரூபாய்கள் வழங்க முன்வந்துள்ளனர். அவர்களூடாகவும் குறித்த பணிகளை மேற்கொள்ளவுள்ளோம் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை இம் மலரினூடாக தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய நிகழ்வு சிறப்பாக நடைபெற எல்லாம்வல்ல ஈழத்துச் சிதம்பரத்தானைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகின்றேன்.

இ. ஜெயராசா
செயலாளர் - காரை அபிவிருத்திச் சபை.

# ஸ்ரீநிவாச மங்கள பவனம்




கதிர்காம முருகன் துணை

காரைநகர் கதிர்காமசுவாமி கோவில் பிரதம குருவும் கோவில் தர்மகர்த்தாவும் ஆகிய சிவஸ்ரீ ஸ்ரீநிவாசக ஐயர் மகனும், புன்னாலை வரதராஜப் பெருமாள் கோயில் குருவும் சுழிபுரம் சுப்பையா குருக்கள் அவர்களின் பேரனுமாகிய அலங்கார சிவாச்சாரியார்

# சிவஸ்ரீ வாகீஸ்வர குருக்கள்

(இந்துமத குரு, கனேடிய திருமணப் பதிவாளர்)

புதிய வில்லு மணவறை, முத்து மணவறை, பூ மணவறை, குத்து விளக்கு, வாழை மரம், மண்டப அலங்காரம், மணிமாலைகள், தவண்ணக் கோலங்கள், ஆராத்திப் பொருட்கள், நிறைகுடம், கொத்து நிறைநாழி அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்





சகல இந்துமத கிரியைகளுக்கும் மங்களகர சேவைகளுக்கும்
**வாகீஸ் ஐயா**

கல்யாண மண்டபம், புதிய ஊஞ்சல், திருமணம், பதிவுத் திருமணம், ருதுசாந்தி, புதுமனைப் புகுவிழா, புதுக்கடைத் திறநப்பு விழா, புண்ணியாக வாசனம், திவசம், நவக்கிரக சாந்தி மற்றும் பூ மாலைகள், ஜடை நாகம், தலைப் பாகை, தலைநகை, பூச் செண்டு, பூசைக் குரிய பொருட்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**Tel: 416 298 5942 Cell: 416 704 5942**

# சுவிஸ் காரை அபிவிருத்தி சபை
(ஆரம்பம்: 04.12.2004)

# Swiss Karai Development Board
(Founded on 04.12.2004)

**Postal Address:** Swiss Karai Development Board, P.O.Box 8378, 8036 Zuerich, Switzerland.

**போஷகர்கள்:**
சிவஸ்ரீ த.சரஹணபவானந்தக்குருக்கள்
திரு. சு.விமலநாதன்
**Patrons:**
Sivasri T. Saraganapavananthakurukkal
Mr. S. Vimalanathan

**தலைவர்:**
திரு. ஆ.செந்தில்நாதன்
**President:**
Mr. A. Senthilnathan
Tel: 0041-(0) 44 851 41 37
E.Mail- Senthil45@hotmail.com

**உபதலைவர்:**
திரு. அ.லிங்கேஸ்வரன்
**Vice-President:**
Mr. A. Lingeswaran
Tel: 0041-(0) 44 590 31 26

**செயலாளர்:**
திரு. க.மோகனதாஸ்
**Secretary:**
Mr. K. Mohanathas
Tel: 0041-(0) 31 991 31 87

**பொருளாளர்:**
திரு. ப. சபாநாதன்
**Treasurer:**
Mr. P. Sabanathan
Tel: 0041-(0) 41 620 11 76

**நிர்வாகசபைஉறுப்பினர்கள்:**
திரு. க.நந்தகுமார்
திரு. மு.பாலசுந்தரம்
திரு. த.லோகேஸ்வரன்
திரு. அ.பரமசிவம்
திருமதி. க.மனோரஞ்சிதம்
திருமதி. உ.கமலேஸ்வரி
**Members:**
Mr. K.Nanthakumar
Mr. M.Balasuntharam
Mr. T.Logeswaran
Mr. A.Paramasivam
Mrs. G. Manoranjitham
Mrs. U. Kamaleswary

**கணக்குப்பரிசோதகர்கள்:**
திரு. த.தயாபரன்
திரு. இ. அமிர்தலிங்கம்
**Auditors:**
Mr. T.Thayaparan
Mr. R. Amirthalingam

உ சிவமயம்



## "தசவிழாக் காணும் காரைவசந்தம் நூறாண்டு விழா காண்கவே"

ஆறிலாக் **காரை நாட்டில**ழுக்காறு மில்லைச் சைவ
ஏறனான் நல்லை வந்த நாவலனெடுத்து வாழ்ந்த
ஈறிலா **வொழுகலாறு** வலமிடமெங்கு மோடி
மாறிலா வவ்வூர் மாந்தர் மனக்கடற் படியுமன்றே.
(ஈழத்துச்சிதம்பரபுராணம் - காரைவளச் சருக்கம்)

அன்புடையீர் வணக்கம்

பத்தாவது ஆண்டு காரைவசந்தம் காணுகின்ற கனடா காரை கலாச்சாரமன்றத்தினருக்கும், கனடா வாழ் காரைமக்களுக்கும் சுவிஸ்வாழ் காரைமக்கள் சார்பாக சுவிஸ் காரை அபிவிருத்திச்சபையினரின் மனமுவந்த வாழ்த்துக்கள். இவ்விழாவானது எமது ஊரின் பெருமையை பறைசாத்துவதுபோல் அமைகின்றது. பத்தாவது ஆண்டாக இவ்விழாவினை நடாத்துவது கனடா வாழ் காரைமக்கள் ஊரின் மேல் கொண்டுள்ள பற்றினை எடுத்துக்காட்டுகின்றது. அவ்வாறே மாற்றுக்கலாச்சாரத்தில், மாற்றுக் காலநிலையில் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது ஊரின் பெருமையை தொடர்ந்து பேணிப்பாதுகாப்பதோடு, கனடாவாழ் காரை இளம் தலைமுறையினரை தொடர்ந்து ஊரின்மேல் பற்றுள்ளவர்களாக்க வேண்டிய பொறுப்பும் தங்களைச் சார்ந்ததேயாகும். எனவே காரைவசந்தம் "தசவிழா" சிறப்புற ஈழத்துச்சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப்பெருமானையும், ஆண்டிகேணி ஐயனாரையும் பிரார்த்திப்பதோடு எமது ஊர் மேன்மேலும் சிறப்புற்று விளங்க எல்லோரும் பணிசெய்வோமாக.

**காரைதீவிற்** சோறும் கடுகடுத்த பச்சடியும்
ஊராருக் கன்றி மற்றையோர்க்குவப்பில்லை – பார்மீதில்
தங்கோடைச் சைவன் சமைத்த கறிசாதம்
எங்கே போய்க்காண்பேன் இனி. (கல்லடி - வேலுப்பிள்ளை)

ஊரின் பெருமை ஊராருக்கே.

**என்றும் அன்புடன் சுவிஸ் காரை அபிவிருத்திச்சபையினர்**

இங்ஙனம்

ஆறுமுகம் செந்தில்நாதன்
தலைவர்
சுவிஸ் காரை அபிவிருத்திச்சபை
சுவிற்சர்லாந்து

30.09.2010
Oberglatt, Swiss.

# அளவால் சிறுத்த காரை மண் புகழால் பெருத்தது

வணக்கம் எம் மண்ணின் உறவுகளே!



'காரைநகர்' என்பது எம் மண்ணின் பெயர் என்பதை மறந்து அதுவே எம் மனதின் பெயர் என்றானதோர் காலத்தில் சந்திக்கிறோம். அளவால் சிறுத்தாலும் தன் புகழால் பெருத்தது எம் புகழுடைக் காரை மண்.

கடந்த தசாப்தங்களில் ஏற்பட்ட எம் இனத்தின புலப் பெயர்வு எவரையும் போலவே எமக்கும் வேதனையானது. வேரொடு பிடுங்கி எறியப்பட்ட அந்த வேதனைகள் எம் எல்லோர்க்கும் பொதுவானவை. 'கேட்டிலும் உண்டோர் உறுதி' என வள்ளுவன் சொல்வதை ஒப்ப வேதனைகள் கலந்த அப்பெயர்வுக் கேட்டிலும் எமக்கான சில உறுதிகள் உண்டாயின.

சேறுகளில் எம் கால்கள் புதைந்து கிடந்தாலும் எம் மண்ணின் வாழ்வியல்பு, வானத்து நட்சத்திரங்களோடு எம்மை உறவாட வைத்தது. அத்தகைய உணர்வே எம்மை இன்றுவரை முன்னேற உதவியது.

வாழ்வு மேம்பாடு, அடுத்த தலை முறைக்கான கல்வி, மற்றும் எமக்கான கலை, இலக்கிய, எழுத்து உள்ளிட்ட படைபாழுமை ஆகிய அனைத்திலும் நாம் எமக்கான முத்திரைகளை புலப் பெயர்வு வாழ்வில் பதித்தோம், பதிக்கிறோம், பதிப்போம்.

புலப் பெயர்வு மண்ணில் ஏற்பட்ட மண் சார்ந்த அனைத்து முன்னேற்றத்தினதும் பின் புலத்தில் குறித்த நாடுகளின் அமைப்புகள் பெரும் பங்காற்றியுள்ளன. எம் ஈழ தேசத்தின் எல்லாக் கிராமங்களையும் போலவே காரை மண்ணும் தனக்கான அமைப்புக்களைக் கொண்டுள்ளது.

மலேசியா, லண்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளில் காரை மண்ணை வளப்படுத்தும் சங்கங்கள் உருப்பெற்றுள்ளன. இவற்றுள் கனடா-காரை கலாச்சர மன்றம் மிக அதிகமான காரை மக்கள் வாழும் கனேடிய மண்ணில் தன் செயற்பாட்டை மேற்கொண்டு வருகிறது. அது தன் செயற்பாட்டின் பத்தாம் ஆண்டை பூர்த்தி செய்யும் இன்றைய காரை வசந்த நாளில், எம் மனப் பூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

மண்ணைவிட்டுப் பெயர்ந்த இந்த மனம் இருண்ட காலத்திலும் வாழ்வை வசமாக்கும் கனடா காரை கலாச்சார மன்றத்தின் பத்தாவது காரை வசந்தம் சிறப்புற லண்டன் வாழ் காரை மக்கள் சார்பில் வாழ்த்தி நான் மகிழ்கிறோம்.

**வி. நாகேந்திரம்**
தலைவர், லண்டன் காரை நலன்புரிச் சங்கம்

# பத்தாவது காரை வசந்தம் ஓர் சாதனை



காரை வசந்தம் -2010 கலைவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். 2000ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக்கலைவிழாவானது இன்று 10வது ஆண்டை எட்டிப்பிடித்திருப்பதானது பாராட்டுக்குரிய சாதனை நிகழ்வாகும்.

கனடா-காரை கலாச்சார மன்ற உறுப்பினர்களின் அர்ப்பணிப்பு, செயற்திறன், கூட்டுமுயற்சி அனைத்தும் இணைந்ததன் விளைவே இச் சாதனைக்குரிய காரணிகளாக அமைந்துள்ளன என்பதை எவரும் மறுக்கமுடியாது.

கலைப்பிரியர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்ட காரை வசந்தம் கலைவிழாவானது பல வளர்ந்து வரும் இளம் கலைஞர்களை அறிமுகம் செய்து ஊக்குவித்தும் வருகின்றது.

10வது ஆண்டு விழா பொலிவுபெற்று விளங்கவும், விழாவையாட்டி வெளியிடப்படும் சிறப்பு மலர் கலைமணமும், ஊர்மணமும் பரப்பி அமையவும் வாழ்த்துவதுடன் எல்லாம் வல்ல இறைவனின் ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

அன்புடன்
**மு. காசிப்பிள்ளை.**
கனடா காரை கலாச்சார மன்றத்தின் முன்னாள் தலைவர்
முன்னாள் திட்டமிடல் போஷகர் சபை உறுப்பினர்

# Kajanth Grocery

*Video - Vegetable - Money Transfer, Meat*



துரித பணமாற்றுச் சேவை, உலர் உணவுப் பொருட்கள்,
உடன் மரக்கறி, கோழி, ஆட்டு இறைச்சி,
கணவாய், இறால், மீன்
இன்னும் பல.........





S&Rentals of
Tamil Movies
Audios & CD's
Video Transfer
from any Systems

*தமிழ்ப் படங்கள்*
*ஓடியோக்கள், சீடிக்கள்*
*மற்றும் வீடியோ பிரதிமாற்றம்*

Kumar
**Tel: 416- 240- 0039**

**1708 Jane St. Weston, Ont. M9N 2S4**
**(Jane & Lawrence)**

# 10வது காரைவசந்தம் வளமோடு வீசட்டும்



காரைவசந்தம் பத்தாவது மொட்டு மலர்கின்றது! இது கண்டு உள்ளம் பூரித்து ஆனந்தம் கொண்டாடும் எம் இனிய உறவுகளை வணங்கி வரவேற்கின்றேன். இந்த இனிய வேளையிலே உங்கள் ஆழ்மனதுடன் சிலமணித்துளிகள் உறவாட வருவீர்களா? அனுமதி தருவீர்களா?

கனடா-காரை கலாச்சார மன்றம் ஏன் உருவானது? எப்படி இயங்க வேண்டும்? அதன் எதிர்கால திட்டங்கள் எப்படி அமைய வேண்டும்? இப்படி சில வினாக்கள் உங்கள் ஆழ்மனதில் உதயமாகியதா?

ஆம் என்று விடை இருந்தால் நன்றியுடன் வாழ்த்துக்கள். இல்லை என்று விடை இருந்தால் உண்மை பேசிய உத்தமர்களாக உங்களை மீண்டும் வாழ்த்துகின்றேன். இப்போதுதான் நாம் இங்கே ஒன்று கூடி உள்ளம் திறந்து பேச வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்படுகின்றது.

கனடா-காரை கலாச்சார மன்றம் காரை மாதா ஈன்றெடுத்த எல்லா செல்வங்களையும் ஒன்று சேர்த்து உறவாட உருவான ஒரு நிறுவனம்.

நமது உறவுகளை ஒன்று சேர்த்து கலை, கலாச்சார, பண்பாட்டினை வளர்த்து நாம் எல்லாம் ஒரே உறவுகள் என வழிகாட்ட ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம்.

அத்தோடு காரைநகரில் வாழும் மக்களுக்கு முன்னேற்றப்பாதையில் செல்ல வழிகாட்ட வேண்டிய ஒரு கடப்பாடு கனடா-காரை கலாச்சார மன்றத்துக்கு உண்டு.

அதை விடுத்து அங்கு வாழும் மக்களுக்கு பண உதவி செய்வது என்பது கனடா-காரை கலாச்சார மன்றத்தினால் முடியாத ஒரு காரியம். யானைப் பசிக்கு சோழப்பொரி கொடுத்து பலன் இ ல. அதற்கு, இதற்கு என்று பண உதவி செய்ய முடியாது. குறிப்பாக ஆலயங்களுக்கு ! ஆலயம் என்பது அநேகமாக வியாபார மயப்படுத்தப்பட்டுவிட்டது. மறந்து விடாதீர்கள். ஆலயம் வேறு. ஆன்மீகம் வேறு.

கோடி கோடியாக பணம் இருந்தாலும் கனேடிய வாழ்க்கை தரத்தை காரைமண்ணில் நிலை நிறுத்த முடியாது. கனடா வேறு காரைநகர் வேறு அங்குள்ள அக, புற காரணிகள் அதற்கு இடம்தர மாட்டாது. இதனை மறந்து செயற்பட்டால் திட்டங்கள் விகாரம் அடையும் என்பது மறுக்க முடியாத உண்மை அக, புற காரணிகள் மாறும் போது சிந்தனைகள் அணுகுமுறைகள், வாழ்வியல் எல்லாம் மாறும். இது இயற்கையின் நியதி. ஞானிகள் முதல் சாள்ஸ் டார்வின் வரை இதனைத்தான் சொல்லுகின்றார்கள்.

இப்பொழுது உங்களிடம் கேட்டுப் பெற்ற சில மணித்துளிகள் முடியப் போகின்றது அதற்கிடையில் ஒரு சின்னக் கதை.

ஓடாத மணிக்கூடு ஒரு நாளைக்கு இரண்டு தரம் சரியான நேரம் காட்டும். சிறு பிழையுடன் ஓடுகின்ற மணிக்கூடு சதா பிழையான நேரத்தைத் தான் காட்டும். ஆனால் அந்த பழகிப்போன பாவனையாளனுக்கோ அதனை சரிபடுத்தி சரியான நேரம் சொல்லத்தெரியும். அவனுக்கு அந்த மாற்றும் காரணி(Adjustment Factor) கை வந்த கலையாக இருக்கும்.

எனவே நாம் சேர்ந்து ஓடவேண்டியது சிறுபிழையுடன் ஓடும் கடிகார முள்ளோடா அல்லது இரண்டு சரியாக நேரம்காட்டுகின்றேன் என்ற இறுமாப்பு கொண்ட கடிகார முள்ளோடா என்பதனை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்.

**மௌனம் கலையட்டும்**

**மனம் திறந்து பேசுங்கள்**

**அணிதிரண்டு வாருங்கள்**

**மறந்து விடாதீர்கள் Working Together is A Success**


**காரை வசந்தம் வளமோடு வீசட்டும். நலமோடு நாம் எல்லாம் இணைந்து வாழ்வோமாக.**

# வசந்தம் வீசிய 10ஆண்டுகள்

சிறப்பு மலரின் முகப்பு




வசந்த அரங்கு: வின்ஸ்ரன் சர்ச்சில் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, மே 06, 2000
பிரதம விருந்தினர்: திரு. சிற்றம்பலம் திருஞானசம்பந்தன் B.Sc (Eng)
சிறப்பு விருந்தினர்: திரு. முருகேசு காசிப்பிள்ளை
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. சபாபதி சபாநடேசன்
செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்
பொருளாளர்: திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தன்



வசந்த அரங்கு: வின்ஸ்ரன் சர்ச்சில் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, மே 26, 2001
பிரதம விருந்தினர்: பேராசிரியர். Dr.தி. சிவகுமாரன்
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. சபாபதி சபாநடேசன்
செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்
பொருளாளர்: திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தன்




வசந்த அரங்கு: வின்ஸ்ரன் சர்ச்சில் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: செப்ரம்பர் 21, 2002
பிரதம விருந்தினர்: குழந்தை வைத்திய நிபுணர்.
Dr.வி. விஜயரட்ணம்
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. முருகேசு காசிப்பிள்ளை
செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்
பொருளாளர்: திரு. சிவசுப்பிரமணியம் குகநேசபவான்




வசந்த அரங்கு: சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, டிசம்பர் 13, 2003
பிரதம விருந்தினர்: மகப்பேற்று வைத்திய நிபுணர்
Dr.S. கலைச்சந்திரன்
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. வேலுப்பிள்ளை இராசேந்திரம்
செயலாளர்: திரு. பரமசிவம் தர்மலிங்கம்
பொருளாளர்: திரு. வேலாயுதபிள்ளை மகேசன்





வசந்த அரங்கு: சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, ஒக்டோபர் 30, 2004
பிரதம விருந்தினர்: திரு. இளையபாரதி
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. வேலுப்பிள்ளை இராசேந்திரம்
செயலாளர் (பதில்): திரு. மார்க்கண்டு செந்தில்நாதன்
பொருளாளர்: திரு. வேலாயுதபிள்ளை மகேசன்


# வசந்தம் வீசிய 10ஆண்டுகள்

சிறப்பு மலரின் முகப்பு


வசந்த அரங்கு: சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, டிசம்பர் 10, 2005
பிரதம விருந்தினர்: திரு. முருகேசு காசிப்பிள்ளை
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. கோபால் மயில்வாகனம்
செயலாளர்: திரு. கந்தையா சந்திரசேகர்
பொருளாளர்: திரு. தம்பிராஜா பரமானந்தராஜா




வசந்த அரங்கு: வின்ஸ்ரன் சர்ச்சில் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, ஒக்டோபர் 21, 2006
பிரதம விருந்தினர்: தம்பிராஜா ரவிச்சந்திரன் Ph.D. P.Eng
சிறப்பு விருந்தினர்: திருமதி. மனோகரி சதாசிவம்
அமைந்த நிர்வாகம்: தலைவர்(பதில்): திரு.சண்முகம் கந்தசாமி
செயலாளர்: திரு. கனக. சிவகுமாரன்
பொருளாளர்: திரு. கணேசன் திருக்குமாரன்



வசந்த அரங்கு: சேர் ஜோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, ஒக்டோபர் 27, 2007
பிரதம விருந்தினர்: பேராசிரியர். DR.தி. சிவகுமாரன்
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. அருணாசலம் கருணாகரன்
செயலாளர்: திருமதி. கிருஷ்ணவேணி சோதிநாதன்
பொருளாளர்: திரு. சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம்




வசந்த அரங்கு: Armenian Youth Centre
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, நவம்பர் 08, 2008
பிரதம விருந்தினர்: Dr. R. செல்வராஜா M.D,
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. அருணாசலம் கருணாகரன்
செயலாளர்: திருமதி. கிருஷ்ணவேணி சோதிநாதன்
பொருளாளர்: திரு. சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம்



வசந்த அரங்கு: சீனக் கலாச்சார கலையரங்கு
வசந்தம் வீசிய நாள்: சனிக்கிழமை, ஒக்டோபர் 09, 2010
பிரதம விருந்தினர்: வைத்திய கலாநிதி Dr.G. சாயுச்சியதேவன்
அமைந்த நிர்வாகம்: தலைவர்: திரு. ரவி. ரவீந்திரன்
செயலாளர்: திருமதி. மலர் குழந்தைவேலு
பொருளாளர்: திரு. சங்கரப்பிள்ளை தவராஜா





With the best compliments from
We Clean Green
Environmentally
Responsible Company
FRAZ ENTERPRISES INC.
Professional Carpet & Upholstery Cleaning Services
Why go green?
* Janitorial Services
* Office Cleaning Specialist
* Carpet Cleaning Commercial or Residential
* Environmentaly responsible
* Clean Green
* Certified and Insured
* 24 Emergency Services at 416-807-5817
* On Time
Afraz Mohammed
Tel:905-799-5817 Fax:905-799-6491
www.frazenterprises.ca
by:gtm365.com, 647-706-6611




With the best compliments from
AADCO
AUTO PARTS
AADCO
AUTO PARTS
Green Parts
Tel:905-789-9313, 1-866-283-PART(7278)
Fax:905-789-9311 e-mail:info@aadco.ca
38 Hansen Rd,S Brampton, ON L6w3H4
by:gtm365.com, 647-706-6611

# வாழ்வை வசந்தமாக்கும் காரை வசந்தம்



காரை வசந்தம் 2010 கலைவிழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஈழத்துச் சிதம்பரம் என்று அழைக்கப்படும் சிறப்புடைய சிவன் ஆலயத்தைக் கொண்டு விளங்குவதும் சமய வளர்ச்சிக்கும் ஒழுக்க விழுப்பத்துக்கும் பெயர் பெற்ற ஊர் காரைநகர். அத்துடன் கல்வித் துறையிலும் எங்கள் பதி சாதனைகள் படைத்துள்ளது.

ஒரு காலத்தில் பெருஞ் சீரோடும் சிறப்போடும் திகழ்ந்த எமது ஊர் இன்று அதன் மக்களிற் பெரும் பகுதியினர் புலம்பெயர்ந்து சென்றதனால் பொலிவிழந்து காணப்படுவது கவலைக்குரியது. ஆயினும் நிலைமை எமது பங்களிப்புகளினால் இப்பொழுது மாறிவருவது மகிழ்ச்சிக்குரியது.

எனினும் இவ்விழா எமது மண்ணின் வரலாற்றை எண்ணிப் பார்க்கவும் தற்போதைய மக்களின் வாழ்க்கைத் தரத்தைச் சீர்தூக்கிப் பார்க்கவும் எவ்விதம் அவர்களுக்கு உதவலாம் என்பது பற்றிச் சிந்திக்கவும் வழிசெய்தல் வேண்டும்.

எமது மண்ணின் மைந்தர்கள் ஒன்றுகூடி மகிழவும் ஒற்றுமை பேணவும் இளஞ் சந்ததியினருடைய கலையார்வங்களை வளர்க்கவும் வழமைபோல இவ்விழா தனது பங்கைச் செய்யும் என்பது எனது நம்பிக்கை.

அங்குள்ள மக்கள் வாழ்வையும் இங்குள்ளவரின் வாழ்வையும் வசந்தமாக்கும் இவ்விழா சிறப்புற நடைபெற எல்லாம் வல்ல காரைநகர் நடராசப் பெருமானை வணங்கி வாழ்த்துகிறேன்.
வணக்கம்.

**கோபால் மயில்வாகனம்**
முன்னாள் தலைவர், காரை கலாச்சார மன்றம்
27.09.2010



With the best compliments from
CIVIC TYPE R
HONDA
FORMULA
HONDA
Formula
Formula
Honda
For your Brand New and
Quality Pre Owned used Vehicles
Shan(Atheesan) Sarvananthan
Tel: 416-754-4555 Ext.2705
Fax: 416-754-9465 Service:416-754-4096
e-mail:atheesan@formulahonda.com
web: www.formulahonda.com
by gtm365.com, 647-706-6611

# காரை வசந்தத்திற்கு மெருகூட்டும் சிறப்பு மலர்



கனடா - காரை கலாச்சாரமன்றம் நடாத்தும் பல நிகழ்ச்சிகளில் காரை வசந்தமும் ஒன்று. இந்த வருடம் அக்டோபர் மாதம் 9ம் திகதி நடக்க இருக்கும பத்தாவது காரை வசந்த விழாவை மெருகூட்டும் விதத்தில் வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கனடா - காரை கலாச்சார மன்றம் காரைநகரிலுள்ள எம் மக்களுக்கு கல்வி மேம்பாடு, சமூக மேம்பாடு ஆகிய துறைகளில் பல உதவிகளைச் செய்து வருகின்றது.

இம் மன்றம் காரைநகரில் ஒரு சக்தியுள்ள, நிலையான அபிவிருத்திச் சபையை அமைப்பதற்கு பாடுபடுவதுடன், அந்தச் சபையூடாக எங்கள் மக்களின் பொருளாதார மேம்பாட்டுக்கும், அங்கேயுள்ள மூலப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கும் உதவி செய்ய பின்னிற்க மாட்டாது என்று நம்புகின்றேன்.

இம் மன்றத்தின் பணிகள் உயர்ந்து ஆலமரம் போல் தழைத்து வளர எல்லாம் வல்ல இறைவன் ஈழத்து சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானை வேண்டி அகவை பத்தில் அடியெடுத்து வைக்கும் காரை வசந்தவிழா சிறப்புற வாழ்த்துகின்றேன்.

நன்றி

**ச. கந்தசாமி**

முன்னாள் பதில் தலைவர்

கனடா-காரை கலாச்சார மன்றம்



Making your travel easy
BATT
Best Air Travel & Tours
Best Air Travel & Tours
Our Experience in the trade will make you travel Successfully!
Call: Sanjay
Tell: 905-453-1441 Cell: 416-857-7025
Fax: 905-453-8942
105 Kennedy Road, #203
Town of India Plaza,
Brampton
எங்கள் சேவை உங்கள் தேவையை பூர்த்தி செய்யும்




பிரம்டன், மிஸிசாகா மக்களுக்காக
பிரம்டன் நகரில்
MAG ART & PICTURE FRAME
ஸ்தாபனம்
அனைத்து விதமான பிரேம் தேவைகள், பூஜைப் பொருட்கள், புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் சமையல் பாத்திரங்கள், அன்பளிப்புப் பொருட்களை இங்கே பெற்றுக் கொள்ளலாம்.
POOJA CENTER
105 Kennedy Road, Unit# 50
Town of India Plaza,
Brampton
416-833-7805
905-458-4660




Airport Limo Canada
GTA Chauffeured Services
சுந்தரேஸன் (Sunny)
Main: 416-594.3400, Tall Free: 1.866.936.8889
Email: airportlimocanada@gmail.com
Web: www.airportlimocanada.com

# ஊர்நினைவை மீட்டி உறவுக்குக் கரம் கொடுக்கும் காரை வசந்தம்



வசந்தகாலம் வந்துவிட்டால் காரை வசந்தம் எப்போது வீசும் என்பதை அறிய ஒவ்வொரு கனடா வாழ் காரைநகர் மக்களும், கலாரசிகர்களும் ஆவலாய் இருப்பதை அவதானிக்கும்போது இக்கலைவிழாவினது பிரபல்யமும், சிறப்பும் உணரக்கூடியதாகவுள்ளது. கலைப்பிரியர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துவிட்ட காரைவசந்தம் 10வது ஆண்டாக நடைபெறுவதையிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன். தமிழ்மொழித் திறன் போட்டிகளில் வெற்றியீட்டிய மற்றும் பங்குபற்றிய சிறார்களுக்கு இவ்விழா அரங்கில் ந்துப் பரிசில்கள் வழங்கும் முறைமையானது விழா ஆரம்பித்த காலம் முதலாக பின்பற்றப்பட்டு வருவதன் மூலம் தமிழ்மொழி ஆர்வத்தை சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தி வருகின்ற கனடா காரை கலாச்சார மன்றத்தின் பணி பாராட்டுக்குரியதாகும். ஊர் நினைவை மீட்டி, உறவுகளுக்குக் உதவுகின்ற அரங்கமாகவும் விளங்கும் காரை வசந்தத்தின் 10வது ஆண்டு விழா மேன்மையுற்று விளங்கவும், கனடா காரை கலாசார மன்றத்தின் பணிகள் உன்னதம் பெறவும் வாழ்த்துகிறேன்.

**மு.வேலாயுதபிள்ளை**

முன்னாள் திட்டமிடல் போஷகர் சபை உறுப்பினரும், இணைப்பாளரும்





# யாழ் தமிழிசைக்கலாலயம்



காரை கலாச்சார மன்றத்தின் 10வது ஆண்டு வசந்த விழா நடாத்தப்படுவதையொட்டி மிகவும் மகிழ்ச்சி. இவ்விழா இனிதே நிறைவுறவும், தொடர்ந்து நீங்கள் எம்மண்ணிற்கு ஆற்றிவரும் அரிய அரும்பணிகள் இனிதே பயனுறவும், எவ்வித இடையூறும் இல்லாமல் விழா இனிது நடைபெறவும் எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

வாழ்த்துக்கள்.

எம்மண்ணின் வாசனையுடன்,
சங்கீதபூஷணம் காரை. ஆ.புண்ணியமூர்த்தி

யாழ் கூட்டுறவு இல்லம், 2584 றக்பி றோட், மிசிசாகா
(289) 232 – 0329

# கலைமகளுக்கு கரம் கூப்பும் காரை வசந்தம்



கலைத்தாய்க்கு கானம்பாடி கன்னித்தமிழுக்கு கவிபாடி கலைமகளுக்கு கரம் கூப்பும் கனடா-காரை கலாச்சார மன்றத்தின் காரை வசந்தம் 2010 விழாவிற்கு என் வாழ்த்துக்கள்.

இவ்வருடம் 10வது வருட வெற்றி விழாவாக நடைபெறுவதையிட்டும் அதில் எனது நர்த்தனாலயம் தொடர்ந்து 7வது வருடமாக பங்களிப்பு செய்வதையிட்டும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

(சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்)

நன்றி! வணக்கம்.


பரதகலா வித்தகர்
**திருமதி சித்ரா தர்மலிங்கம்**
அதிபர்-பாலவிமல நர்த்தனாலயம்

# குமார் ஒருவர் துறைகள் இரண்டு

✱ கல்விச் சேமிப்புத் திட்டம் ✱ காப்புறுதி

RBC Insurance | BMO | Manulife Financial | Industrial Alliance Pacific | Canada Life

## மேலும் பல காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதி



**Kumar**
**Tel: 416-491-4558**
**Cell: 416-566-7924**

கட்டிய பணம் திரும்பப் பெறக்கூடிய ஆயுள் காப்புறுதி **Life Insurance**

- ✱ **Term Life Insurance**
- ✱ **Permanent Life Insurance**

இதுவரை மரணத்தைத் தழுவிய சிலருக்கு ஐந்து நாட்களில் ஆயுள் காப்புறுதித் தொகையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்

**Critical Illness Insurance**

Heart Attack, cancer, stroke or Coronary Artery Bybass Surgery போன்ற 22 வகை நோய்கள் உங்களைப் பீடித்தால் உங்கள் Insurance பணம் முழுவதும் உங்களுக்குக் கிடைக்கிறது. இப்படியான வருத்தங்கள் வரா விடடாலும் நீங்கள் கட்டிய பணம் முழுதும் திரும்பக் கிடைக்கும்.

**Diability Insurance**

வேலை செய்ய முடியாதபடி ஏலாத்தன்மை ஏற்படின் உங்கள் மாத வருமானம் வரக்கூடிய வகையில் Insurance செய்யலாம்.

**Mortgage Insurance**

Mortgage எடுத்த வங்கியில் Mortgage Insurace எடுத்தால் மரணம் ஏற்படும் பட்சத்தில், அந்த நேரத்தில் உங்களுக்கு எவ்வளவு கடன் (Mortgage) இருக்கிறதோ அதை வங்கி கட்டி விடும். ஆனால் எங்கள் Plan, நீங்கள், Mortgage எடுத்த தொகை முழுவதையும் உங்களுக்குச் செலுத்தும். நீங்கள் உங்கள் கடனைச் செலுத்திவிட்டு மிகுதியை வைத்திருக்கலாம் அல்லது முழு Insurance பணத்தையும் வைத்துக்கொண்டு மாதாந்த Mortgage பணத்தைச் செலுத்திக் கொண்டு வரலாம். Mortgage எடுத்த வங்கி மாறினாலும் இத் திட்டத்தில் Insurance தொகையோ அல்லது கட்டுப்பணமோ மாறாது.

## 16 வருடங்களுக்கு மேலாக 7,000க்கும் மேற்பட்டோருக்கு நாம் காப்புறுதி செய்து கொடுத்துள்ளோம்

## வீடுகள், வியாபாரநிலையங்கள் வாங்க விற்க

# Kumar Kathiravelu

Sales Representative

**Cell: 416-566-7924**

E.mail:kumar.k@sympatico.ca



**HomeLife/Landmark Realty Inc., Brokerage**
Independently Owned and Operated

**Scarborough Office:**
5200 Finch Ave.E., Suite 206
Toronto, ON. M1S 4Z4
TEL: 416 293 5093
FAX: 419 293 5237

**North York Office:**
75 The Donway West, Suite 708
Toronto, ON. M3C 2E9
TEL: 416 386 1200
FAX: 419 386 1500

REALTOR · MLS MULTIPLE LISTING SERVICE

## அழையுங்கள்: குமார் 416-491-4558

**Cell: 416-566-7924 E-Mail: kumar.k@sympatico.ca**



# அம்மா

## TAKE OUT & CATERING AMMA'S



"அம்மா ரேக்அவுட் & கேற்றரிங் தரும்

# வாராந்த ஸ்பெஷல்

**சனிக்கிழமை:** தென்இந்திய பாணியிலான மட்டன், சிக்கன், புரியானி
சீன பாணியிலான **Fried Rice**
தாயகக் கூழ் – $ 2.99
**$5.99**

**ஞாயிற்றுக்கிழமை:** தென்இந்திய பாணியிலான மட்டன், சிக்கன், புரியானி
சீன பாணியிலான **Fried Rice**
தாயகக் கூழ் – $ 2.99
**$5.99**



**திங்கட்கிழமை:** ரொட்டி அன் ரோஸ்ட்பீவ் (**Beef**) இஞ்சி சம்பல்
காம்போ **With Pop**
**$5.99**

**செவ்வாய்க்கிழமை:** கொத்து ரொட்டி காம்போ **With Pop**
**$5.99**



**புதன்கிழமை:** புட்டுக்கம்போ – முட்டைப்பொரியல் & நெத்தலிப்பொரியல், இஞ்சிசம்பல்
**with** மட்டன் கறி / சிக்கன் கறி /இறால் கறி / கணவாய் கறி
**$5.99**

**வியாழக்கிழமை:** இடியப்பபிரட்டல் **with** மாசிசம்பல்
இறால் கறி / கணவாய் கறி
**$5.99**

**வெள்ளிக்கிழமை:**
உப்புமா $ 2.50
தோசை $ 3.00
இட்டலி $ 3.00

மட்ராஸ் சாம்பார் சுடச்சுட கிடைக்கும்



**அம்மா இரண்டு இடங்களில்
தனது சேவையை விஸ்தரித்துள்ளது**

**3351 Markham Road, Suite # A126
(Markham & Steels)
Scarborough, ON M1X 0A6**

**723 Kennedy Road
(Kennedy & Eglinton)
Scarborough Ont. M1K 2C6**

காரை வசந்தம் 2010 சிறப்புற வாழ்த்துக்கள்

*With the best compliments*

*from*

சட்டம் சம்பந்தமான சகல ஆலோசனைகளுக்கும்

தொடர்பு கொள்ளவும்

**The name to seek, when you are in legal need.**

# THE LAW OFFICE OF

**Gary** Anandasangaree

***10 Milner Business Court, Suite 210***

***Toronto, Ontario M1B 3C6***

***416.321.1100***

சப்தஸ்வரா இசைக்கலைக் கூடம்-ரொரன்ரோ-Sabtheswara Fine Arts of Toronto



உ

தமிழ்த் தாய் தாழ் வணக்கம் !

"சங்கத் தமிழமுதின் சந்தப் பொருளுணர்ந்து சிறப்புரைக்கும் பற்பலரும்
விந்தை மகிழ்ந்ததன் சீருயர்வதனைத் தெளிவுறச் சித்தமுரைப்பர்
பொங்கு தமிழ்க்கலை காரை முதல் பார் திக்கும் தழைத்தோங்க
பங்கமின்றிக் கனடா காரை கலாச்சார மன்று என்றும் தொண்டாற்றி
தந்திடுக பன்னூறு காரை வசந்தங்களென வாழ்த்திடுவோம் வாழியவே"

தாம் பிறந்த மண்ணையும் மற்றோர் யாவரின் மனங்களையும் நேசிக்கும் யாவருக்கும் சப்தஸ்வரா இசைக் கலையகம் சார்பில் எம் இனிய வந்தனங்கள். கனடா, ரொரன்ரோ நகரில் வருடந்தோறும் விழாவமைத்து எம்மக்கள் மகிழ்வுறும் வண்ணம் கலை நிகழ்வளிக்கும் கனடா காரை கலாச்சார மன்றத்தின் "காரை வசந்தம்" நிகழ்வு இவ்வருடம் பத்தாவது அகவையாக வெற்றிக்கல் பதித்து அருஞ் சாதனை படைத்திருகின்றது. ஊக்கமும் உற்சாகமும் ஆற்றலும் மிக்க மன்ற உறுப்பினர் இனைந்து எம்மக்கள் மனம் மகிழும் வண்ணம் சிறப்பான நிகழ்ச்சிகளை வருடந்தோறும் வழங்கி வருகின்ற காரை கலாச்சார மன்றம் இம்முறையும் மிகச் சிறப்பானதும் கலையம்சம் ததும்புகின்ற வித்தியாசமான நிகழ்வுகளை வழங்கி மேலும் பல பெருமைகளை சேர்த்திருக்கின்றது. பல் வேறு இடர்களையும் தடைகளையும் களைந்து பிரயாசையுடனும் உத்வேகத்துடனும் இயங்கிவருகின்ற கனடா காரை கலாச்சார மன்றம் "செய்வன திறம்படச் செய்" என்னும் மெய்க் கூற்றிற்கு இணங்க ஆண்டு தோறும் பல்வேறு நிகழ்வுகளை கனடா மண்ணில் நடாத்தி காரைநகரின் அபிவிருத்திக் கும் முன்னேற்றத்திற்கும் அரும்பாடு பட்டு தொண்டாற்றுகின்றது என்றால் மிகையேதுமில்லை. கனடா காரை கலாச்சார மன்றத்தின் இவ்வரிய சேவைகளும் தொண்டுகளும் மேலும் பல்லாண்டு காலங்கள் தடைகளின்றித் தொடரவும், என்றும் காரைவசந்தம் நிகழ்வுகள் புதுப் பொலிவுடனும் வெற்றியுடனும் மிளிர்கவென எல்லாம் வல்ல இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம்.

அன்புடன்
சப்தஸ்வரா கி. உதயகுமார்

Sabtheswara
Fine Arts of Toronto

# Mississauga - Brampton Canada

Sri Katpaga Vinayagar Hindu Temple



# மிஸிஸாகா – பிரம்ரன் கனடா

அருள்மிகு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயம்

Sri Katpaga Vinayagar Hindu Temple Brampton Canada.
200 Advance Blvd. # 21 Brampton Ont. L6T 4V4
TP: 905458 9701
Web: www. sri katpaga vinayagar.com

# பத்தாவது ஆண்டில் பாதம் பதிக்கும் காரை வசந்தத்தின் பிறப்பு

கனக.சிவகுமாரன்

1999 ஆம் ஆண்டு காரைநகர் மக்களின் ஒன்றுகூடல் Morningside பூங்காவில் நடைபெறுகிறது. இவ் ஒன்றுகூடல் நிறைவுற்ற மாலைவேளையில் முன்னதாக அறிவிக்கப்பட்டவாறு கனடா-காரை கலாச்சார மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இடம்பெறுகின்றது. தலைவராக திரு. சபாபதி சபாநடேசன் அவர்களும் செயலாளராக நானும் பொருளாளராக திரு. சிற்றம்பலம் சச்சிதானந்தனும் உள்ளடக்கப்பட்ட நிர்வாகசபை ஒன்று தெரிவாகிறது. தெரிவான புதிய நிர்வாகம் தலைவர் திரு. சபாநடேசன் அவர்களுடைய இல்லத்தில் தனது முதலாவது நிர்வாகசபைக் கூட்டத்தை நடாத்துகின்றது. 2000 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்படக்கூடிய வேலைத்திட்டங்கள் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன. ஓர் கலாச்சார விழா மன்றத்தின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டமாக அமைய வேண்டும் என்ற தீர்மானம் இக்கூட்டத்தில் எடுக்கப்படுகிறது. இத்தீர்மானத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் பணியில் நிர்வாக உறுப்பினர்கள் சுறுசுறுப்புடனும் ஆர்வத்துடனும் ஈடுபட ஆரம்பித்தனர். இத்தகைய ஒரு கலைவிழாவினை பெரிய அளவில் நடாத்துவதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்பட்ட நிலையில் மன்றத்தின் நிதிக்கையிருப்பு பூச்சியமாகவிருந்தது. அத்துடன் ஒரு சில நிர்வாக உறுப்பினர்களைத்தவிர மன்றச்செயற்பாடுகளில் தம்மை இணைத்துக்கொண்டு செயற்படக்கூடிய அளவிற்கு இப்போதுள்ளது போல அங்கத்துவ பலம் கொண்டிராத மன்றமாக அச்சந்தர்ப்பத்தில் மன்றம் அமைந்திருந்தது ஆயினும் ஓர் பயனுள்ள நல்ல நிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்றவகையில் காரைநகர் மக்களினதும், நலன்விரும்பிகளினதும் ஆதரவினைப்பெற்று வெற்றிகரமாக செயற்படுத்தமுடியும் என்ற நம்பிக்கையுடன் களம் இறங்கினோம்.

முதலில் யாரிடம் ஆதரவு கேட்டுச்செல்வது என்ற சிந்தனையில் ஈடுபட்டசமயம் கனேடிய தமிழ் சமூகத்தினதும், காரைநகர் மக்களினதும் நன்மதிப்பையும். அன்பையும் பெற்றவர்களும், பொதுப்பணி ஆர்வம் உடையவர்களுமான இருவர் எம்மனக்கண்முன் தோன்றினர். ஒருவர் காசிப்பிள்ளை சக புத்திரர்கள் நிறுவன அதிபர் திரு. முருகேசு காசிப்பிள்ளை அவர்கள். மற்றயவர் பிரபல குழந்தை வைத்தியநிபுணர் டாக்டர் வி. விஜயரத்தினம் அவர்கள். திரு. காசிப்பிள்ளை அவர்களை அணுகி எமது நோக்கத்தை தெரிவித்தவுடனேயே எவ்விததயக்கமுமின்றி விழா மண்டபச் செலவு முழுவதையும் தாமே ஏற்றுக்கொள்ள முன்வந்தார். அதேபோன்று டாக்டர் விஜயரத்தினம் அவர்களும் காவல்துறை உத்தியோகத்தர்களது பாதுகாப்புச் செலவுகளை ஏற்றுக்கொள்வதாக பெருமனத்துடன் முன்வந்திருந்தார். இவர்களிருவரதும் ஆதரவு எமக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் அளித்தது. கூடிய உத்வேகத்துடன் செயற்படத் தூண்டியது.

நடாத்தவிருக்கின்ற கலைவிழாவிற்கு பொருத்தமானதும், கவர்ச்சியானதுமான ஒரு பெயரினைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டபோது, எமது ஊரின் பெயரான காரை என்பதுவும் அனைவருக்கும் பொலிவையும், உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் தருகின்றதாகிய வசந்தம் என்பதுவும் இணைந்து வருகின்ற காரை வசந்தம் என்கின்ற பெயர் அனைவராலும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ்விழாவையொட்டி சிறப்பு மலரும் வெளியிடுவதெனத் தீர்மானித்தபொழுது இம்மலர் வெளியீட்டிற்கு நனோ மைக்ரோ கொம்பியூட்டர் நிறுவன அதிபர் திரு. நாகேந்திரராசா குறிப்பிடத்தக்களவு ஆதரவு வழங்கியிருந்தார்.

அத்துடன் மலரின் கணனி அச்சுப்பதிவு, அதன் அமைப்பு ஆகிய அனைத்தையும் திரு. மாணிக்கம் கனகசபாபதியும், முகப்பு வர்ண அட்டையை திரு. பா. ஞானபண்டிதனும் இனாமாகவே அமைத்துத்தர முன்வந்து ஆதரவளித்தனர். விழா நிகழ்வுகளை வீடியோ படத்தில் வரலாற்றுப் பதிவாக அமைத்துத்தர கே.கே.எலெக்ரோனிக்ஸ் திரு. பொன்னம்பலம் குழந்தைவேலு முன்வந்திருந்தார்.

காரை வசந்தம் 2000இன் நிகழ்ச்சி ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டு, அது நடைபெறும் இடம் Winston Churchill Collegiate Institute கல்லூரிக் கலை அரங்கமும், நடைபெறும் நாள் மே மாதம் 06ம் திகதியும் தெரிவுசெய்யப்பட்டு அனைத்து தமிழ் ஊடகங்கள் வாயிலாகவும் விளம்பரம் செய்யப்படுகின்றது. இவ்விழாவிற்கான பிரதம விருந்தினராக சமூகசிந்தனைப் பாரம்பரியத்தில் வந்த பிரபல ஆசிரியர் அமரர்

க. சிற்றம்பலம் அவர்களின் புதல்வனும் அமெரிக்காவில் பொறியியலாளராகப் பணிபுரிபவருமான திரு. சி. திருஞானசம்பந்தன் அவர்களும், சிறப்பு விருந்தினராக திரு. முருகேசு காசிப்பிள்ளை அவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

'காரை வசந்தம் 2000' வெற்றிவிழாவாக அமைந்து கனடா-காரை கலாச்சார மன்ற வரலாற்றில் 2000ஆம் ஆண்டு மே மாதம் 6ம் திகதி முக்கியமான நாளாகப் பதிவு செய்யப்பட்டுவிட்டது. காரை வசந்தம் படிப்படியாக வளர்ச்சி பெற்று ரொறன்ரோ நகரில் நடைபெறும் தரமான முன்னணிக் கலைவிழாக்களுள் ஒன்றாக அமையப்பெற்று இன்று வெற்றிகரமாக பத்தாவது ஆண்டில் பாதம் பதிக்கிறது என்றால் அதற்குக் காரணமான கடந்தகால நிர்வாகசபை உறுப்பினர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்பதுடன் காரைநகர் மக்கள், கலாரசிகர்கள், கலைஞர்கள், வர்த்தக உள்ளங்கள், தமிழ் ஊடகங்கள் ஆகிய அனைவரும் நன்றிக்குரியவர்களாக விளங்குகின்றனர்.

மேன்மையுற்று விளங்கிய காரை வசந்தம் - 2000இன் சிறப்புகளை கனடாவிலிருந்து வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகைகள் வெகுவாகப் பாராட்டி விமர்சனங்கள் வெளியிட்டிருந்தன. உதயன், தமிழர் செந்தாமரை ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தவற்றை அப்படியே தந்து முதலாவது விழாவின் நினைவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்..

## தமிழர் செந்தாமரையில் வெளிவந்த விமர்சனம்

காரை வசந்தம் 2000 - திறனாய்வு இணுவையூர் சிவா. முருகையா

குளிர் காலம் முடிவடைந்து நல்ல இதமான காலநிலையில், கனடா-காரை கலாச்சார மன்றம் வழங்கிய 'காரை வசந்தம்' 2000 கடந்த சனிக்கிழமை 6.05.2000 அன்று, மாலை 5.30-11.00 வரை லோரன்ஸ் வீதியில், கெனடி சந்திப்புக்குகருகில் அமைந்துள்ள வின்சன்ட் சேர்ச்சில் கல்லூரி கலையரங்கில் சிறப்பான பல அம்சங்களைத் தாங்கி நடைபெற்றது.

இதில் மிகச் சிறப்பான அம்சங்களாக மூன்று விடயங்கள் இடம் பெற்றன. முதலாவது சிறப்பம்சம் தற்போதைய மேடைகளில் அருகி வருகின்ற ஒரு நிகழ்வான சங்கீதக் கச்சேரி 'காரை வசந்தம்' மேடையிலே சங்கீதபூசணம் ஆ.புண்ணியமூர்த்தி அவர்களால் நிகழ்த்தப்பட்டது. இதில் தனித்து தமிழிசைப் பாடல்களை மட்டுமே பாடியதானது, வடமொழியில் பாடினால்தான் கௌரவம் என நினைப்பவர்களுக்கு மத்தியில் ஒரு துணிகரமான, பாராட்டத்தக்க அம்சமாகும்.

இந்த இசையரங்கில் தமிழிசைப் பாடல் ஒன்றுக்கு ஆலாபனை, சுரம் என்பனவும் பாடியிருந்தால் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும். இவ் இசையரங்கில் மிருதங்கம் வாசித்த கலைஞர் திரு. செல்வநாயகம் சண்முகலிங்கம் அவர்கள் ஈழத்தில் திரு. சிதம்பரநாதன் அவர்கள், திரு.கண்ணதாசன் அவர்கள் போன்றோரின் இசையரங்கு பார்த்த உணர்வை ஏற்படுத்தியிருந்தார். மேலும் இவ் இசையரங்கில் வயலின் இசையை ஆர்.பாலேஸ்வரனும் தவிலிசையை தவில் சுடரொளி A. மனோகரன் அவர்களும் வழங்கியிருந்தார்கள்.

அடுத்த முக்கிய சிறப்பம்சம் சிறுவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் முழுப் பங்களிப்பில் திருமதி. தனலட்சுமி சபாநடேசன் அவர்களின் நெறியாள்கையில் சுவர்ணா ஆனந்தராஜா, மதுரா ஆனந்தராஜா, டெலி ராஜரட்ணம், பூரம்யா அமுதன், ரகுதரன் சிவபாலன், அபிராமி சிவபாலன், கேசவன் முத்துராஜா, நித்திய கல்யாணி பொன்னுத்துரை, ரங்கன் தியாகலிங்கம், சிவப்பிரியா சிவலிங்கம், ஜனனி தனபாலசிங்கம், சிந்துஜா இந்திரசித்து, சிவானி சிறீகுமாரன், துவாரகன் சோதிலிங்கம், பவித்திரா இரத்தினேஸ்வரன் ஆகியோர் வழங்கிய 'தமிழன்னை தந்த தவப்புதல்வர்கள்' இடம்பெற்றது.

அடுத்த மிக முக்கிய சிறப்பு அம்சமாக கனேடியத் தமிழ்க்கலைஞர் கழகம் வழங்கிய சமூக நாடகமான 'மடிப்பிச்சை' மலர்மணாளனின் கதை, வசனம், நெறியாள்கையில் அரங்கேறியது. இதில் எஸ்.ரி. செந்தில்நாதன், துஷி ஞானப்பிரகாசம், திருமதி சோதிமலர் பரஞ்சோதி, வீ.சர்மிளா ஆகியோர் பங்கு கொண்டிருந்தனர். இந்த

நாடகம், புலம்பெயர்ந்த, ஆனால் மண்பற்றுள்ள ஒரு பெண்ணின் கதையை மையமாகக் கொண்டிருந்தது. நாடகம் நிறைவடைந்த போது அந்தப் பெண் தனது மடிச்சேலையை ஏந்தி மடிப்பிச்சையாக ஈழத்தமிழ் மக்களுக்கு நிதி கேட்டபோது 600டொலர்களுக்கு மேற்பட்ட நிதி சேர்ந்தது.

மேலும் 'காரை வசந்தம' மேடையில் நடனநிகழ்வுகளாக சிறுமி நிர்த்திகா சித்திரவடிவேல் முகக்குறிப்புத் தப்பாமல் வழங்கிய 'காளி கௌத்தம்', நடனமும் நாட்டிய சேத்திராலய அதிபர் சுரேஸ்வரி தம்பிப்பிள்ளை அவர்களின் மாணவி சுபாசினி நடராஜா அவர்கள், நர்த்தனாலய அதிபர் கீதா யோகேந்திரா அவர்களின் மாணவி சுபாசினி கருணாகரன் ஆகியோர் தனித்தனியாக வழங்கிய நடனங்களும் இடம்பெற்றன. திரு. கு பரமேஸ்வரன், திரு. எஸ்.எ ன்.தனபாலன், திருமதி. கலாநிதி குலமோகன், திருமதி. கோதை அமுதன் ஆகியோர் பங்குபற்றிய பட்டிமன்றமான 'புலம் பெயர்ந்த மண்ணில் பல்தேசிய கலாச்சாரமா?' என்ற பட்டிமன்றம் இடம் பெற்றது. இதற்குத் தீர்ப்பாக இரண்டையும் மதித்து நடப்பதே வாழ்க்கைக்கு சிறந்த வழி எனத் தலைமை வகித்த சட்டத்தரணி த. ஸ்ரீபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் இந்த நிகழ்ச்சியில் பண்ணிசை, பேச்சுப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கலும் நடைபெற்றது. நிகழ்ச்சியை திரு. பா. ஞானபண்டிதன் அவர்கள் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி இரவு 11மணியளவில் இனிதே நிறைவுற்றது.

## உதயனில் வெளிவந்த விமர்சனம்

**காரை வசந்தம் 2000 - விமர்சனம் - அ. சிவானந்தநாதன்**

ஈழத்திருநாட்டின் வடக்கே சிரசு போன்று இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேர் சயில் இருப்பதுதான் காரைநகர். இது தில்லை பெருமானின் திருவடித்தாள் பதிந்த புண்ணிய பூமியாகும். இதன் டைமையை மேன்மேலும் எடுத்துக் காட்டும் வண்ணம் விளங்குவதுதான் மே மாதம் ஆறாம் திகதி 2000ம் ஆண்டு புலம்பெயர்ந்து வாழும் காரை மக்களால் கனடாவில் வின்சன் சேர்ச்சில் கல்லூரி மண்டபத்தில் நடாத்தப்பட்ட 'காரை வசந்தம் 2000' என்னும் கலை நிகழ்ச்சியாகும். அன்று அம்மண்டபத்தில் நிறைந்த மக்களின் வருகை அவர்கள் தம் சொந்த மண்ணில் கொண்டுள்ள இறுக்கமான பற்றினை எடுத்துக்காட்டியது பெருமைக்குரியது.

இவ்விழாவில் சிறுவர்களுக்கான நிகழ்சிதான் 'தமிழன்னை தந்த தவப்புதல்வர்கள்' என்ற நாடகம், கடவுள் வணக்கமாகவும் நம் தமிழுக்கு உயிரூட்டிய அறிஞர்களினதும் பெரியோர்களினதும் சிறப்பை சிறுவர்களின் நடிப்பின் மூலமாக எடுத்துக் காட்டிய ஒப்பற்ற பெருமை இதன் தயாரிப்பாளரான திருமதி தனலட்சுமி சபாநடேசன் அவர்களுக்கே உரியதாகும்.

சங்கீத பூஷணம் வித்துவான் அன்பர் ஆ.புண்ணியமூர்த்தி அவர்களின் இசைகானம் திரண்டு இருந்த மக்களின் மனத்தைப் கவர்ந்திருக்கும் என்பதில் எதுவிதமான ஐயமுமில்லை. செல்வி சுபாஷினி நடராசா, செல்வி சுபாஷினி கருணாகரன் என்னும் செல்விகள் தம் பாடல்களுக்கமைய அபிநய பாவனையோடு சிறப்பாக ஆடி மக்கள் உள்ளத்தைக் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது. 'மார்கழித் திங்களல்லவா' என்ற பாடல் காரை மக்களின் உள்ளத்திலும் சிந்தனையிலும் என்றென்றும் ஈழத்துச் சிதம்பரத்தையும் மார்கழி திருவெம்பாவையையும் நினைக்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கலை விழாவில் நடைபெற்ற பட்டிமன்றத்தில் புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் தேசிய கலாச்சாரமா? பல்தேசிய கலாச்சாரமா? என்ற விடயத்தை இதில் பங்குகொண்ட பேச்சாளர்கள் பழமையையும், புதுமையையும் அந்நியர் ஆட்சியையும் கொண்டு விளங்கிய தன்மை பாராட்டிற்குரியதாகும். இதில் கலந்து கொண்ட திரு. கு. பரமேஸ்வரன் (ஈழநாடு ஆசிரியர்), திரு. எஸ். என். தனபாலன;(B.A), திருமதி கலாநிதி குலமோகன;(B.A), ஆசிரியை திருமதி கோதை அமுதன் போன்றவர்கள் தம் பேச்சுத்திறமையினால் சபையோர்களின் பாராட்டிற்குரியவர்களாக விளங்கினார்கள் என்பதில் ஐயம் இல்லை. சட்டத்தரணி தம்பையா சிறீபதி அவர்கள் இதற்கு தலைமை வகித்தார்.

கனடா - காரை கலாச்சாரர மன்றத்தின் தலைவர் திரு.சபாபதி சபாநடேசன் அவர்கள் தமது மன்றத்தின் வளர்ச்சியைப்பற்றி குறிப்பிட்டார். இம்மன்றம் 1988ம் ஆண்டு ஈழத்துச் சிதம்பரத் திருத்தொண்டர் சபையாக முதலில் விளங்கியது என்றும் குறிப்பிட்டார். இக்கலை விழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்தவர் திரு.திருமதி.திருஞானசம்பந்தன் அவர்கள். பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பட்டதாரியான

திருஞானசம்பந்தன் அவர்கள் தனது மென்மையான குரலில் தமக்கு வாய்ப்பினைத் தந்த மன்றத்திற்கு பெருமகிழ்ச்சியோடு அன்பைத் தெரிவித்துக் கொண்டார்.

காரை மக்கள் சமயம், மொழி, கலாச்சாரம் என்ற மூன்றினையும் பேணிக்காப்பதில் முன்நிற்பவர்கள் என்பதை யான் அறிவேன். இவ்வுண்மையை புலம்பெயர்ந்து வாழும் நாட்டிலும் இக்கொள்கை மனவுறுதி கொண்டு பேணுவதை எண்ணும் பொழுது என் அகம் குளிர்கின்றது என்று குறிப்பிட்டார். இவ்வுண்மையை வெளிப்படுத்துவதாக காரை வசந்தம் விழா அமைந்திருப்பதை யாவரும் அறிவார்கள். தான் பிறந்த மண்ணில் கொண்டுள்ள அளவற்ற பக்தியை உருக்கமான முறையில் 'எந்தையுந் தாயு மகிழ்ந்து குலாவியிருந்தது மிந்நாடே, அதன் முந்தையராயிர மாண்டுகள் வாழ்ந்து முடிந்தது மிந்நாடே, அவர் சிந்தையிலாயிர மெண்ணம் வளர்ந்து சிறந்தது மிந்நாடே' என்று பாரதியார் பாடிய பாடல் வழியில் எடுத்துக்கூறி வெளிக்காட்டியுள்ளார்கள்.

மதிப்பிற்குரிய இளையபாரதியின் புதுமைப் படைப்பான 'பனிக்காற்றில்' என்ற நிகழ்ச்சி நடைபெறாது இருந்த போதிலும் அவர் இக்கலை விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை இங்கு குழுமியிருந்த மக்களின் உள்ளத்தில் அளவற்ற மகிழ்ச்சியை கொடுத்தது என்பது அவர்களின் கரகோஷத்தில் இருந்து காணக்கூடியதாக இருந்தது.

காரை மக்கள் தம் சமயம், மொழி, கலாச்சாரம் என்பதை என்றும் போற்றிக்காக்க வேண்டும் என்பதில் ஆக்க பூர்வமான பணிகளை செய்வதில் முன்நின்று உதவிகளை நல்கும் அன்பர் திரு.மு.காசிப்பிள்ளை அவர்களை யாம் என்றும் மறக்கமுடியாது. இம்மன்றத்தின் எண்ணக் கருத்தில் ஆதரவு நல்குவதில் வைத்திய கலாநிதி வி.விஜயரத்தினம் முன்னின்று ஒத்துழைப்பு நல்குவது என்றும் பாராட்டத்தக்க செயலாகும். இம்மன்றத்தின் கலை நிகழ்ச்சிகள் யாவும் சிறப்பாக நடைபெறுவதற்கு நிர்வாக அங்கத்தவர்களின் ஒற்றுமையான பணியும், ஒத்துழைப்பும் முதற்காரணம். இவர்களின் அயராத ஒத்துழைப்பின் பயனாக வெளியிடப்பட்டுள்ள 'காரை வசந்தம் 2000' என்னும் மலர் மிகச்சிறப்புடையதாகும். காரை மக்களின் மகிமையையும் பெருமையையும் செயற்கரிய செயல்களையும் எடுத்துக் காட்டும் வகையில் ஆக்கபூர்வமான கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. அடுத்த ஆண்டில் இம்மலர் விரிவான பற்பல கட்டுரைகளை கொண்டு விளங்கும் என்பதில் ஐயமில்லை.

## காரையில் வசந்தம் வீசவைக்க
## கனடாவில் காரை வசந்தம்

காரை மண்ணில் நிஜவசந்தம் வீச வைக்க
கனடாவின் காரை கலாச்சார மன்றம்
'காரை வசந்தம்' என்ற கலை நிகழ்வை
கவின் ததும்பச் செயவுளது என்ற செய்தி
தேனாகப் பாய்கிறது! காரை மக்கள்
சிந்தையெல்லாம் குளிர்கிறது! இதனை வாழ்த்தி
பத்தாம் ஆண்டுவிழா சிறக்கப் பாடி
அகம்மகிழ்ந்து ஆசிகூறி வாழ்த்திடுது!

தாய்மடியின் பழையநினைவெல்லாம் நெஞ்சில்
தாங்கித் தாய் மண் மறவா வெளியூர்ச் சேய்கள்
தாயினது நோய்மாற்றி, துன்பம் போக்கி,
தனிச்சிறப்போ டவள்நிமிர வேண்டும் என்று
வாழ்த்துவதோ டல்லாமல் அவளைக் காக்க
வழங்குகிறார் திரவியங்கள், செல்வம் கோடி.
நூறு நூறு பணிபுரிவார்: நோன்பிருந்து
அவள்வெல்ல நேர்ந்தின்று விழா எடுத்தார்!

கனடாவின் காரை கலாச்சார மன்றம்
காரைவசந்தத் தென்றல் வீச வைத்து,
கனமான விழா மலரை மலரச் செய்து.
காரைமண்ணுக் குழைப்பவரை கௌரவித்து,
பணிபலதை முன்னெடுக்கத் திட்ட மிட்டு,
பலர்கையைக் கோர்த்திருக்கும் இந்த வேளை....
மனது மொழி மெய்யால்யான் வாழ்த்துகின்றேன்!
விழா சிறக்க இறையருளை இறைஞ்சுகின்றேன்!

**திரு. த.ஜெயசீலன்**
உதவி அரசாங்க அதிபர்
காரைநகர்

# அரங்கேற்றம் கண்டு வளர்ந்து வரும் காரைக் கலைஞர்கள்

புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தமது பாரம்பரியக் கலை, பண்பாட்டு அடையாளங்கபை் பேணிக் காத்து வளர்த்து வருவதில் ஈழத்தமிழர்கள் மிக்க ஆர்வத்தோடு இருப்பதை புலம்பெயர் நாடுகளில் நாம் காணக்கூடியதாகவுள்ளது. அந்த வகையில் காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்டு கனடாவில் வாழ்ந்து வரும் எம்மவர்கள் சற்றும் சளைத்தவர்கள் இல்லை என்பதை கனடாவில் முறைப்படி கலை பயின்று அரங்கேற்றம் கண்டோர் நிரூபித்து வருகின்றனர். வாய்ப்பாட்டு, மிருதங்கம், வயலின், நடனம் ஆகிய கலைகளை கனடாவில் கற்பித்து வரும் சிறந்த ஆசிரியர்களிடம் முறைப்படி பயின்று அரங்கேற்றம் கண்டு வளர்ந்து வரும் எமது இளம் கலைஞர்களைப் பாராட்டுவதோடு அவர்களின் கலைத்துறை பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்துவதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

### மிருதங்கம்

**செல்வன். மயூரன் மனோகரன்**



Dr. கௌரிசங்கர் பாலச்சந்திரன் அவர்களின் மாணவனும், காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த மனோகரன்-நாகராணி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன். மயூரன் மனோகரன் அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் 24-03-2001 அன்று ரொறன்ரோ கனடாவில் அமைந்துள்ள மின்கிலர் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில். திருச்சி ஞச.சங்கரன் அவர்கள் பிரதம விருந்தினாராகவும் திருவாரூர் ஸ்ரீ.பக்தவத்சலம் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். இசைத்துறையில் பல விருதுகளைப் பெற்றுள்ள செல்வன். மயூரன் அவர்களுக்கு ஒன்ராரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியெய்தியமைக்காக 'இசைக் கலாபாரதி' என்ற பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மயூரன் பல இந்திய முன்னணி இசைக் கலைஞர்களுடன் இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார். இவர் 'ட்றம்' வாத்தியக் கருவியை இசைப்பதிலும் வல்லவர் ஆவார். ரொறன்ரோவில் மிருதங்கம் பயிற்றுவித்து வருவதுடன் பரீட்சகராகவும் பணியாற்றுகிறார்.

**செல்வன். செந்தூரன் தர்மராஜா**



Dr. C.G பாலச்சந்திரன் அவர்களின் மாணவனும், காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த தர்மராஜா-மங்கையற்கரசி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன். செந்தூரன் தர்மராஜா அவர்களின் மிருதங்க அரங்கேற்றம் 01-06-2002 அன்று ஸ்காபுரோ, கனடாவில் அமைந்துள்ள சேர்.ஜோன் மக்டொனால்ட் கல்லூரிக் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் கலைமாமணி ஸ்ரீ. உன்னிக்கிருஷ்ணன் அவர்கள் பிரதம விருந்தினாராகக் கலந்து சிறப்பித்திருந்தார். செல்வன். செந்தூரன் அவர்கள் அமெரிக்காவில் உள்ள கலை, சமூக அமைப்புகளினால் நடத்தப்படும் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றி பல விருதுளைப் பெற்றுள்ளார். அவற்றுள் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தினால் வழங்கப்பட்ட 'ஈழ மிருதங்க இளவல்' என்ற பட்டம் குறிப்பிடத்தக்கது. செந்தூரன் பல இந்திய, வட அமெரிக்க புகழ்பெற்ற இசைக் கலைஞர்களுடன் இணைந்து இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருகின்றார்.

**செல்வன். பார்த்திபன் சிவராஜா**

ஸ்ரீ.கிரிதரன் சச்சிதானந்தன் அவர்களின் மாணவனும், காரைநகர் ஆயிலியைச் சேர்ந்த சிவராஜா-விக்கினேஸ்வரி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன். பார்த்திபன் சிவராஜாவின் மிருதங்க அரங்கேற்றம் 20-08-2006 அன்று ரொறன்ரோ, கனடாவில் அமைந்துள்ள Armenian Youth Centre கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் திருச்சி Dr.சங்கரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் காரைக்குடி ஸ்ரீ.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிறப்புவிருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். பார்த்திபன் வளர்ந்துவரும் ஒரு இளம் மிருதங்கக் கலைஞர் ஆவார்.

### செல்வன். சிவசுதன் சிவனேசராஜா



ஸ்ரீ.செல்வநாயகம் சண்முகலிங்கம் அவர்களின் மாணவனும், காரைநகர் களபூமியைச் சேர்ந்த சிவனேசராஜா-கௌரி தம்பதிகளின் புதல்வனுமாகிய செல்வன். சிவசுதன் சிவனேசராஜாவின் மிருதங்க அரங்கேற்றம் 17-07-2010 அன்று சீனக் கலாசார மன்றக் கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் நெய்வேலி மிருதங்க வித்துவான் ஸ்ரீ.நாராயணன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார். செல்வன். சிவசுதன் ஒன்ராரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஆறாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளதுடன் பியானோ வாத்தியத்தையும் ஆர்வத்துடன் பயின்று வருகின்றார்.

## வயலின்

### திருமதி. சத்தியசொரூபி தீபன்



சங்கீதவித்துவான் திருமதி. தனதேவி மித்திரதேவா அவர்களின் மாணவியும், காரைநகர் சிவன் கோவிலடியைச் சேர்ந்த கனகசபாபதி-மனோரஞ்சனா தம்பதிகளின் புதல்வியுமாகிய திருமதி. சத்தியசொரூபி தீபன் அவர்களின் வயலின் அரங்கேற்றம் 16-08-2008 அன்று ரொறன்ரோ, கனடாவில் அமைந்துள்ள Armenian Youth Centre கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் கலாநிதி. T.N கிருஷ்ணன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சட்டத்தரணி தம்பையா ஸ்ரீபதி, சங்கீதபூசணம் பொன் சுவுந்தரலிங்கம் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். திருமதி. சத்தியசொரூபி அவர்களுக்கு ஒன்ராரியோ தமிழ் இசைக் கலாமன்றத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையில் சித்தியெய்தியமைக்காக (முதற் தரத்தில) 'இசைக் கலாபாரதி' என்ற பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இவர் பல முன்னணி இசைக் கலைஞர்களுடன் வட அமெரிக்காவில் இசை நிகழ்ச்சிகளை வழங்கி வருவதுடன் ரொறன்ரோவில் வயலின் வகுப்புகளை நடத்தி வருகின்றார்.

## வாய்ப்பாட்டு

### செல்வி. சுவர்ணா ஆனந்தராஜா, செல்வி. மதுரா ஆனந்தராஜா



ஞானாமிர்த இசைக் கல்லூரி இயக்குநர், திருமதி. ஜெயராணி சிவபாலன் அவர்களின் மாணவிகளும், காரைநகர், வலந்தலையைச் சேர்ந்த ஆனந்தராஜா-வசந்தகுமாரி தம்பதிகளின் புதல்வியருமாகிய செல்வி. சுவர்ணா ஆனந்தராஜா, செல்வி. மதுரா ஆனந்தராஜா ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் 10-05-2008 அன்று கனடா, ஸ்காபுரோ, சென்ரானியல் கல்லூரிக் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் திரு.தம்பையா ஸ்ரீபதி அவர்கள் பிரதம விருந்தினராகவும் சுவாமி. பரமாத்மானந்த சரஸ்வதி, சங்கீத பூஷணம் வேலாயுதபிள்ளை, திருமதி. கலாநிதி குலமோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாககவும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். செல்வி. சுவர்ணா ஒன்ராரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஆறாம் தரப் பரீட்சையிலும் செல்வி. மதுரா ஐந்தாம் தரப் பரீட்சையிலும் சித்தியடைந்துள்ளனர். செல்வி. சுவர்ணா ரொறன்ரோவில் இசை ஆசிரியையாகவும் பணிபுரிந்து வருகின்றார்.

### செல்வன். கஜன் சந்திரேஸ்வரன், செல்வன் சாருஜன் சந்திரேஸ்வரன்



சதா கான நிலைய இயக்குனர், இசைக்கலைமணி, இசைக்கலா வித்தகர் திருமதி. பவானி ஆலாலசுந்தரம் அவர்களின் மாணவர்களும், காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த திரு. திருமதி. சந்திரேஸ்வரன்-நந்தினி தம்பதிகளின் புதல்வர்களுமாகிய செல்வன். கஜன் சந்திரேஸ்வரன், செல்வன் சாருஜன் சந்திரேஸ்வரன் ஆகியோரின் வாய்ப்பாட்டு அரங்கேற்றம் 04-09-2010 அன்று கனடா, பிரம்டன் றோஸ் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் பேராசிரியர் தி. சிவகுமாரன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் சங்கீத பூ'ணம் வேலாயுதபிள்ளை அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். செல்வன்.

கஜனும், செல்வன். சாருஜனும் ஒன்றாரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஐந்தாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர்.

## வாய்ப்பாட்டு, வயலின், கீபோட் வாத்தியம்

### செல்வி பிருந்தா ஜெயானந்தன்



இராகாலயம் இசைக் கல்லூரி இயக்குனர், சங்கீத வித்துவான், வயலின் வித்துவான், பல்கலை வேந்தன் திரு. ரவீந்திரன் செல்வக்குமாரசாமி அவர்களின் மாணவியும் காரைநகர் ஆயிலியைச் சேர்ந்த ஜெயானந்தன்-இந்திரா தம்பதிகளின் புதல்வியுமாகிய செல்வி பிருந்தா ஜெயானந்தன் அவர்களின் வாய்ப்பாட்டு, வயலின், கீபோட் வாத்தியம் இணைந்த இளநிலை அரங்கேற்றம் 15-09-2007 அன்று கனடா, ரொறன்ரோ JCC Leah Posluns கலையரங்கில் நடைபெற்றது. இந்த இளநிலை அரங்கேற்றத்தில் மகப்பேற்று மருத்துவ நிபுணர் Dr. குமார் கிருபா அவர்கள் பிரதம விருந்தினராகவும், குடும்ப நல மருத்துவர் Dr. மணிவண்ணன் செல்வானந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர். செல்வி. பிருந்தா பியானோ வாத்தியத்தை இசைப்பதிலும் வல்லவர் ஆவார். பல்கலைகளையும் பயின்று வரும் பிருந்தா சற்று வித்தியாசமாக இந்துஸ்தானிய இசையையும் ஆர்வத்துடன் பயின்று வருகின்றார்.

## பரதநாட்டியம்

### திருமதி சுபாஷினி யதுநந்தன்



நர்த்தனாலயா நடனக் கல்லூரி அதிபர் திருமதி. கீதா யோகேந்திரன் அவர்களின் மாணவியும் காரைநகர், சிதம்பரா மூர்த்தி கேணியடியைச் சேர்ந்த கருணாகரன்-லக்ஷ்மி தம்பதிகளின் புதல்வியுமாகிய திருமதி. சுபாஷினி யதுநந்தன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 16-08-1997 அன்று கனடா, மார்க்கம் கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் பேராசிரியர்.தி. சிவகுமாரன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்தார்.

### நிர்த்திகா சித்திரவடிவேல்



சதங்கை நர்த்தனாலய நடனக் கல்லூரி அதிபர் ஸ்ரீ. வாசு சின்னராசா அவர்களின் மாணவியும் காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த சித்திரவடிவேல்-செல்வேந்திராணி தம்பதிகளின் புதல்வியுமாகிய செல்வி. நிர்த்திகா சித்திரவடிவேல் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 01-09-2001 அன்று கனடா, ஸ்காபுரோ வின்சன் சேர்ச்சில் கல்லூரிக் கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் இளைப்பாறிய அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் பிரதம விருந்தினராகவும், நிர்த்திகாவின் பாடசாலை அதிபர் திருமதி. யுவனோ கஸ்ரெலோ சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். நடனக் கலையில் பல விருதுகளைப் பெற்றுள்ள செல்வி. நிர்த்திகாவிற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் டிப்ளோமாப் பரீட்சையில் முதல் தரத்தில் சித்தியெய்தியமைக்காக 'நாட்டியக் கலைமணி' என்ற பட்டமும் ஒன்றாரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையிலும் சித்தியெய்தியமைக்காக 'நடனக் கலாபாரதி' என்ற பட்டமும் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நிர்த்திகா தமிழ்க் கலை-தொழில்நுட்பக் கல்லூரியினால் நடத்தப்படும் ஆசிரியர் தரப் பரீட்சையிலும் சிறப்புச் சித்தி பெற்றுள்ளார். கர்நாடக சங்கீதத்தையும் பியானோ வாத்தியத்தையும் ஆர்வத்துடன் பயின்று வரும் நர்த்திகா ரொறன்ரோ பெரும்பாகத்தில் பரதநாட்டியம் பயிற்றுவித்தும் வருகின்றார்.

**சரண்யா பாலேந்திரன்**



நிருத்திய பரதநாட்டியக் கல்லூரி அதிபர் திருமதி. கனிமொழி மேனன் அவர்களின் மாணவியும் காரைநகர் நீலிப்பந்தனையைச் சேர்ந்த பாலேந்திரன்-குமுதினி தம்பதிகளின் புதல்வியுமாகிய செல்வி. சரண்யா பாலேந்திரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 27-04-2003 அன்று இந்தியா, சென்னை P.T. தியாகராஜர் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் தமிழ்த் திரைப்பட நடிகை திருமதி. ஊர்வசி ஜெயபாரதி அவர்கள் பிரதம விருந்தினாராகக் கலந்து சிறப்பித்திருந்தார்.

**சிந்துஜா இலக்குனராஜா, சுகன்யா இலக்குனராஜா**



சாயி சஹானா நாட்டிய ஷேஸ்திரா அதிபர் நாட்டியக் கலைமணி திருமதி. ஞானாம்பிகை குணரட்ணம் அவர்களின் மாணவிகளும் காரைநகர் களபூமியைச் சேர்ந்த இலக்குனராஜா-சிவசோதி தம்பதிகளின் புதல்வியருமாகிய செல்வி. சிந்துஜா இலக்குனராஜா, செல்வி. சுகன்ஜா இலக்குனராஜா ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் 19-08-2006 அன்று கனடா, மார்க்கம் கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் பேராசிரியர்.தி. சிவகுமாரன் அவர்கள் பிரதம விருந்தினாராகவும் புலவர் ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். இவர்களின் குருவான நாட்டியக் கலைமணி திருமதி ஞானாம்பிகை குணரட்ணம் அவர்கள் காரைநகரைச் சேர்ந்த கலைஞர் என்பது குறிப்பிடத்தக்கது.

**நிரூபா தயாளன்**



சதங்கை நர்த்தனாலய நடனக் கல்லூரி அதிபர் ஸ்ரீ. வாசு சின்னராசா அவர்களின் மாணவியும் காரைநகர் ஆயிலியைச் சேர்ந்த தயாளன்-விஜயா தம்பதிகளின் புதல்வியுமாகிய செல்வி. நிரூபா தயாளன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 15-07-2007 அன்று கனடா, ரொறன்ரோவில் அமைந்துள்ள Armenian Youth Centre கலையரங்கில் நடைபெற்றது. இந்த அரங்கேற்றத்தில் பேராசிரியர்.தி. சிவகுமாரன் அவர்கள் பிரதம விருந்தினாராகவும் திருமதி. பார்வதி ரவி கண்டசாலா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்திருந்தனர். செல்வி. நிரூபா ஒன்ராரியோ தமிழ் இசைக் கலா மன்றத்தினால் நடத்தப்படும் ஆறாம் தரப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார். இவர் வயலின் வாத்தியத்தையும் பியானோ வாத்தியத்தையும் ஆர்வத்துடன் பயின்று வருகின்றார்.

தொகுப்பு: திருமதி கிருஷ்ணவேணி சோதிநாதன்

# காரைநகருக்கு பெருமை சேர்த்த நாதஸ்வர மேதை அமரர் *N. K.* கணேசன்



ஈழத்துச் சிதம்பர ஆஸ்தான வித்துவான் காரையம்பதி என். கே. கணேசன் அவர்களின் மறைவு குறித்து கொழும்பு கம்பன் கழகம் நடத்திய இசைவேள்வியின் போது கலாசூரி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்கள் ஆற்றிய உரை:

கலைஞர்கள் தோன்றுகிறார்கள், மறைகிறார்கள். சிலர் பிறவிக் கலைஞர்களாகவே தோன்றுகிறார்கள். சிலர் தமது முயற்சியால், ஆற்றலால், ஆளுமையால் பார்போற்றும் கலைஞர்களாகிறார்கள். இருப்பினும் ஒரு சிலரே உச்ச நிலையை அடைகிறார்கள். மக்களின் மனதில் இடம்பிடித்துக் கொள்கிறார்கள். இது அவர்களது கலைகளில் கண்ட தனித்துவம், திறமை, ரசிகர்களை சுண்டியிழுக்கும் பாங்கு, மற்றது இங்கிதம் என்று கூறுவார்களே கலைஞர்களுக்கு இது மிக அவசியமாகிறது. எத்துணை திறமையிருந்தும் பழகும் பாங்கு இல்லாதவிடத்து அவர் ஒரு புறக்கணிக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுவார்.


இந்நிலையில் நாம் இங்கு நினைவுகூர வந்திருக்கும் நீத்தார் பெருமை கூற வந்திருக்கும் இசை அறிஞர் பூரண தகமைகளைக் கொண்டிருந்த இசை அறிஞர் என்றே கூறவேண்டும். இசைநாத மணி, இசைச்சக்கரவர்த்தி மறைந்த நாதஸ்வர வித்துவான் காரையம்பதி என்.கே.கணேசன் இசை உலகிற்கு அரும்பணி ஆற்றியவர். வாழும்பொழுதே கௌரவிக்கப்பட்டவர். பல இளம் கலைஞர்களுக்கு உதாரணமாக இருந்தவர். இவர் பெருமை கூறி அஞ்சலி செலுத்துவது நமது கடமைப்பாடுகளில் ஒன்றாகும்.

இதனைத் தவறாது இசை வேள்வியில் சேர்த்துக்கொண்ட கம்பன் கழகத்தினை முதற்கண் பாராட்டவேண்டும். நாதஸ்வர வித்துவான் காரைநகர் என். கே. கணேசன் அவர்களது இழப்பு இசை உலகிற்கு மாபெரும் இழப்பாகும். 2001ஆம் ஆண்டு யூலை 28ஆம் திகதி காலமாகிய அமரர் காரைநகரையே பிறப்பிடமாகக் கொண்டவர். முதலில் தந்தையார் நல்லகண்ணு கம்பரிடமும், பின்னர் மூளாயைச் சேர்ந்த நாதஸ்வர வித்துவான் அமரர் ஆறுமுகம் அவர்களிடமும் நாதஸ்வர இசையை முற்றாகவும், முறையாகவும் கற்றார். அளவையூர் நாதஸ்வரச் சக்கரவர்த்தி கலாசூரி என். கே. பத்மநாதனை சம்பந்தியாகக் கொண்டார். இந்திய நாதஸ்வர தவில் வித்துவான்களோடு ஈழத்துச்சிதம்பர திருவாதிரை உற்சவகாலத்தில் இணைந்து வாசித்து பாராட்டுப்பெற்றவர். இவரது வாசிப்பு தனித்துவமானது. கேட்போர் மனதைக் கவரும் தன்மையது என்று கேள்விப்பட்டுள்ளேன். தமிழகத்தின் பிரபல தவில் மேதைகளான அரித்துவாரம்மங்களம் A.K. பழனிவேல், திருவானப்புத்தூர் T.A. கலியமூர்த்தி, திருச்சேரை முத்துக்குமாரசாமி போன்றோரால் ஈழத்துச்சிதம்பரத்தில் பாராட்டுப்பெற்றவர்.

ஈழத்துச்சிதம்பர தேவஸ்தானத்தில் கூத்தபிரான் வீதியுலா வருங்காலத்தில் நாதஸ்வரம் வாசிப்பதை தமது முக்கிய கடமையாகக் கொண்டவர். அமரர் என்.கே.கணேசன் அவர்கள் ஈழத்துச் சிதம்பரத்தின் ஆஸ்தான வித்துவானாக, நாதஸ்வர மாமேதையாக 40 ஆண்டுகாலமாக இருந்துவந்துள்ளார். நாடு போற்றும் நன்மக்களையும் ஈன்று நாதஸ்வர மேதையாகப் பல பட்டங்களையும் பெற்று காரை மாதாவிற்கு புகழ் சேர்த்த கைலாயக் கம்பர் கணேசன் அவர்கள் அகவை 53வரை வாழ்ந்தவர். நாதஸ்வர கலாநிதி, நாதஸ்வர இசைமணி, நாத இசைச் சக்கரவர்த்தி எனும் பல பட்டங்களால் கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை வானொலிக் கலைஞராகவும் கடமையாற்றியிருந்தார். இவரது பிள்ளைகளும் நாதஸ்வரம், தவில், வாய்ப்பாட்டு என்பனவற்றில் புகழ்பூத்து காரைநகருக்கு பெருமைசேர்த்து வருகின்றனர். 2000ஆம் ஆண்டு கம்பன் விழாவிற்கு வருகைதந்த மாம்பழம் சிவா குழுவினரை ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவத்திற்கு வாசிக்க வைத்த பெருமை அமரர் கணேசனையே சாரும்.. 1975ஆம் ஆண்டு வலங்கைமான் சண்முகசுந்தரத்துடன் வாசித்துப் பாராட்டைப் பெற்றவர். இந்தவகையில் கவிச்சக்கரவர்த்தி கம்பர் வம்சத்து வழித்தோன்றலான திரு. நல்லகண்டு செல்லையா சம்பத்துவின் தம்பி நல்லகண்டு கைலாயக் கம்பரின் மகனாகப் பிறந்து ஈழத்தில் புகழ்பூத்த கலைஞர் வரிசையில் இடம்பெற்ற தமது தெய்வீக இசை மூலம் இசைப்பணியாற்றி ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான ஆஸ்தான வித்துவானாகவுமிருந்த நாதஸ்வர மேதை அமரர் என்.கே.கணேசன் அவர்களது மறைவு தமிழ் மக்களுக்கும், கலைத்துறைக்கும் ஏற்பட்ட பேரிழப்பாகும்.

நன்றி: மூதறிஞர் சிவஸ்ரீ. க. வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின்
திருத்தொண்டு பரவும் மலர்.


DJ Raj
Weddings
Receptions
Birthday Parties
Christmas parties
First Communions
Getogether
Dinner Dance
Stage Programmes
& All other Occasions
Bubbles
Fire Works
Sound & Light
Magic Show
(Travis, Barbra Ratnam's)
Snow Ice
Projector & Screen
Call: Raj
416 -302-7655
905-232-7005
dj.raja@hotmail.com



Balavimala Narthanalayam
பாலவிமல நர்த்தனாலயம்
நடன வகுப்புகள்
புதிய வகுப்புகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
ஆர்வமுள்ள மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
மாணவர்கள் பரீட்சைக்கும்,
நிகழ்ச்சிகளுக்கும் தயார் செய்து அனுப்பப்படுவர்.
பரத கலாவித்தகர்
திருமதி. சித்ரா தர்மலிங்கம்
(905) 956 9385
(416) 459 0766
339 Derrydale Drive
McLaughlin Rd & Derry Rd
2062 Lawarence Ave East
Warden & Lawarence (Below SKT jewellers)

விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம்பெற்ற காரைநகரின் முதற் பேராசிரியர்

# அமரர் இரகுநாதன் கனகசுந்தரம்

**M.B.B.S(Ceylon), Ph.D(Cambridge), F.I.Biol(London),F.A.M.S, Honorary D.Sc(Univ of Sri Lanka)**



பல வளங்களும் நிறைந்த எழில் மிகு ஊர் காரைநகர். எல்லா இடங்களுக்கும் சென்று பொருளீட்டிய செல்வந்தர்கள் பலர் உள்ள ஊர் எங்கள் காரைநகர். அத்துடன் உயர் கல்வி கற்ற ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், பேராசிரியர்கள், சட்டத்தரணிகள் பொறியியலாளர்கள், விஞ்ஞானிகள், வைத்தியர்கள், பொருளாதார நிபுணர்கள், கணக்காளர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் எனப் பணிபுரிந்தவர்களும், பணிபுரியும் கல்விமான்களும் இங்குள்ளனர். இவர்கள் அனைவரும் காரைநகருக்கு நன் மதிப்பைத் தந்தார்கள். அண்மையில் சிவபதமடைந்த பேராசிரியர் கனகசுந்தரம் அவர்களும் தலை சிறந்த கல்விமானாகவும் பக்திமானாகவும் இருந்து எங்கள் ஊருக்குப் பெருமதிப்பைத் தந்தார்.

இவர், பொன்னுடையார் வேலுப்பிள்ளை மீனாட்சிப்பிள்ளை தம்பதிகளின் ஆறு ஆண் மக்களுக்குள் மூத்தவரான ஆசிரியர் இரகுநாதன் வள்ளியம்மை தம்பதிகளின் மகனாக காரைநகர் கருங்காலிக் குறிச்சியில் 1919வது ஆண்டு ஐப்பசி மாதம் பதினான்காம் திகதி (October 14,1919) பிறந்தார். இவருக்கு மூன்று சகோதரிகள் (அமரர்கள் மகேஸ்வரி வேலுப்பிள்ளை, இராசம்மா இராமநாதன், நல்லம்மா நல்லதம்பி) இருந்தனர். இவர் ஆரம்பத்தில் வியாவில் பாடசாலையிலும் பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரியிலும் (கலாநிதி தியாகராசா மத்திய மகா வித்தியாலயம்) அதற்குப் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கல்வி கற்றார். இதன்பின் கொழும்பு பல்கலைக்கழக வைத்தியக் கல்லூரியில் படித்து வைத்தியக்கலாநிதிப் பட்டத்தை 1944ஆம் ஆண்டு பெற்றார். இவர் வைத்தியக் கல்லூரியில் படித்த பொழுது ஒவ்வொரு வருடமும் சோதனையில் முதலாம் பிரிவில் (First Class) சித்தியடைந்தார். கடைசிச் சோதனையில் முதலாவது பிரிவில் சித்தியடைந்து அறுவைச் சிகிச்சையில்(Surgery) தங்கப் பதக்கமும்(Rockwood Gold Medal) பெற்றார். பின் வைத்தியக் கல்லூரியில் விரிவுரையாளராக கடமையாற்றினார். அதன் பின் இங்கிலாந்து சென்று கேம்பிரிஜ் (Cambridge) பல்கலைககழகத்தில் படித்து கலாநிதிப் பட்டம் பெற்று இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மூத்த விரிவுரையாளராக(Senior Lecturer) கடமையாற்றினார். பல வருடங்களுக்குப் பின் இப்பதவியை ராஜினாமா செய்துவிட்டு சூடானிலுள்ள(Sudan) கார்டும் (Khartoum) பல்கலைக்கழகத்தில் பேராசிரியருக்கு அடுத்தவராக (Reader) கடமையாற்றினார். இதற்குப்பின் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் உடற்கூற்றியலில் (Anatomy) பேராசிரியராக (1962முதல் - 1980வரை) இருந்தார். பின்னர் இலங்கைக்கு வந்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வைத்தியக் கல்லூரியில் பேராசிரியராகவும் மருத்துவபீடத் தலைவராகவும்(Dean of Medicine) கடமையாற்றினார். இவரின் கல்விச்சாதனைகளுக்காக ஸ்ரீ லங்கா பல்கலைக்கழகம் கௌரவ விஞ்ஞானக் கலாநிதிப் பட்டம் (Honorary Doctor of Science) அளித்து இவரைக் கௌரவித்தது. காரைநகரில் இருந்து இவர் ஒருவரே இவ்வாறு கௌரவிக்கப்பட்ட கல்விமானாகும்.

மூத்த ஆசிரியராக (Senior Author) இருந்து இவர் உடற்கூற்றியலில்(Anatomy) 650 பக்கங்களுள்ள சிறந்த புத்தகத்தை வைத்திய கலாநிதி சிவானந்தசிங்கத்துடனும் வைத்திய கலாநிதி கிருஸ்ணமூர்த்தியுடனும் சேர்ந்து ஆங்கில மொழியில் வெளியிட்டார். **"ANATOMY Regional, Functional and Clinical"** என்பது தான் இந்தப் புத்தகத்தின் பெயர். இப்புத்தகம் P G Publishing Singapore என்ற நிறுவத்தினரால் வெளியிடப்பட்டது. இவர் ஒரு சிறந்த ஆசிரியராக இருந்தார். எல்லா மாணவர்களிடமும் படிப்பில் முழுக்கவனமும் உயர்ந்த தராதரமும் இருக்க வேண்டும் என்று தெட்டத்தெளிவாகக் கூறி வந்தார். இவரிடம் வைத்தியக்கல்லூரியில் கற்று பின் பேராசிரியராக இருந்து இளைப்பாறிய ஒரு வைத்தியக் கலாநிதி தன்னைப் படிப்பித்த, தான் வியந்த ஐந்து பேராசிரியர்களைப் பற்றி ஒரு புத்தகம் வெளியிட்டார் (FIVE DONS - Lake House). அந்த பேராசிரியர்களில், அமரர் கனகசுந்தரமும் ஒருவராகும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் புத்தகத்தை எழுதியவர் இலங்கையில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிங்களப் பேராசிரியர் மகாசரா குணரத்ன(Mahasara Gunaratne) என்பவர். ஒரு சிறந்த ஆசிரியருக்கு மாணவன் மாணவி எவராக இருந்தாலும் சரி, படிப்பில் கவனமும் ஆர்வமும் உள்ளவராக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். பேராசிரியர் கனகசுந்தரம் எந்த சாதியினரையும் மனித சாதியினர் என மதித்தும் எம்மதமும் சம்மதம் எனக்கருதியும் வாழ்ந்தவர். இவர் படிப்பித்த தமிழ், சிங்களம், முஸ்லிம், சீன மாணவர்கள் இவரில் பெருமதிப்புடையவர்களாக இருந்தார்கள். இவர் நோயாளிகளை ஏழை, செல்வந்தர் என்று வித்தியாசம் காட்டாமல் எல்லோரையும் அன்பாக விசாரித்து சிகிச்சை அளித்தார். அதனால் எல்லா நோயாளிகளின் பெருமதிப்பைப் பெற்றார்.

பேராசிரியர் கனகசுந்தரம், Times of Ceylon உரிமையாளராக இருந்த திரு. திருமதி சங்கரப்பிள்ளை அவர்களின் மகள் சொர்ணம் அவர்களை மணம் புரிந்தார். இல்லறமாகிய நல்லற வாழ்க்கையில் இவர்களுக்கு ஐந்து மக்கள் பிறந்தனர் (வைத்திய கலாநிதி நரேந்திரன், வைத்திய கலாநிதி இராசேந்திரன், திருமதி பத்மினி பரசிவம், திருமதி பவானி கமலநாதன், கலாநிதி பங்கஜவல்லி (பஞ்ஜா) தியாகராசா). இவர் இந்து சமயத்தில் மிகவும் ஈடுபாடுடையவராக இருந்தார். இலங்கை வைத்தியக் கல்லூரியில் படிப்பித்த பொழுது இவர் இந்து சமய சங்கத்திற்குப் போசகராக இருந்தார். காரைநகர் மணிவாசகர் சபையின் தலைவராகப் பணியாற்றி அதன் வளர்ச்சிக்கும் உதவிகள் செய்தார். சிங்கப்பூரில் நடைபெற்ற திருமுறை மகாநாடுகளில் முக்கிய பங்கேற்று பலதடவை பேச்சாளராகவும் இருந்துள்ளார். சைவசமயத்தைப் பற்றி பல கட்டுரைகள் எழுதி இருக்கின்றார். ஓம்முருகா எனும் சஞ்சிகையில் சைவசமயம் பற்றியும் சிவலிங்கத்தின் அர்த்தத்தைப் பற்றியும் நடராஜரின் ஆனந்த தாண்டவத்தைப் பற்றியும் விபூதியின் அர்த்தத்தைப் பற்றியும் விஞ்ஞானக் கருத்துகள் உள்ளடக்கிய கட்டுரையை ஆங்கிலத்தில் எழுதி இருக்கின்றார். பேராசிரியர் கனகசுந்தரம் ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகவும் புலமையுடையவர் என்பதை இரு மொழிகளிலும் எழுதிய கட்டுரைகளில் இருந்தறியலாம். இவரின் எழுத்திலும் பேச்சிலும் ஒரு தேவையற்ற வார்த்தைகள் இருக்காது. ஒவ்வொரு சொல்லும் பயனுடைய சொல்லாக இருக்கும்.

“சொல்லும் சொல்லின் பயனடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்”

என்ற வள்ளுவர் வாக்கிற்கேற்ப அவருடைய பேச்சுகளும் கட்டுரைகளும் இருந்தன.

இறுதிக் காலத்தில் அவர் தனது கவனத்தைத் தியானத்திலும் மனதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பதிலும் செலுத்தினார். நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் சொல்ல வேண்டும். இதுவே சிறந்த மந்திரமாக வேதாந்தத்திலும் சித்தாந்தத்திலும் கருதப்படுகின்றது என்று சொல்லி ஒரு கடிதத்தில் தேவாரப் பாடலையும் எழுதி எனக்கு அனுப்பினார்.

“ஐயுந் தொடர்ந்து விழியுஞ் சொருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன் யான்
செய்யுந் திருவொற்றியூருடையீர் திருநீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே”

என்பதே அந்தப் பாடல். ஐம்புலன்களையும் இழந்து, கண்ணும் சொருகி, அறிவும் கெட்டு, உடம்பும் அழிகின்ற வேளையில் திருவொற்றியூரில் உள்ள அருள்பாலிக்கும் இறைவனே எனக்கு நெற்றியில் வெண்ணீறுமிட்டு, கைகூப்பி வணங்கி, ஐந்தெழுத்தை (நமசிவாய) சொல்லப் படிப்பியும் என்பதே இப்பாடலின் கருத்து.

பேராசிரியர் சமய அறிவு நிறைந்தவர். அதை மற்றவர்களுக்கு விளங்கும் வண்ணம் எடுத்துரைக்கும் ஆற்றல் உள்ளவராக இருந்தார். மனம் என்பது ஒரு குரங்கு. அதைக்கட்டுப் படுத்துவது சுலபமல்ல. பல்வேறு சிந்தனைகளுடன் இருக்கும் பொழுது நான் தொழுவதை ஈசனே நீ எவ்வாறு ஏற்றுக் கொள்வாய் என்பதை விளக்க பட்டினத்தடிகளின் பாடலை எழுதி எனக்கு அனுப்பினார்.

“கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால் கமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பும் யான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய் வினை தீர்த்தவனே.”

பேராசிரியர் கனகசுந்தரம் வைத்தியத்துறையில் மட்டுமல்ல, தமிழிலும், ஆங்கிலத்திலும், சமயத்திலும் நல்ல அறிவுடையவராக இருந்தார். இவர் டென்னிஸ் (Tennis) பந்தாட்டத்திலும் சிறந்தவராக இருந்து கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகததில் (Cambridge University) இந்த விளையாட்டில் கலர்ஸ் (Colours) பெற்றார். தமிழ் ஐக்கிய விளையாட்டுச் சங்கத்தில் (Tamil Union Sports Club) டென்னிஸில் வெற்றிக் கிண்ணம் (Champion) பெற்றார். இவர் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து தனது 91வது வயதில் (2010 ஆனி மாதம் பத்தொன்பதாம் திகதி)(June 19, 2010) இறைவனடி சேர்ந்தார். இப்படி ஒரு சிறந்த கல்விமான், பக்திமான், சற்குணசீலர் எங்கள் காரைநகரில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று எங்கள் ஊருக்குப் பெருமதிப்பைத் தந்தார் என்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.

**Dr. தில்லைநாதன் சிவகுமாரன்** M.Sc, Ph.D, FRSC, FCACB, DABCC
(மக்மாஸ்டர் பல்கலைக்கழக முன்நாள் பேராசிரியர்)
(உடன் பிறவாச் சகோதரன்)
(First Cousin)

# கலைமகளும், திருமகளும் கழிநடம்புரியும் கவின்மிகு காரைநகர்

காரைக் கூத்தன்

யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத் திசையில் அமைந்துள்ளனவும் சப்ததீவுகள் என அழைக்கப்படுகின்றனவுமாகிய காரைதீவு, அனலைதீவு, எழுவைதீவு, லைடன்தீவு, புங்குடுதீவு, நயினாதீவு, நெடுந்தீவு என்கின்ற ஏழு தீவுகளுள் காரைதீவு முதன்மையானதாகும். மிக்க தொன்மையுடையதும், எந்த ஊருக்கும் இல்லாத பல்வேறு சிறப்புக்களையும் கொண்டு விளங்குகின்றதுமாகிய வளம்மிக்க காரைநகர் பற்றிய இரு நூல்கள் இரு வெவ்வேறு காலப்பகுதியில் வெளிவந்துள்ளன. காரைநகர் நடுத்தெருவைச் சேர்ந்தவரும் 'மட்டக்களப்பு மான்மியம்' என்கின்ற நூலை எழுதி இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டவருமான வித்துவான் F. X. C. நடராசா அவர்களால் எழுதப்பட்ட 'காரைநகர் மான்மியம்' என்கின்ற நூலை 1971ம் ஆண்டு கொழும்பு இரஞ்சனா அச்சகத்தினர் பதிப்பித்து வெளியிட்டனர். கொழும்பு கம்பன் கழகப் பொருளாளரும் களபூமியைச் சேர்ந்தவருமான திரு.ச.ஆ.பாலேந்திரன் அவர்கள் எழுதிய 'காரைநகர் தொன்மையும் வன்மையும்' என்கின்ற நீண்ட ஆய்வு நூலை பாலாவோடை அம்மன் பதிப்பகத்தினர் அச்சிட்டு 2002ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தனர். இந்நூல் சாகித்திய மண்டலப் பரிசினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். இத்துணை சிறப்புக்கள் கொண்ட ஊரா காரைநகர் என வியக்கும் வண்ணம் பல்வேறு முக்கிய் தகவல்கள் பொதிந்துள்ள நூல்களாக இவ்விரு நூல்களும் அமையப் பெற்று காரைநகரின் பெருமையை உலகறியச் செய்துள்ளன.

## ஒரே பார்வையில் காரைநகரின் சிறப்புக்கள்

பெருங்கற்கால கலாச்சாரம் நிலவிய ஈழ வரலாற்றுதய காலத்திற்கு முன்பிருந்தே மக்கள் வாழ்ந்து வந்ததாக வரலாற்றாய்வாளர்களால் கூறப்படும் மிகத்தொன்மையான கிராமம்.

பண்டைக்காலந்தொட்டு காரைதீவு என அழைக்கப்பட்டு வந்த இவ்வூரில் காரைச்செடிகள் நிறைந்து காணப்பட்டதாக புத்தசாதகக் கதையொன்று கூறுகின்றது. இதுவே காரைதீவு என்ற பெயர் வரக்காரணமாயிற்று என்பர். காரைக்கால் நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து குடியேறியவர்களே இவ்வூரின் ஆதிக்குடியேற்ற வாசிகள் என்றும் இதன்காரணமாகவே காரைதீவு எனப்படலாயிற்று என்று கூறுவாருமுள்ளனர்.

திருநெல்வேலி தாமிரபரணி கரையோர மக்கள் இங்கு சத்திரந்தை என்ற பகுதியில் வந்து குடியேறியிருந்ததாகவும் அவர்களே காரைதீவில் ஆதிக்குடியேற்ற வாசிகள் என சத்திரந்தையில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்கால கலாசாரத்தின் தடயங்ளைச் சான்றாகக் கொண்டு திரு.ச.ஆ.பாலேந்திரன் விளக்கமளிக்கின்றார்

நாகரீகத்திலும், கலாச்சார பண்பாட்டிலும், செல்வச்செழிப்பிலும் காரைதீவு மக்கள் சிறப்புற்று விளங்கியமையால் தீவு நகராக(காரைநகர்) மாற்றம் பெற்ற பெருமைக்குரிய ஊர்.

ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின்போது அவர்களால் இவ்வூருக்கு இடப்பட்ட பெயர் ஆம்ஸ்ரடாங் என்பதாகும். ஆம்ஸ்ரடாங் ஹொலண்டு தேசத்தின் தலைநகர் என்பதுடன் அனைவரையும் கவர்ந்த அழகிய நகராகவும் விளங்குகின்றது. இவர்கள் இப்பெயரினை காரைதீவிற்கு வழங்கியதன் மூலம் இத்தீவின் முக்கியத்துவமும், சிறப்பும் புலனாகின்றது.

ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் வருகின்ற மணிபல்லவத்தீவு, காரைதீவு தான் என வித்துவான் F.X.C நடராசாவும், திரு. ச. ஆ.பாலேந்திரனனும் பல்வேறு சான்றுகளுடன் குறிப்பிடுகின்றனர். அதேபோன்று நாகதீபம் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டில் அமைந்திருந்திருந்து கடல்கோளினால் அழிந்து விட்டதாகக் கருதப்படும் ஜம்புக்கோளப்பட்டினம் என்கின்ற முக்கிய துறைமுகம் ஊடாகவே இலங்கைக்கு பௌத்த சமயம் பரப்பப்பட்டதாக பாளிநூல்கள் தெரிவிக்கின்றன. இத்துறைமுகமானது காரைநகரின் வடகிழக்கு மூலையிலுள்ள தூம்பில்பிட்டி, கோவளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய இடத்தில் அமைந்திருந்ததாக திரு.ச.ஆ. பாலேந்திரன் பல விளக்கங்களுடன் குறிப்பிடுகின்றார்.

காரைநகரின் களபூமி என்ற இடத்தில் களபூமித்துறைமுகம் என்ற முக்கிய துறைமுகம் ஒன்று இருந்து வந்துள்ளதாகவும் ஒல்லாந்தர் காலத்தில் இத்துறைமுகம் ஊடாக யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டதெனவும் இதனால் யானைப்பாலம் எனவும் இத்துறை அழைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலம் வரைக்கும் இத்துறையானது வாணிப நடவடிக்கைகளுக்கு முக்கியமானதாக விளங்கிவந்துள்ளது.

காரைநகரின் பழமைமிக்க ஆலயமாகக் கருதப்படும் வியாவில் ஐயனார் ஆலயம் போர்த்துக்கீசர் காலத்திற்கு முன்பு ஆட்சியிலிருந்த குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்டதாகும். போர்த்துக்கீசர்களுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒல்லாந்தரால் இவ்வாலயம் இடிக்கப்பட்டு அதன் கற்கள்கொண்டே ஊர்காவற்றுறையில் அமைந்திருந்த கடற்கோட்டை புதுப்பித்தும், பெருப்பித்தும் கட்டப்பட்டதாகும். குளக்கோட்டுமன்னன் தங்கியிருந்த இடம் இராசாவின் தோட்டம் என இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றது. வியாவில் ஐயனார்கோவில் பூசைக்கென திருஉத்தரகோசமங்கை என்ற இடத்திலிருந்து குளக்கோட்டு மன்னனால் அழைத்துவரப்பட்ட அந்தணர்களே.

தீவுப்பகுதிகளில் வெடியரசனின் ஆதிக்கம் இரண்டாம் நூற்றாண்டளவில் நிலவிய காலத்தில் அவனது தம்பியும், தளபதியுமான வீரநாராயணனின் கோட்டையொன்று வேரப்பிட்டிப்பகுதியில் அமைந்திருந்ததாக பழைய மரபுக்கதையொன்றின் மூலம் அறியப்படுகிறது.

பதினொன்றிற்கு மேற்பட்ட மகோற்சவங்கள் நடைபெறும் பெரிய ஆலயங்களையும், தெருக்கள், வீதிகள், வீடுகள்தோறும் சிறிய ஆலயங்களையும் கொண்டு அருளாட்சி மிகுந்து ஆன்மீகவளம் பொருந்திய ஊர். துர்வாசமுனிவர், தினகரன் முனிவர் போன்றோர் இவ்வூரின் ஆன்மீகவளம் அறிந்து தேடிவந்து தவம் இருந்தனர் எனவும் இதனால் ஆன்மீகவளம் வலுப்பெற்றதாகவும் கூறப்படுகின்றது. தினகரன் முனிவரால் பூசிக்கப்பட்டு வந்த வயிரவர் ஆலயம் சிவன்கோவிலின் மூன்றாம் வீதியில் மிகப்பெரிய ஆலய விருட்சத்தின் கீழ் அமைந்து தினகரன்பிட்டி வயிரவர் என இன்றும் அழைக்கப்படுகிறது.

ஈழத்துச்சிதம்பரம் என அழைக்கப்படுதின்றதும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன ஒருங்கே அமையப்பெற்று வரலாற்றுச்சிறப்பும், அற்புதமும் மிக்க சிவன் ஆலயத்தை தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. இவ்வாலயத்தின் மிகப்பெரிய மூன்றாம் வீதிபோன்று ஈழத்தலங்கள் எங்கணும் காணமுடியாது.

பொதுச்சிந்தனையும் சமயப்பற்றும் மிக்க சைவப் பெரியோர்களாலும், அமெரிக் மிசோன்மரிமாரினாலும் உருவாக்கப்பட் இரண்டு பெரிய பாடசாலைகளுட்பட பதினான்கு பாடசாலைகள் அமையப்பெற்று கல்வி வளத்தால் பெருக வாழுகின்ற மக்கள் உள்ள கிராமம்.

காரைநகரில் தோன்றி இவ்வூரிற்கு தமது சேவைகள் சாதனைகள் மூலமாக பெருமை சேர்த்தோர் பட்டியல் நீண்டு கொண்டே செல்வதை அவதானிக்கலாம். சைவமும், தமிழும் வளர்த்த பெரியோர்கள், இயற்றமிழ்ப் புலவர்கள், நூலாசிரியர்கள், உரையாசிரியர்கள், விஞ்ஞானிகள், வர்த்தகர்கள், சமூக சேவையாளர்கள், அரசியல்வாதிகள், சட்டவல்லுனர்கள், நீதிபதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பொறியியல் வல்லுனர்கள், வைத்திய நிபுணர்கள், கணக்காளர்கள் என அனைத்துத்துறை சார்ந்தவர்களும் இவ்வூரில் தோன்றி ஊரைப் பெருமைப்படுத்தியுள்ளனர். அநேகர் ஊர் மக்களதும், நாட்டு மக்களதும் மனங்களில் நீங்கா இடத்தைப் பெற்றவர்களாக விளங்குகின்றனர்.

காரைநகர் மக்கள் மிகுந்த முயற்சியுடையவர்கள். இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் இவர்கள் வர்த்தகம் புரிந்து பெரும் சாதனை படைத்து வாழ்ந்து வந்துள்ளனர். வாழ்ந்தும் வருகின்றனர்.

பொதுப்பணி, சைவப்பணி ஆகியவற்றில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவ்வூர் மக்கள் பல பொது அமைப்புக்களை நிறுவி அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருபவர்கள். இவர்களால் அமைக்கப்பட்ட சைவமகா சபை, மணிவாசகர் சபை ஆகியன பொன் விழாக் கண்டு அளப்பரிய பணிகள் செய்த சபைகளாக மிளிர்கின்றன. சைவமகா சபை

செயலிழந்துவிட்ட நிலையில் மணிவாசகர் சபை தொடர்ந்து செயலாற்றி சைவப்பணியிலும் கிழவன்காடு கலாமன்றம் கலைப்பணியிலும், காரை அபிவிருத்திச் சபை சிதைந்து போயுள்ள காரைநகரின் கட்டுமானப் பணியினையும் சிறப்பாக ஆற்றி வருகின்றன.

சவுக்கு மரங்கள் நிறைந்து இயற்கை வனப்புடன் திகழும் கசூரினா பீச் என அழைக்கப்படும் வெளிநாட்டு, உள்நாட்டு உல்லாசப் பயணிகளைக் கவர்ந்த பிரபலமான கடற்கரை ஒன்று காரைநகரின் வடக்கே அமையப்பெற்றுள்ளது.

ஆழியெங்கும் ஒளிபரப்பி கலங்களிற்கு வழிகாட்டுகின்ற கலங்கரை விளக்கு ஒன்று காரைநகரின் வடமேற்கு மூலையிலுள்ள கோவளம் என்ற இடத்தில் அமையப்பெற்றுள்ளது. இக்கலங்கரை விளக்கானது இலங்கையிலுள்ள ஏனைய கலங்கரை விளக்குகளை விட மிக உயரமானதாகும்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக 1991ம் ஆண்டு ஏற்பட்ட இடம்பெயர்வு காரணமாக காரைநகர் பெரும்பாதிப்புக் குள்ளாகியது. கனடா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, சுவிற்சலாந்து, பிரான்சு ஆகிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் காரைநகர் மக்கள் மன்றங்கள் அமைத்து தமது தொடர்புகளைப் பேணிவருவதுடன் பாதிப்புக்காள்ளான தமது ஊரைக் கட்டியெழுப்பும் பணிக்கு உதவி செய்து வருகின்றனர்.

---

# காலம் எட்டாக் காரைநகர்

காரைநகர்ப் பெருவூரை நினைக்கும் போதில்
நல்லவர்கள் பலருடைய நினைப்புத் தோன்றும்
நாரைகளும் கொக்குகளும் நாளும் மேயும்
நல்லபெரும் கடற்பரப்பு அடுத்துத் தோன்றும்
கூரையிட்ட பனைமரங்கள் வயல்கள் தென்னை
கூடவந்து மனங்களிலே இனிக்கத் தோன்றும்
நீரையிட்ட சடைமுடியார் கோயில் மற்றும்
நெடியபெரும் கலங்கரையின் விளக்குத் தோன்றும்!

பணம்புரளும் வர்த்தகமும் பாசம் மிக்க
படித்தவர்கள் பலர்நிறைந்த வளமும் வாழ்வில்
கணப்பொழுதும் ஓயாத உழைப்பும் தம்முள்
காத்துவரும் ஒற்றுமையும் காரை மக்கள்
குணப்பொலிவைப் பறைசாற்றும்! கனடா மண்ணில்
குற்றமிலா கலாச்சார மன்றம் ஒன்றே
உணர்த்திவிடும் அவர்பெருமை! பிறந்த ஊரை
உறவுகளை மறக்காத மன்றம் வாழி!

தொல்லியலின் சான்றுகளால் சிலம்பு சொன்ன
தொன்மைமிகு குறிப்புகளால் புறநா னூற்றால்
எல்லையிலே சத்திரந்தை வளவில் கண்ட
எத்தனையோ பொருட்களினால் வேரப் பிட்டிக்
கல்லியலின் தொடர்புகளால் காலம் எட்டாக்
காரைநகர் வாழியவே! அதனின் மாந்தர்
செல்லுகின்ற நாடெலாம் வசந்த மாக
சிறப்புறவே வாழ்த்துகிறோம் வாழி! வாழி!!

**இரா. சம்பந்தன்**

# கனடா வாழ் காரை மக்களின்
# நிரந்தர முகவரி 'காரை வசந்தம்'

ஈழத்து சிதம்பரம் திருத்தொண்டர் சபையாக ஆரம்பித்த மன்றம்
வருடங்கள் தோறும் வளர்ந்து வந்து
மாற்றங்கள் பெற்று மலர்ந்து நிற்கிறது.

கனடா காரை கலாச்சார மன்றம்
கனடாவில் காரை மக்களின் தென்றல்
ஊர் நினைவுகள் ஊற்றெடுக்கும் போதெல்லாம்
உள்ளூர் மன்றத்தை ஏற்றி வளர்த்தோம்.


தென்றலாய் வீசிய எம்ஊர் வாசம்
வசந்தமாய் அரங்கு கண்டு பத்து ஆண்டுகள்.
வருடத்திற்கு வருடம் வண்ணவண்ணமாய்
மலர்ந்த மொட்டுக்கள் ஊரின் பெருமை கூறிச்சென்றன.

கலைஞர்கள் கட்டியம்கூற,
ஆதரவாளர்கள் அணைத்துக்கொள்ள,
நிர்வாகம் நிலையாக நடக்க,
நிறைவாக பத்தாண்டுகள் 'காரை வசந்தம்'
கனடாவில் அரங்கேறியது.

கனடா காரை மக்களின் மனங்களில் உருவாகி,
அரங்கிலே படர்ந்து, ஊரிலே உதவியாய் விரிந்தது.
தசாப்தங்களை தொட்டிருக்கும் 'காரை வசந்தம்'
வீசிய பாதைகளில் நவரசங்களையும் கண்டுகொண்டது.

அகன்ற கண்டத்தில் அறியாத தமிழர்க்கெல்லாம்
காரை மண்ணின் தெரியாத செய்திகளையும் சொல்லிச்சென்றது.
கனடாவில் காரை மக்களிற்கு நிரந்தர முகவரியாய்
'காரை வசந்தம்' நிலையாக நிலைத்திருக்கும்.

**ஊரவன்- தீசன் திரவியநாதன்**




சப்தஸ்வரா இசைக் கலையகம்

Sabtheswara
Fine Arts of Toronto

Dedicated To Train and Perform Classical and Live Music

அனுபவம் மிக்க ஆசிரியர்களின் நேரடி மேற்பார்வையில் மிருதங்கம், கீ-போர்ட் வகுப்புகள் பாட விதானங்களுக்கு அமைய கற்பிக்கப்படும்.

*Mridhangam and Key-board Classes Offered by Experienced and Professional Music Teachers According to Accredited Music Syllabuses*

**Contact: K. Uthyakumar**

**416-335-4923**

# இசையின் போக்கு ......

த.சிவபாலு B.Ed Hons,M.A.

என் இசை கேட்க எழுந்தோடி வருவார் அன்றோ என்று பாடினான் ஒரு கவிஞன். இசை பட வாழ்தல் நன்று என்பார்கள். இசை என்றால் இசைந்து போ என்னும் பொருளும் கொள்ளப்படுகிறது. அதாவது இணங்கியிரு என்பதாகும். மனதை இணங்க பிரச்சினைகளிலிருந்து விடுபடுவதற்கு, மனதிற்கு ஓய்வுகொடுப்பதற்கு இசை மேலானது. நோய் தீர்க்கும் மருந்தாகவும் இசை பயன் படுகின்றது. நோய்களுக்கு அடிப்படைக் காரணம் துன்பம். துன்பத்தைக் களைய வல்லது இசை தரும் இன்பம். இசையின் மூலம் தனது உள்ளக்கிடக்கைகளை இலகுவாக எடுத்துக்கூறவும் முடியும். இன்று இசை பல வடிவங்களில் மக்களால் பயன்படுத்தப்படுகின்றது. பண்டைய இசை, நவீன இசை என்றும், சாத்திரீய இசை, நவீன இசை என்றும், மெல்லிசை, வல்லிசை என்றும், பக்தி இசை, பாமரர் இசை, வாய்ப்பாட்டு இசை, வாத்திய இசை என்றும் பல பிரிவுகளாக இசை காணப்படுகின்றது.

இசைக்கு இறைவனே அடிமை என்பது முதுமொழி. இசைக்குக் கட்டுப்படாதோர் உலகில் யாருமே இல்லை. விலங்கினங்கள், தாவரங்கள் கூட இசையால் கவரப்படுகின்றன என்பது மரபு. மலையைப் பெயர்த்த சர்வ வல்லமை பொருந்திய இலங்கேசுவரனாம் இராவணனை அழுத்தி வைத்திருந்த இறைவனே அவனது இசையில் மெய்மறந்து அவனை அமுக்கியதையே மறந்து அவனை அப்பிடியில் இருந்து விடுபட வைத்தார் என்பது இசையின் மேன்மையை உலகுக்குக் காட்டி நிற்கின்றது.

ஒரு நாட்டின் பண்பாட்டைக் காட்டி நிற்பது அந்த நாட்டின் நுண்கலைகளில் பெரிதும் தங்கியுள்ளது. இவற்றுள் இசைக் கலை மிகவும் மேன்மையானது. இசையினால் அன்பு, அமைதி, சமாதானம், சாந்தி, இன்பம், இயல்பு நிலை என்பனவற்றை தோற்றுவிக்கவும் வளர்க்கவும் முடியும்.

எமது அன்னைமொழியாம் தமிழை முத்தமிழ் என்று அழைப்பர். இசையில் தென்னகம் மிகவும் சிறப்பிடம் பெறுகின்றது. தமிழ் மொழி, இசைத்தமிழ், நாடகத் தமிழ், இயற்றமிழ் என முப்பெரும் பிரிவுகைளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாய்ப்பாடலோடு வாத்திய இசைகள் இணைவதால் இசை மேன்மையடை [illegible]றது. தேவகானமாக மாறுகின்றது என்பது முதுமொழி. காதல், சோகம், துன்பம், இன்பம், வீரம் என்பனவற்றை வெளி[illegible]டுத்தவும், இறைவனை வணங்கவும் இசை பயன்படுத்தப்படுகின்றது.

இசையில் கிராமிய இசை, நாட்டார் இசை, நவீன இசை, பிரபலமான, பொப்பிசை என்பனவும் கர்நாடக இசையை விட வேறுபட்ட தன்மைத்தனவாக அமைகின்றன. கருநாடக இசை இலக்கண வரம்புகட்கு உட்பட்டதாக அமைய கிராமிய இசை அல்லது நாட்டார் இசை போன்றன வரம்புகளற்றனவாக சாதாரண மக்களால் பாடப்படுவனவாக அமைந்துள்ளன. பொப், றொக் இசை எனப்படும் பிரபலமான இசைவடிவங்கள் இன்று அதிகரித்து மக்களிடையே பிரபலம் அடைந்துள்ளமை அவதானிக்க முடியும்.

மேலை நாட்டு இசைகளும் இவ்விதமே பாரம்பரிய இலக்கணத்தோடு அமைந்த இசை வடிவங்களில் நின்று விடுபட்டு பொப், றொக், கிராமிய, நாட்டார் பாடல்கள் என்னும் அம்சங்களோடு இசை வடிவங்கள் வேறுபட்டுச் செல்வதனை அவதானிக்கலாம்.

வாத்திய இசைகளில் தென்னகத்திலும் ஈழத்திலும் காணப்படும் இசை வடிவங்களில் யாழ், வயலின், வீணை, மிருதங்கம், தபேலா, தவில், நாதஸ்வரம், புல்லாங்குழல், பேரிகை, கடம், உடுக்கு, மத்தளம், தாளம் போன்ற வாத்தியங்கள் பாவிக்கப்பட்டு வந்துள்ளன. இன்று உலகம் ஒன்றாக நெருங்கி வருவதனால் இத்தகைய இசை வாத்தியங்களின் சேர்க்கையும் அதிகரித்துள்ளது. ஆனால் தென்னகத்தில் இன்றும் பழமை மாறாத் தனிஇசையாக தவில் நாதஸ்வரம் என்பன காணப்படுகின்றன. பண்டைக்காலத்தில் போருக்கு, வெற்றிக்கு பயன்படுத்தப்பட்ட முரசு(முரசம்), அல்லது பேரிகை என்பது இன்று மிகத் தாழ்ந்த நிலைக்குச் சென்றுள்ளமை துர்பலமே. பாரதியார் கொட்டு முரசே நன்கு கொட்டு முரசே இங்கு மக்கள் அத்தனைபேரும் நிகராம் எனப் பாடியிருப்பதனை நாம் அவதானிக்க மறந்துவிட்டோம். அதுமட்டுமல்ல கவிஞர்களை மதித்துவந்த தமிழகத்தில் மோசிகீரனாரின் கதை யாவரும் அறிந்ததே. முரசு கட்டிலில் அவர் களைப்பால் படுத்து உறங்கிவிட்டார். சாதாரணன் ஒருவன் தூங்கியிருந்தால் அங்கு கொலைத்தண்டனைதான் கிடைத்திருக்கும் என்பதனை நாம் அறியும் போது முரசம் தமிழ் நாட்டில் சாதியத்தின் அடிப்படையில் பின்பற்றப்பட்டதற்கு மாறாக அது அரண்மனையில் வைத்துப் பாதுகாக்கப்பட்டமை புலப்படும். காலப்போக்கில் இவ்வித இசைக்கருவிகள் சாதியத்தின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டதனால் அந்தப் பாரம்பரிய இசைக்கருவிகள் மறைந்து போகும் துற்பாக்கிய நிலை தோன்றியுள்ளது. மேலை நாட்டுப் பாண்ட் வாத்தியத்திற்கு நிகராக ஒலிக்கக்கூடிய போர் முரசு பறைசாற்றவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அதுவே ஒரு சாதியினரின் உரிமையாக அவர்களாலேயே பயன்படுத்தப்பட்டமைக்குப் பொருளாதார அமைப்புத்தான் காரணமாக இருந்துள்ளது. நட்டுவமேளம், பேரிகை என்பன இன்றும் சாதியடிப்படையிலேயே பின்பற்றப்படுவதே இதற்குக்காரணமாகும். நட்டுவமேளம் கோயிலுக்குள் வலம்வர பேரிகை கோயிலுக்கு வெளியே நின்றுவிட்டமை காலத்தின் கொடுமையே. தென்னாசிய நாடுகளில் தொழிற்பகுப்புக்காரணமாக சாதியம் தோன்றி

வந்துள்ளமைக்கு நிலவுடமை, மானியச் சமுதாயத் தோற்றமே காரணமாகின்றது. இதனால் தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவிகள் பலவும் அழிந்து ஒழிந்து போயுள்ளன.

கனடாவில் பல இசைக்குழுக்கள் தோன்றி புதுமைசேர்த்து இசையை நல்கி வருவது யாவரும் அறிந்ததே. பல்லாயிரக்கணக்கான பாடல்கள் இசையாக்கம் பெற்றுள்ளன. இவ்விதமே நாட்டார் பாடல்களும், கிராமிய இசைகளும் நாடக அரங்குகளில் இடம்பெறுவதனையும் நாம் அவதானிக்கமுடியும்.

தென்னகத்தில் பண்டைய இசைக்கு மெருகூட்டி வளர்த்தவர்கள் பலர். அவர்களில் ஸ்ரீ கிரிஜா பாகவதர், ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள், ஸ்ரீ முத்துஸ்வாமி தீட்ஷதர், ஸ்ரீ சியாமா சாஸ்திரிகள், ஸ்ரீ புரந்தர விடலதாஸர், கோபால கிருஸ்ண பாரதியார், முத்துத்தாண்டவர், மகா வைத்தியநாத ஐயர், அருணாசலக் கவிராயர், பைடால குருமூர்த்தி சாஸ்திரிகள், சுவாதித்திருநாள் மகாராஜா ஆகியோர் மிகவும் முக்கியமானவர்களாவர். இவர்கள் பல கீர்த்தனங்களை கர்நாடக, தெலுங்கு உருப்படிகளாகவே தந்துள்ளனர். தமிழில் பாடும் பாடகர்களை ஒருகாலத்தில் புறம் தள்ளியும் வைத்திருந்துள்ளனர். ஆனால் தமிழ் நாட்டில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இசைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு வருவதனால் அது இன்று வளர்ச்சியடைந்து வருகின்றது. பட்டம்மாள், நித்தியஸ்ரீ போன்றவர்களின் பங்களிப்பு தமிழின் பாரம்பரிய இசைப்பிரியர்களுக்கு தேன்மழை பொழிவதாக அமைந்துள்ளது.

தமிழகத்தில் திரைப்படத்துறையும் இசைக்குத் தன்னாலான பணியினை நல்கிவருகின்றது. பாரதியார் கவிதைகளுக்கு இசை அமைத்துப் புதுமெருகூட்டியுள்ளது. எல்லோராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய சொல்வளத்தைக் கையாண்டு காதல், சோகம், வீரம் நிறைந்த பாடல்களை திரைப்பட உலகம் தந்துகொண்டிருப்பது கண்கூடு. மேலை நாட்டுப் பாணியிலான பாடல்கள் இடம்பெற்றாலும் நல்ல தமிழ் இசை வளர்ச்சியையும் காணமுடிகின்றது. எஸ்.பி. பாலசுப்பிரமணியம், பி.யேசுதாஸ் போனற வேற்று மொழியாளர்களும் தமிழ்ப்பாடல்களைப் பாடி வருவது குறிப்பிடத்தக்கது. கே.வி. மாதவன், சீர்காழி கோவிந்தராஜன், டாக்டர். சிவசிதம்பரம் கோவிந்துராஜன், திருச்சி லோகநாதன், டி.எம், சௌந்தரராசன் போன்றோர் தமிழ் பாடல்களில் முத்திரை பதித்துள்ளார்கள். இன்று ஏ.ஆர். ரகுமான், இளையராஜா, தேவா போன்றோரும் இசை அமைப்பாளர்களாகப் பிரபலத்துடன் விளங்குகின்றனர். ஏ.ஆர்.ரகுமான் தனக்கென ஒரு தடம்பதித்துக்கொண்டு உலகரீதியில் புகழ்பெற்ற இசையமைப்பாளராக விளங்குகின்றார். மேலைத்தேய சினிமாத்துறையில் இசையமைப்பதில் அவர் கொடி கட்டிப் பறக்கின்றார்.

ஈழமும் இசைத்துறைக்குத் தன்னாலான பங்களிப்பைச்செய்து வருகின்றது. பிரபலமான நவீன பாடல்துறைக்கு தமிழில் அடிஎடுத்துக்கொடுத்தவர்கள் இலங்கையரே எனின் தவறாகாது. அமுதன் அண்ணாமலை, ஏ.எம்.இராசா, மனோகரன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். மட்டக்களப்பு நாட்டார் பாடல்கள் மிகவும் இரசனை மிகுந்தவை. பண்ணோடு பாடும் பாங்கு இனிமை பயப்பது. காதல் நயம் சொட்ட நெல் வயல்களில் காவல்புரியும் இரவு வேளைகளில் பொழுதுபோக்காகப் பாடப்படும் நாட்டார் பாடல்கள் மட்டக்களப்பு, வன்னிப் பிரதேசங்களில் சிறப்புப் பெறுகின்றன. அருகருகே அமைந்துள்ள காவல் நிலைகளில் இருந்து விலங்குகளை விரட்டுவதற்காக ஒலி எழுப்பும் நோக்குடன் இருவரிடையே நிகழும் பாடல்கள் மிகவும் இன்பம் பயப்பதாக அமைவது குறிப்பிடத்தக்கது. இவ்விதமான இன்பக் கிழுகிழுப்பை ஏற்படுத்தும் தமிழ் நாட்டார் பாடல்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர், இஸ்லாமியர் என்ற வேறுபாடு இன்றி மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

தனத விருப்பினை பாடல் மூலம் தன் இதயத்தில் பதித்தவளுக்குத் தெரியப்படுத்துவதாக அமைவது சில பாடல்கள்

"வாழைப்பழம் எந்தன் வலதுகையில் சர்க்கரையே ஏலம் கராம்பே உன்னை என்ன சொல்லிக் கூப்பிடட்டும்?"
"தங்கக் கிளியே என்ரை தாய்மாமன் ஈன்றகண்டே மையிட்ட கண்ணே உன்னை மறந்திருக்கக் கூடுதில்லை"
"மானே மயிலே மாமி பெத்த மரகதமே தேனே திரவியமே என்மனது ஏங்குதடி உன்னை நினைச்சு"
"குஞ்சு முகமும் உந்தன் கூர்விழுந்த மூக்கழகும் நெற்றி இளம்பிறையும் கண்ணே நித்திரையில் தோணுதுகா"
"காலிவிளைபாக்குக்கும் கழுதாவளை வெற்றிலைக்கும் ஏலம் கிராம்புக்கும் ஏற்றதுகாண் உன் எழில் வாய்" தனது காதலியிடம் தான் வருவதற்கு உள்ள பல தடைகள் இடைவினைகள் பற்றிக் குறிப்பிடுவதாக புனையப்பட்டுள்ள வற்றில் சில:

"சுற்றிவர வேலி சுழலவர முள்வேலி எங்கபுள்ளை நான் வரட்டும்"
"எங்கும் ஒரு வேலி எதாலை புள்ளை நான் வரட்டும்"

தன்னிடம் வருவதற்கு இத்தடைகள் ஒரு காரணமா? நீ துணிந்தால் வரலாம் என்னும் பொருள் படப் பெண் தனது விருப்பைத் தெரியப்படுத்துவதாக அமைகின்றன அதற்கான விடைகள்:

"காவல் அரணோ மச்சான் கள்ளருக்கு முள்ளரணோ? வேலி அரணோ மச்சான் வேணுமென்ற கள்ளனுக்கு?"
அது மட்டுமன்றி வருவதற்கான சில உபாயங்களையும் உணர்த்தி அதற்கான வழியையும் சொல்லிக் கொடுப்பனவாக அமைவன சில:

வெற்றிலையைக் கைப்பிடித்து வெறும்புளகை வாயிலிட்டு சுண்ணாம்பு இல்லையென்று சுற்றிவரலாகாதோ?"
"நித்திரைக் கண்ணிலையும் நினைவிலையும் தோணுவது கலிமா(ஐந்து)விரலும் மச்சான் கால்பதித்த மோதிரமும்"
"வட்டமுகமும் உந்தன் வடிவிலுயர் மூக்கழகும் கட்டுஉடலும் மச்சான் என்கருத்தழியச் செய்யுதுகா"
"தங்கத் தகடோ எந்தன் தகதகத்த பொன்தகடோ வெள்ளித்தகடோ உன்னை விலைமதிக்கக் கூடுதில்லை"
"சந்தன மரத்தைமச்சான் சந்திக்கவேணும் எண்டால் பூவலடிக்கு மச்சான் பொழுதுபட வந்திடுங்கோ"
"கடப்படியில் வந்துநின்று காளை கனைக்குமென்றால் எங்கிருந்தபோதும் நாகு எழுந்துவர மாட்டாதோ"

களவு வளியில் சந்தித்துக்கொண்ட தலைவனையும் தலைவியையும் கண்டுகொண்ட வர்கள் அதனை பெண்ணின் தாய் தந்தையருக்கு உணர்த்தும் தன்மை மிகவும் சுவை தருவதாகவும் கவி நயம் சொட்டுவதாகவும் அமைந்து காணப்படுகின்றது.

"வெள்ளைக் கிடா நாம்பன் வீசு கொம்பன் தாமரையன் பள்ளத்து வெள்ளாமையை பால்பறக்கத் தின்னுதங்கே"
"திடுதிடென்று மழை பொழிய திட்டியெல்லாம் தண்ணிநிற்க மருதையடி நாய்குலைக்க அங்குவந்த கள்ளன் யாரோடி"
"கச்சான் அடிக்க கயல்மீன் குதியாய மச்சானுக்கென்றே வளர்த்தேன் குரும்பை முலை"
"மான்போல் நடைநடந்து மயில்போல் சிறகொதுக்கி தேன்போல் குதிகிளம்பி என்ரை சின்னவண்டு போறதெங்கே"
"கடலே இரையாதே கற்கிணறே பொங்காதே நிலவே எறியாதே என் நீல வண்டார் வருமளவும்"
"ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக்கண்டால் சொல்லிடுங்கோ பூவரசம் கன்னியொன்று பூ மலர்ந்து போச்சுதென்று"
என்று ஒரு இளவயதுக்கன்னியை மனதிலிருத்தி தனது உள்ளக்கிடக்கையை வெளிக்கொண்டுவரும் பாணியில் பாடப்பட இதற்கு பண்ணாக இன்று இசைச் கருவிகளைப் பயன் படுத்துவதில் ஒவ்வொரு இனமக்களும் தமெக்கெனப் பாரம்பரிய இசைக்கருவிகளை வைத்திருந்தபோதிலும் உலகில் உள்ள நவீன கருவிகளையும் தொன்மையான சிறந்த கருவிகளையும் கலந்து பயன் படுத்தும் தன்மை வளர்ந்து வருவதனைக் காணலாம்.

கனடாவில் இசைக்கலையை இந்தியாவைப்போன்று பெருந்தொகையான மாணவர்கள் கற்றுவருவது குறிப்பிடத்தக்கது. வாய்ப்பாட்டு, மிருதங்கம், நடனம், வயலின், வீணை, கீபோர்ட் எனப் பல்வேறு துறைகளிலும் மாணவர்கள் கற்றுவருகின்றனர். பெற்றோரும் ஏதாவது ஒரு கலையைப் பிள்ளை கற்கவேண்டும் என்ற ஆதங்கம் கொண்டவர்களாக அதன் நன்மை தீமை தெரிந்திராவிட்டாலும் தங்கள் பிள்ளைகளை அனுப்பிவைக்கும் நிலைமை காணப்படுகின்றது. தமது பிள்ளைகளுக்கு இக்கலைகளைக் கற்பதால் எதிர்காலத்திற்கு என்ன பயன் என்பதனைக்கூடக் கருத்திற்கொள்ளாதநிலையிலும் ஏதோ ஏனையவர்கள் கற்கின்றார்களே எமதுபிள்ளைகளும் கற்கட்டும் என அனுப்பும் பெற்றோரும் உள்ளனர். தமக்கு இசைக்கலை பற்றி எதுவும் தெரியாவிட்டாலும் பிள்ளைகளுக்காவது தெரிந்திருக்வேண்டும் என்னும் உளப்பாங்கு பலபெற்றோரிடம் இருப்பது கண்கூடு. எனக்குத்தான் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே எனது பிள்ளைகளுக்காவது கிடைக்கட்டும் என எண்ணும் நிலைமையும் உண்டு. இதனை விட எனது பிள்ளை மற்றவர்களைப் போன்று மேடையில் ஏறி பாடவேண்டும், ஆடவேண்டும்,. இசைக்கருவிகளை இசைக்கவேண்டும் என அவாவுறுவது இயல்பானதாக உள்ளமையால் தங்கள் கஷ்ட நஷ்டங்களைப்பார்க்காது வேலைக்களைப்பைக்கூட ஓரந்தள்ளிவிட்டு குளிர் கூதல் என்றில்லாமல் பணச்செலவையும் கருத்திற்கொள்ளாது பிள்ளைகளை இசைக்கலையோ, நாடகக்கலையோ கற்பதற்காக அழைத்துச்செல்லும் நிலைமையும் உண்டு.

இசை, நடனக் கலைகளில் அரங்கேற்றம் காணும்வரை கற்றுவிட்டு அதன்பின்னர் அந்தக்கலையை ஓரங்கட்டும் மாணவர்கள் பெருந்தொகை. மிகக்குறைந்தளவான மாணவர்களே தாங்கள் கற்ற கலையைத் தொடர்கின்றார்கள் மற்றவர்கள் அம்போ எனக் கைவிட்டுவிடுகின்றார்கள். இந்தக் கலைகளை அவர்கள் கற்றுக்கொண்டதன் ஒரே ஒருபயன் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இக்கலையைக் கற்றுக்கொடுக்க அல்லது அவற்றைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்க உதவுகின்றதே ஒழிய அதனால் அவர்கள் செலவீடுசெய்த பணமோ நேரமோ பயனற்றதாகவே காணப்படுகின்றது.

இசைக்கலைபோன்ற கவின்கலைகளைக் கற்றுக்கொண்டவர்கள் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும், நற்பண்புள்ளவர்களாகவும் வளர்கின்றார்கள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டாலும் அதில் போதியளவு உண்மை உண்டு என்பதனைக் கண்டுகொள்ள முடியாத நிலைமை இசை நடன ஆசிரியர்களிடையே நிலவும் போட்டி, பொறாண்மை, பூசல்கள் எடுத்துக்காட்டுகின்றன. கவின்கலைகளைக் கற்றுத்தரும் ஆசிரியர்களே மற்றைய ஆசிரியர்கள் மீது மாணவர்களிடையே குறைகூறுவது மாணவர்களையும் அவ்விதம் வளர அல்லது ஒழுகவைக்கும் தன்மைக்கு இட்டுச் செல்கின்றது. ஏதோ குருபக்தி என்று பிள்ளைகளைத் தங்களின் பாதத்தில் வீழ்ந்து வணங்குவது மட்டுந்தான் ஒழுக்கத்தைக் கற்றுத்தரும் ஒன்று என எண்ணும் பாங்கு ஒட்டு மொத்தமாக எல்லா ஆசிரியர்களிடமும் காணப்படுகின்றது. இது கீழ்ப்படிவை வெளியே காட்டுவதற்கு ஒரு சிறந்த சாதனமாகப் பயன்படுத்தப்படுகின்றது. குரு சிஷ்ய பாரம்பரியத்தின் அடிப்படையில் தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்த இந்த நடைமுறை இன்றும்

தொடர்வது வியப்பில்லை. மாதா, பிதா, குரு தெய்வம் என்பது எம்முன்னோர் ஆண்டாண்டு காலமாக மேற்கொண்டு வரும் நடைமுறை. இந்த ஒழுங்குமுறை தாய், தந்தை பின்னர்தான் குரு என்பதனை தெளிவுபடுத்துகின்றது. பேற்றோரின் கால்களில் வீழ்ந்து வணங்குகின்றார்களோ இல்லையோ குருவின் பாதங்களில் வீழ்ந்து வணங்குவது அரங்கேற்ற மேடைகளில் சிறப்புக்காட்சியாகவே உள்ளது.

மேலை நாடுகளில் இசைக்கலையாக, நடனக்கலையாக இருக்கட்டும் அல்லது வேறு எந்த எமது பாரம்பரியக் கலையாக இருக்கட்டும் அவை ஆங்கிலத்தில் எழுதிக்கொடுக்கப்படும் குறிப்புக்களை அடியொற்றியதாகவே பெரும்பாலும் காணப்படுவதற்குப் பிள்ளைகளின் தமிழ்மொழி அறிவு இன்மை அல்லது போதாமையே காரணம் எனப்படுகின்றது. பேற்றோரோ அன்றி இசை, நடனக்கலை ஆசிரியர்களோ தமிழ் மொழிக்கு முன்னுரிமை கொடுப்பதாக இல்லை. தமிழ்மொழியில் சரளமாகப் பேசமுடியாத பிள்ளைகள் இசையை எவ்விதம் மேற்கொள்ளமுடியும் என்பதனை பல மேடைகளில் அவர்கள் பாடும் பாடல்களின் உச்சரிப்புக்கள் எடுத்துக்காட்டுகின்றன. 'வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே' என்பது வாழ்க தமிழ் மொலி வாழ்க தமிழ் மொலி வாலிய வாலியவே' எனவே பெரும்பாலான பிள்ளைகளால் உச்சரிக்கப்படுவதைக் கேட்க முடிகின்றது. இது ஆசிரயர்களின் குற்றமா அல்லது பெற்றோரின் குற்றமா அல்லது பிள்ளைகளின் இயலாமையா என்பது கேள்விக்குறியே? 'சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்' என்பது எவ்வளவு உண்மை என்பதனை பிள்ளைகளின் உச்சரிப்பு விடயத்தில் கருத்திற்கொள்ளுதல் அவசியமானது. எனவே வீட்டில் பிள்ளைகள் அதிகநேரம் தமிழில் பேசுவதன் முக்கியத்துவம் உணரப்படவேண்டும். எனது பிள்ளை இசை, நடனத்தில் ஈடுபடுவேண்டும் என முயற்சிக்கும் பெற்றோர் இவற்றிலும் முழுக்கவனம் எடுக்கவேண்டுடியது இன்றியமையாதது என்பதனை உணர்ந்து கொள்ளவேண்டும்.

சில பெற்றோர் தமிழ் மொழியைக் கற்பதனால் அது என்ன சோறுபோடுமா? என்ற கேள்வியை எழுப்புகின்றார்கள். ஒரு இனத்தின் மொழியை வெறுமனே வருமானக் கண்ணோட்டத்தில் பார்க்கமுடியுமா? ஒரு இனத்தின் பண்பாட்டு விழுமியங்கள் மொழியின் அடிப்படையைக் கொண்டுள்ளது என்பதனை மறுக்கமுடியுமா? அல்லது வேற்றுமொழியின் மூலம் இன்னொரு மொழியின் பண்புகளை அல்லது அதன் தனித்துவத்தை அறிந்துகொள்ளமுடியுமா? என்பதனைப் பெற்றோர்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும். எங்களது மொழியைக் கற்கவைக்கவில்லை என்பதற்குப் பிள்ளைகளுக்கு விருப்பமில்லை எனச்சாக்குப்போக்குச் சொல்லும் பெற்றோர் பாடசாலைக்குப்போக விருப்பமில்லாத பிள்ளைகளை அவர்களின் எண்ணத்திற்கு விட்டுவிடுவார்களா? என்பதை ஏனோ சிந்தித்துப் பார்க்கின்றார்கள் இல்லை என்பது எனது ஆதங்கம். மொழி ஒரு இனத்தின் பண்பாட்டின் ஆணிவேர் என்பதனை உணர்ந்துகொள்ளவேண்டும். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக அன்னிய மண்ணில் வாழ்ந்த யூதர்களைப் பாருங்கள். அவர்கள் எங்கிருந்தாலும் தங்கள் மொழியை மறந்தார்களா? அவ்வளவுக்குத் தங்கள் மொழிமீது பற்றுக்கொண்டவர்களாக இருப்பதே அதற்குக்காரணம். ஆனால் தமிழர்கள் யூதர்களை உதாரணத்திற்கு மேடைகளில் காட்டுகின்றார்களே ஒழியப் பின்பற்ற விளைவதுமில்லை தங்கள் பிள்ளைகளுக்கு மொழியைக் கற்பிக்க முன்வருவதுமில்லை.

புலம்பெயர் நாடுகளில் தமிழ் மொழி சோறுபோடுமா? என்ற கேள்வியைப் போன்றதே எமது பாரம்பரிய இசை, நடனம் கற்போரின் நிலையும் என்பது உண்மை, இசை கற்போரில் அதனை வாழ்க்கைத் தொழிலாகக் கொள்ளக்கூடியவர்கள் எத்தனை வீதமானவர்கள் என்பது கேள்விக்குறியே. 'எதிர்வீட்டுக்காரனிலும் பார்க்க எனக்கு இரண்டுமடங்காக வேண்டும்' என வரம்கேட்ட கதையாகத்தான் மற்றப்பிள்ளைகள் இசை கற்கின்றார்களே எமது பிள்ளையும் கற்கவேண்டும் என விரும்பும் பெற்றோரின் நிலையாகக் காணப்படுகின்றது. ஒரு பிள்ளையின் சாரீரம் என்பது இசைக்கு மிக முக்கியமானது, அந்தப்பிள்ளைக்கு இசை நன்கு வருமா? அல்லது அந்தப்பிள்ளைக்கு நல்ல குரல்வளம் உண்டா என்பதனைக் கூடப் பார்க்காது இசை கற்கவைத்து அந்தப்பிள்ளையின் நேரத்தை வீணடிக்கும் பெற்றோரும் எம்மத்தியிலே உள்ளனர். இசை, நடனம் போன்ற கலைகளைத் தமது பிள்ளைகளுக்குக் கற்க வைக்கும் பெற்றோர் சிந்தித்துச் செயற்படுவது மட்டுமன்றி ஏதோ எனது பிள்ளையும் படிக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு செயற்படுவதனை நிறுத்திக்கொள்ள வேண்டும்.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்" - (குறள் 517)

என்னும் குளறின் மெய்ப்பொருளை உணர்ந்து பிள்ளைகளின் விருப்பு - வெறுப்பு, இயலுமை - இயலாமை, தகுதி - தகமை என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு எந்தத்துறை சிறப்பானது என்பதனைப் பிள்ளைகளின் விருப்பத்தோடு அணுகி அதன்வழி விடுவதால் பிள்ளைகள் மிகுந்த உற்சாகத்தோடு செயற்படுவார்கள் என்பது உளவியலாளரின் கூற்று. அதன் வண்ணம் எமது பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை நெறிப்படுத்துவதே அவர்களின் எதிர்காலத்திற்குச் செய்யும் பாரிய பணியாகும்.

# தமிழர் ஆடற்கலை

- வாசுகி -

நடனம் அல்லது ஆடல் மனிதனுக்கு இயல்பான வெளிப்பாடுகளில் ஒன்று. ஆடலை கூத்து என்றும் நாடகத்தை கதை தழுவி வரும் கூத்து என்றும் கூறுவர். தமிழர் மத்தியில் கும்மியாட்டம், கோலாட்டம், பரதநாட்டியம் எனப் பல ஆடல் வடிவங்கள் உள்ளன. தமிழர் மரபில், சூழமைவில் சிறப்புற்ற ஆடற்கலை வடிவங்கள் தமிழர் ஆடற்கலை எனலாம்.

பரதநாட்டியம் தென்னிந்தியாவிற்குரிய, சிறப்பாகத் தமிழ்நாட்டிற்குரிய நடனமாகும். இது மிகத் தொன்மை வாய்ந்ததும், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பிரபலமானதுமாகும். சிவனின் ஒரு தோற்றமான நடராசர் உருவம் உலகப் புகழ்பெற்ற ஒன்றாகும். இந்த ஆடவல்லான் உருவம் சைவ நாயன்மார் காலத்தில் உருக் கொண்டு, பிற்காலச் சோழர் காலத்தில் மிகப் பெரியளவில் பரவிய ஒன்றாகும். சிவபெருமான் மகிழ்ச்சியின் உச்சத்தில் ஆடும் நடனம் 'ஆனந்த தாண்டவம்' என்றும் அழிக்கும் கடவுடளாக அவர் ஆடும் நடனம் 'உருத்ர தாண்டவம்' என்றும் அழைக்கப்படுகிறது.

உடல் அசைவுகளையும், கை முத்திரைகளையும் சேர்த்து 'அடவு' என்று வழங்கப்படுகிறது. பல அடவுகள் சேர்ந்தது 'ஜதி' எனப்படும். அடவுகள் சுமார் 120 உள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட 80 வரைதான் தற்போது பயன்பாட்டில் உள்ளன. சிதம்பரம் மற்றும் மேலக்கடம்பூர் ஆலயத்தில் உள்ள சிற்பங்களில் இவை செதுக்கப்பட்டுள்ளன. பரத நாட்டியத்திற்கு பாடல், நட்டுவாங்கம் மற்றும் இசைக்கருவிகளின் துணை தேவை. பரதநாட்டியம் பயிற்றுவிப்பதில் பல்வேறு பாணிகளும் உள்ளன. அவற்றில் சில பந்தநல்லூர் பாணி, வழுவூர் பாணி, தஞ்சாவூர் பாணி, மைசூர் பாணி, காஞ்சிபுரம் பாணி ஆகியவை ஆகும்.

பரத நாட்டியத்தில் அபிநயம் என்பது முகத்தைக் கொண்டு உணர்வுகளையும் அதன் தன்மையையும் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளும் வழி எனக் கொள்ளலாம். இதற்கு கற்பனை அவசியம். கைகளினால் மொழியப்படும் வார்த்தைகளாகிய முத்திரைகளைப் பிணைந்து வாக்கியமாக்குகிறார்கள் நடனக் கலைஞர்கள். அவற்றின் பொருளைப் பார்வையாளர்கள் மேலும் புரிந்து கொள்ளும்படி வெளிப்படுத்த உதவுவது தான் 'பாவம்'. ஒன்பது உணர்வுகளை பரதநாட்டியம் மூலம் வெளிப்படுத்துவார்கள். நடனத்தை முறைப்படி பயின்று, குருவிடம் நன்கு தேர்ச்சி பெற்று, குருவுக்கு மரியாதை செலுத்தி பலர் முன்னிலையில் முதற்தடவையாக அரங்கேற்றுவதை அரங்கேற்றம் என்பர். நடனமாடுபவரின் அழகு, உயரம், அசைவு, பார்வை, நளினம் அரங்கேற்றத்துக்கு மெருகூட்டும் என்பதில் ஐயமில்லை, அமைதியாக இருந்து நடனமாடுபவரின் ஒவ்வொரு அங்க அசைவுகளையும் அவதானித்து தீர அலசி ஆராயுங்கள். அப்போது பரதத்தின் புனிதமும் அதில் உள்ள இரகசியமும் புரியும்.

தமிழ்நாட்டைப் போலல்லாது ஈழத்தில் பரதநாட்டியம் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினரினதும், செல்வந்தரினதும் சொத்தல்ல. ஈழத்தமிழர்கள் பலரும் தங்கள் பிள்ளைகளுக்குப் பரதநாட்டியம் கற்பித்துப் பெரும் பணச்செலவில் அரங்கேற்றம் செய்விக்கின்றார்கள். ((அதேவேளையில் பரதநாட்டிய அரங்கேற்றத்தன்று வெளியிடப்படும் மலர்களில் பரதநாட்டியம் பரதமுனிவரால் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டதாகக் கூறப்படுகிறது. தமிழர்களின் தமிழ் நாட்டிய விழாவுக்கு வந்து சமஸ்கிருதத்தின் புகழை எண்ணிக்கொண்டு போகிறார்கள். ))

பரதநாட்டியத்தின் உயிரும் வேர்களும் தமிழரின் கலாசாரத்திலும், பண்பாட்டிலும் ஆழப் பதிந்திருக்கின்றது. ஆடற்கலையில் தமிழர் பெரும் வல்லுநர் என்பதைச் சிலப்பதிகாரமும், குறிப்பாக அரங்கேற்று காதையும் குன்றக் குரவை, ஆய்சுயர் குரவையும் எடுத்துக் காட்டும். மாதவி ஆடலிலும், யாழ் மீட்டுவதிலும், இசை பாடுவதிலும் பெரும் ஆற்றல் பெற்றிருந்தாள் என்று சிலப்பதிகாரம் எடுத்துக் காட்டுகின்றது. மாதவியின் அரங்கேற்றத்தை விபரிக்கும் இளங்கோவடிகள், ஆட்டவகைகள், உடையலங்காரம், ஒவ்வொரு வகையான ஆட்டத்திற்கும் தேவையான மேடையின் அளவு, அலங்காரத்தைக் கூட விபரிக்கிறார்.

பரதநாட்டியம் என்பது தமிழரின் கலை வடிவமாகிய சதிருக்குப் புத்துயிரும், புது வடிவமும் கொடுக்கப்பட்ட பின் இணைக்கப்பட்ட புதிய பெயர். தமிழரின் நாட்டியக் கலையான சதிர் அல்லது பரதநாட்டியத்திற்கும் பரதமுனிவருக்கும், சமஸ்கிருதத்துக்கும் எள்ளளவும் தொடர்பு கிடையாது.

சோழர் காலம் தொடங்கி, கோயில்களில் ஆடல் வல்ல மகளிர் அமர்த்தப் பெற்றிருந்ததைக் கல்வெட்டுச் செய்திகள் செப்புகின்றன. தேவ அடியார்கள் அல்லது தேவதாசிகள் எனப்படும் பெண்கள் சைவசமயத்துக்குத் தொண்டு செய்வதற்குத் தங்களை அர்ப்பணித்தவர்களாக இருந்தார்கள். இவர்கள் சைவசமய நெறிகளிலும், ஆடல், பாடல், ஓவியங்கள் வரைவதிலும் வல்லவர்களாகத் திகழ்ந்ததோடு மக்களின் நன் மதிப்பைப் பெற்றவர்களாக

இருந்தார்கள். இவர்கள் இன்றைய கிறிஸ்தவ சகோதரிகள் போலவும் புத்தபிக்குணிகள் போலவும் தமிழ்நாட்டுக் கோயில்களில் தொண்டாற்றினார்கள்.

சோழரின் வீழ்ச்சிக்குப் பின்பு பிறமதத்தவர்களின் படையெடுப்பினால் கோயில்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டன. துன்புறுத்தப்பட்டதுடன், ஆதரவற்றிருந்த அந்த தேவரடியார்கள். 'தேவடியாள்' களாக்கப்பட்டார்கள். அவர்களால் சைவாலயங்களில் ஆடப் பெற்ற சதிராட்டமும் கீழ்த்தரமானதாகக் கருதப்பட்டது. ஒரு பழந்தமிழ்க்கலை வீழ்ச்சியுற்றது.

இந்த நிலையில் தான் 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தஞ்சாவூர் சகோதரர்கள் பொன்னையா, சின்னையா, வடிவேலு ஆகியோரும் அவர்களைத் தொடர்ந்து மீனாட்சி சுந்தரம்பிள்ளை, கிருஸ்ணையர், பாலசரஸ்வதி, ருக்மணிதேவி அருண்டேல் போன்ற பலர் தமிழரின் சதிராட்டத்துக்குப் புது வடிவமும், புத்துயிரும் கொடுத்தார்கள். சதிராட்டத்துக்கு திரு. கிருஸ்ணையர் அவர்கள் தான் 1930 இல் பரதநாட்டியம் என்று பெயர் கொடுத்தார். பரதநாட்டியத்தின் வளர்ச்சியில் திருமதி. ருக்மணிதேவி அருண்டேலினதும், கலாசேத்திரத்தினதும் பங்களிப்பு அளப்பிட முடியாதது.

அதே வேளையில் பரதநாட்டியத்தில் ஆரியர்களின் ஆதிக்கம் மேலோங்கத் தொடங்கியது. அதனால் அவர்கள் பரதநாட்டியத்தை சமஸ்கிருதப்படுத்தினார்கள். அதனால் பரத நாட்டியத்தின் தமிழ் வேர்கள் மறைக்கப்பட்டன. பரத(சதிர்) நாட்டியத்தில் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களெல்லாம் நடை உடையலங்காரம், பல்வேறு விதமான பாடல்களில் மட்டும் தான். அடிப்படை நாட்டிய நுட்பத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. இதே பரதநாட்டியத்துக்கு சதிராட்டம் அல்லது தேவராட்டம் என்ற பெயரும் வழங்கப்பட்டு வந்துள்ளது.

பரதநாட்டியம் அல்லது சதிரின் வேர்கள் ஆழமாக தமிழரின் பண்பாட்டிலும் வரலாற்றிலும் பின்னிப் பிணைந்திருக்கிறது. ஈழத்தமிழர்கள் மட்டுமல்ல உலகத்தமிழர்கள் அனைவரும் பரதநாட்டியத்தை மீண்டும் முழுவதும் தமிழாக்க முயற்சிக்க வேண்டும்.

ஆதாரம்:

1. www.unarvukal.blogspot.com 2.www.ezilnila.com
3. தமிழ் கலைக்களஞ்சியம்' 4. திரு.பொன். குலேந்திரன் ஆக்கிய 'புனிதமான பரதநாட்டியம்'





# வயோதிபர்களுக்கான காப்புறுதி

## மிகக் குறைந்த விலையில்...

**$30.55**

$10000
60 years female
non smoker
Some conditions may apply

**Diabetic, Heart attack, Stroke, High blood pressure, cholesterol or decline from other companies**

**NO PROBLEM**

**HIRING NEW AGENTS**
**RESP & Insurance**

No Contract
No Obligation
Friendly Service
Quality Training

உங்களுக்கு காப்புறுதி நிராகரிக்கப்பட்டு அல்லது காப்புறுதி தெளிவற்ற முறையிலிருந்தால் மேலதிக ஆலோசனைகளுக்கு என்னை அழையுங்கள். CTBC வானொலியில் சனி காலை 9:00 – 10:00 மணிவரையிலும், ஞாயிறு இரவு 9:00 – 10:00 மணிவரையிலும் நான் கலந்துகொள்ளும் காப்புறுதி பற்றிய நிகழ்ச்சியைக் கேளுங்கள்.



ROYAL BROKERS CORPORATION

# Siva Kandiah

CEO & Managing General Agent

Cell: **416.315.8100**

80 Nashdene Rd., Unit 25&26, Toronto, ON M1V 5E4
Tel: 416.298.4722, Fax: 416.298.4664
E-mail: sivakandiah@royalbrokers.com

RBC Insurance
Manulife Financial
Canada Life
Assumption Life
INDUSTRIAL ALLIANCE



# ROGERS MOTORS

*Service & Repairs*

*Rajah*
Class Lic. Automotive Master Technician

45 Munham Gate, Unit #7
Scarborough, ON. M1P 2B3

Tel: 416 755 1846
Fax: 416 755 9476

# ஸ்ரீ கரன் மங்கள பவனம்

சோதிடம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும்



## சிவஸ்ரீ பொன். பஞ்சாட்சர குருக்கள்

இந்துமத குரு, சோதிடர், திருமணப் பதிவு அதிகாரி (தங்கோடை, காரைநகர்)



வண்ணமிகு அழகுக்கோலங்கள், அழகிய சடைநாகம், பூமாலைகளுக்கும் திருமணம், பதிவுத் திருமணம் மற்றும் அனைத்து இந்துமத கிரியைகளுக்கும் அத்துடன் குறைந்த வாடகையில் மண்டபங்கள் பெற்றுக்கொள்ளவும் பூமணவறை போன்ற அனைத்து ஒழுங்குகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**பரமானந்தக்குருக்கள் வாசுதேவசர்மா** BA. Hons. Sanskrit
சப்பச்சி மாவடி, நீராவியடி பிள்ளையார் கோவில் குருக்கள் சல்வயல் சாவகச்சேரி 416 892 0084

## TeL: 416 292 0033

34 Dundalk Drive, Unit #5 Scarborough. ON. M1P 4W3
(Kennedy & Ellesmere)

# கனடா காரை கலாச்சார மன்றம் காரை அபிவிருத்திச் சபையூடாக நிறைவேற்றிய பணிகள்

2009ம் ஆண்டுக்கான வைத்தியக்கலாநிதி டாக்டர். விஜயரட்ணம் விசுவலிங்கம் அவர்களின் தாயார் அமரர் திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப் பரிசில் 4 பாடசாலைகளில் உள்ள 40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500.00 வீதம் 12மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

கடந்த வருட வன்செயல்களினால் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து காரைநகரிற்கு வந்திருந்த பாடசாலை சிறார்கள் சுமார் 500பேர் வரையில் காரைநகரில் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் சேர்க்கப்பட்டிருந்தார்கள். இதில் 264 மாணவர்களும், 236 மாணவிகளும் அடங்குவர். காரைநகர் இந்துக் கல்லூரி 175, யாழ்ற்ரன் கல்லூரி 89, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை 51, பாலாவோடை அ.மி.த.க பாடசாலை 59, ஊரி 61, காரை மெய்கண்டான 13, வலந்தலை அ.மி.த.க பாடசாலை 40, வியாவில் அ.மி.த.க பாடசாலை 12. இந்த இடம்பெயர்ந்து காரைநகருக்கு வந்த பாடசாலை சிறார்களுக்கு 150,000.00ரூபாய்கள் பெறுமதியான சீருடைகள் 2009 October 30ம் திகதி வழங்கப்பட்டது.

காரைநகரைச்சேர்ந்த கிழக்குப் பல்கலைக்கழக மாணவன் வைத்திலிங்கம் ஜெகதீஸ்வரனின் மேற்படிப்பு உதவிக்காக மாதாந்தம் 5000.00ரூபாய்கள் 4வருடங்களுக்கு(240,000.00ரூபாய்கள்) 2010 January இல் திரு. கனக சிவகுமாரன் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

குழந்தை நகுல்ராஜ் நக்கீரன், வயது 18மாதங்கள் இவர் கடந்த போரில் தனது பெற்றோரை ழுந்துவிட்டார். தற்சமயம் இவர் தனது சித்தியின் பராமரிப்பில் உள்ளார். ஆனால் அந்த சித்தியின் கணவரும் கடந்த போரில் இறந்துவிட்டார். இப்படியான சூழ்நிலையில் சித்தியும் இந்த குழந்தையும் எந்தவித வருமானமும் இல்லாமல் உள்ளார்கள். எனவே இக்குழந்தையின் பராமரிப்புச் செலவிற்கு எமது கனடா-காரை கலாச்சார மன்றத்தை அணுகியுள்ளார்கள். கடந்த வன்செயலில் தனது பெற்றோரை இழந்த 18மாதக் குழந்தை நக்கீரனுக்கு 18வயது வரைக்குமான நீண்ட கால பராமரிப்பு உதவியை கனடா வாழ் காரை அன்பர் ஒருவர் மனமுவந்து வழங்க முன்வந்துள்ளார். இவருக்கு மாதம் ரூ.2000.00 வீதம் அவருடைய 18வயது வரைக்கும் இந்தப்பணம் வழங்கப்படும். (18வயது வரைக்குமான மொத்த பராமரிப்புச் செலவு 4இலட்சத்து 32ஆயிரம் ரூபாய்கள்).

அத்தோடு இதே குழந்தை நகுல்ராஜ் நக்கீரனுக்கு திரு. செல்வராஜா தம்பையா 10,000.00ரூபாய்களும், திரு. ஜெயச்சந்திரன் தம்பிராஜா 5,000.00ரூபாய்களும் வழங்கியுள்ளனர்.

சிறுவன் நகுல்ராஜ் நக்கீரனுக்கு வழங்கிய அதே அன்பர் அடுத்த வருடம் பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மருத்துவ பீட மாணவன் பிரேம்குமார் பிரசாத்திற்காக மாதம் 5000.00ரூபா 4வருடங்களுக்கு(240,000.00ரூபாய்கள்) வழங்கும் உதவித் திட்டத்திற்கும் தனது உதவியை வழங்க முன்வந்துள்ளார்.

காரைநகரைச் சேர்ந்த கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலத்தில் சென்ற வருடம் 5ம்வகுப்பில் புலமைப்பரிசில் பெற்ற மாணவன் ஜனகாந்தன் ஏகாம்பரம். இவர் தனது மேற்படிப்பை யாழ் இந்துக்கல்லூரியில் கற்று வருகின்றார். இவரது மேற்படிப்பு(A/L) முடியும் வரைக்கான உதவியாக மாதாந்தம் 3000.00ரூபாய்கள்(6வருடங்கள் ரூ.216,000.00) கனடா காரை அன்பர் ஒருவரினால் வழங்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த செல்வி சிவதர்சினி இரத்தினம் என்பவர் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைப்பிரிவான இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் இசைத்துறையில் கல்வி பயின்று வருகின்றார். இவரது குடும்பநிலைமை

காரணமாக இவருக்கு மாதாந்தம் 5000.00ரூபாய்கள் 4வருடங்களுக்கு(240,000.00ரூபாய்கள்) ஜெயந்தி துரைசாமி என்பவரால் ஜூன் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டுவருகின்றது.

19-2-2010இல் ஊரி பாடசாலைக்கு மின்இணைப்பு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒரு இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டது.

இதே பாடசாலையில் கல்வி பயிலும் தாய், தந்தையரை இழந்த மற்றும் வசதி குறைந்த மாணவர்களுக்கான உதவித்தொகை பாடசாலை அதிபரின் பெயர்ப் பட்டியல் எமது மன்றத்திற்கு கிடைத்த பிற்பாடு உடனடியாக அனுப்பி வைக்கப்படும்.

2010ம் ஆண்டுக்கான வைத்தியக்கலாநிதி டாக்டர். விஜயரட்ணம் விசுவலிங்கம் அவர்களின் தாயார் அமரர் திருமதி. ஞானசுந்தரம் விசுவலிங்கம் ஞாபகார்த்த புலமைப்பரிசில் காரைநகரில் உள்ள 4பாடசாலைகளில் உள்ள திறமையான வசதிகுறைந்த 40 மாணவர்களுக்கு மாதா மாதம் ரூ.500.00வீதம் 12மாதங்களுக்கு வழங்கப்பட்டது.

யா/ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலத்தின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த ஆகஸ்ட் மாதம் 6ம்திகதி நடைபெற்றது. இந்தவிழாவிற்கான உதவித்தொகையாக ரூ50,000ஐ கனடா காரை கலாச்சார மன்றம் வழங்கியிருந்தது.

காரைநகரில் கல்வியை ஊக்குவிக்குமுகமாகவும் பொதுமக்களின் பாவனைக்காகவும் ஒரு பொதநூலகம் அமைப்பது பற்றி பொதுக்கூட்டம் ஒன்று கடந்த ஆகஸ்ட் மாதம் 14ம் திகதி கனடா - காரை கலாச்சார மன்றத்தினால் கூட்டப்பட்டது. இக் கூட்டத்தில் ஏற்கனவே பொதுநூலகத்துக்கென கொள்வனவு செய்யப்பட்ட காணியில் பொதுநூலகம் அமைப்பதற்கு உதவிகள், மற்றும் நிதிசேகரித்தல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்ள 11பேர் கொண்ட ஒரு உபகுழு அமைக்கப்பட்டது. இந்த உபகுழுவின் ஒருங்கிணைப்பாளராக திரு. ராஜேந்திரம் வேலுப்பிள்ளை அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். எதிர்வரும் மாதங்களில் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

காரைநகரில் தரம் 5இல் புலமைப்பரிசில் பெற்ற 5மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு உதவியாக தலா 5000ரூபாய்களும், அத்துடன் சமுர்த்தி சிறுவர் கழகங்களின் மாவட்ட கலாசார போட்டிகளில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ள ஆறு காரைநகர் மாணவிகளுக்கும் தலா 3000ரூபாய்களும் கனடா காரை கலாச்சார மன்றத்தினால் எதிர்வரும் வாரத்தில் காரை அபிவிருத்திசபையூடாக வழங்கப்படவுள்ளது.

# தன்னை சித்தி விநாயகர் ஆலய வரலாறு

திரு. சி. தம்பிராசா B.Sc
(முன்னாள் உப–அதிபர், தியாகராசா ம. ம. வித்தியாலயம்)

காரைநகரிலுள்ள மிகப்பழைய ஆலயங்களில் தன்னைப் பிள்ளையார் கோயிலும் ஒன்றாகும். இக்கோயில் 1835ம் ஆண்டுக்கு முன்னர் கட்டப்பட்டது. தன்னைப் பிள்ளையார் கோயில் நெல்வயல்கள் சூழ்ந்த இடத்தில், திக்கரை முருகன் கோயிலுக்கு மிகவும் அண்மையில், கிழக்குத் திசையில் அமைந்துள்ளது. இக் கோயில் ஆரம்பகால அர்ச்சகர் முத்தமிழ் வித்தகராக விளங்கிய பிரம்மஸ்ரீ ச.முருகேசு ஐயர் ஆவார். இவர் தன்பிள்ளையார் மீது தன்னையமக அந்தாதி பாடியுள்ளார். காரைநகரில் முதன் முதலில் அந்தாதி பாடப்பட்ட தலம் தன்னைப் பிள்ளையார் ஆலயமாகும். ஈழத்தில் யமக அந்தாதி பாடப்பட்ட ஒரே ஒரு திருத்தலமும் தன்னைப் பிள்ளையார் கோயிலாகும்.

தன்னையமக அந்தாதியின் முதல் எழுபது செய்யுள்களும் முருகேசு ஐயராலும், மற்றைய முப்பது செய்யுள்களும் இவரது மகன் கார்த்திகேயப் புலவர் அவர்களாலும் பாடப்பட்டனவாகும். தன்னை யமக அந்தாதியைப் பூர்த்தி செய்து தமது புலமையை வெளிப்படுத்தியதற்காக கங்காதர சாஸ்திரிகளால் இவருக்கு புலவர் என்னும் பட்டம் சூட்டப்பட்டது. அப்போது இவருக்கு வயது 18ஆகும். அந்தாதியில் முதற் பாடலின் அந்தம் அடுத்த பாடலின் ஆதியாக வரப்பாடுவதாகும். யமக அந்தாதியில் முதல் எழுத்து தொடங்கி அடுத்த பத்து எழுத்து ஈறாக ஓர் அடிபோல் நான்கு அடிகளும் பாடப்படுவதாகும். ஓர் அடியில் வந்த பொருள் மற்றோர் அடியில் வரக்கூடாது. ஒவ்வோர் அடியிலும் பொருள் வேறுபட்டு இருத்தல் வேண்டும். இத்தகைய சிறப்புடையது யமக அந்தாதி. இந்திய அறிஞர் ஒருவரால் எழுதப்பட்ட 'அந்தாதி இலக்கியம்' என்னும் நூலில் தன்னையமக அந்தாதி பற்றியும் குறிப்பிட்டிருப்பது, இதன் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகிறது. ஈழத்தில் 'அந்தாதி இலக்கியத்தில்' இடம் பெற்ற தலம் தன்னைப் பிள்ளையாராகும்.

தன்னைப் பிள்ளையார் இராமேஸ்வரத்திலுள்ள கணபதி திட்டு என்னும் கிராமத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட விநாயகர் பெருமான் ஆகும். அங்கிருந்து பிராமண குடும்பத்தினர் இடம்பெயர்ந்து இரு வள்ளங்களில் யாழ்ப்பாணம் வரும் பொழுது, விநாயகர் பெருமான் வந்த வள்ளம் கடல் கொந்தளிப்பால் திசை மாறி களபூமி கிழக்குக் கடற்கரையை வந்தடைந்தது. பிராமணர் வந்த வள்ளம் பொன்னாலைக்கும் மாதகலுக்கும் இடையேயுள்ள திருவடிநிலை என்னும் கடற்கரையை அடைந்தது. அவர்கள் பல ஊர்களைக் கடந்து உடுவில் என்ற இடத்தில் உள்ள சிவன் கோயிலில் தங்கி அயலவர் உதவியுடன் வாழ்ந்து வந்தனர். தங்கள் குலதெய்வமான விநாயகப் பெருமான் சிலையை இழந்தமை அவர்கள் மனதை தாக்கிக் கொண்டிருந்தது.

ஒருநாள் பிராமணர் ஒருவர் திடீரென எழுந்து அயலவர்களை அழைத்து விநாயகப்பெருமான் சிலை காரைதீவு கிழக்குக் கடற்கரையில் தங்கி இருப்பதாக தாம் கண்ட கனவைப்பற்றிக் கூறி, அயலவர் இருவருடன் களபூமி கிழக்குக் கடற்கரையை அடைந்து, பலத்த தேடுதலின் பின்னர் சிலையைக் கண்டு மிகவும் பேரானந்தத்துடன் சிலையை தூக்கிக்கொண்டு வரும்பொழுது. சிறிது தூரத்தில் சிலையைக் கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. எனவே அவர்கள் அந்த இடத்தில் குடிசைக் கோயில் அமைத்து விநாயகர் சிலையை ஸ்தாபித்து, வேண்டிய கிரியைகளைச் செய்தனர். பூசை நடைபெற்று வந்தது.அற்புதங்கள் பல நடந்தன. இதனை அறிந்த மக்கள் ஒன்று சேர்ந்து இக்குடிசைக் கோயிலை கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் என்றவாறு ஆலயத்தை அமைத்து கும்பாபிஷேகம் செய்வித்தனர். இந்தக் கோயில்தான் தன்னை சித்தி விநாயகர் ஆலயமாகும். நித்திய பூசைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு மானாமுதலி வம்சத்தினர் தங்களுக்குச் சொந்தமான நெற்காணிகளைக் கோயிலுக்கு உடமையாக்கியதுடன், அந்தணப்பெருமக்களுக்கு ஆதரவும் நல்கி வந்தனர்.

ஆலயத்திலுள்ள விநாயகர் விக்கிரகம் மிகவும் அற்புதமானது. ஒன்றரை அடி பீடத்துடன் ஒரே கல்லில் ஒதுக்கப்பட்டது. இந்த விக்கிரகத்தில் இதன் தொப்புழ் பகுதிக்குக் கீழே பீடக்கல்லில் ஒரு துவாரம் உண்டு. விக்கிரகத்துக்கு அபிஷேகம் செய்யும் பால், இளநீர் முதலிய அபிஷேக திரவியங்கள் இத்துவாரம் வழியாக வந்து பீடத்துடன் முற்பகுதியில் வெளியேறுவது அற்புதமான நிகழ்ச்சியாகும்.

மானாமுதலி வம்சத்தைச் சேர்ந்த தம்பதிகளுக்குப் பத்து வருடங்களாக பிள்ளைப்பாக்கியம் இல்லாத பொழுது, தன்னைப் பிள்ளையாரை வணங்கியும் சந்தான கோபாலரைப் பிரதிஸ்டை செய்தும், ஆண் மகவைப் பெற்றெடுத்தனர். காரைநகரில் சந்தான கோபாலர் உள்ள ஒரே ஒரு ஆலயம் தன்னை சித்தி விநாயகர் ஆலயம் ஆகும். பல வருடங்களாக ஏட்டுப்பிரதியாக இருந்த தன்னை யமக அந்தாதியை, உரையுடன் அச்சிட்டு வெளியிடுவதற்குக் காரணகர்த்தாவாக இருந்த புலவர் மணி, கலாநிதி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக்குருக்கள், கார்த்திகேயப் புலவரின் மகன் சிவசிதம்பரஐயரின் பேரன் சிவசிதம்பரஐயர் மதுரை தமிழ் சங்க வித்துவானும் பல நூல்களின்

ஆசிரியருமாவார். இவர் மகன் மகேச சர்மா 1936இல் F.R.A.S மகிமை அங்கத்துவம் பெற்றவர். இவரின் மகள் சிவஸ்ரீ. ச. கணபதீஸ்வரக்குருக்களின் மனைவி.

தன்னைப் பிள்ளையார் ஆலயம் 200ஆண்டுகளாக எவ்வித திருப்பணிகளும் செய்யப்படாமையால், முழுமையாகப் பாதிப்படைந்த நிலையில் இருந்தபடியால் 1-4-2010இல் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற்று, விநாயகப் பெருமான் வெளியே எடுத்து ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவ் ஆலய புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு, 3-6-2010இல் அடிக்கல் நாட்டப்பட்டு, அத்திவாரக்கட்டு வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. மேல்தள கருங்கல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மிகப்பழமையான ஆலயத்தைப் புதிப்பவர் புண்ணியம் பல மடங்கு பெறுவர்.

'சீர் பெறப் புதுக்குவார் பண்டு
புரிந்துளோர் பெறும் புண்ணியம் நான் மடங்கு உறுவர்'

- (காஞ்சி புராணம்)

எனக் காஞ்சி புராணம் கூறுகிறது. இத்திருப்பணியில் இணைந்து தன்னை சித்தி விநாயகப் பெருமான் திருவருள் பெறவீராக.

'வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும'

'தன்னையன் போடு துதிப்பா ரகத்தினிற் சார்ந்திடுநா
தன்னையன் போற்று தகர்வா கனற்குத் தனிபின்றிய
தன்னையன் போத வுருவானவன்தமி யேற்குத்துணை
தன்னையன் போர்புரி யங்குச பாசம் தரித்வனே'

(தன்னை யமக அந்தாதி 8ம்பாடல்)



# உண்மையான கல்வியின் நோக்கம்

திரு.ந. சபாரத்தினம் B.A
அதிபர், இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம்

எங்கள் கல்விச்சாலைகளிலிருந்து வெளியேறும் மாணவர்கள் தாம் வாழும் உலகத்தின் இயல்புகளை, முன்னேற்றச் சக்திகளை, அவற்றினால் மனித வாழ்வு அடையும் பெறுபேறுகளை, எல்லாவற்றுக்கும் மேலாக வாழ்வு, மறைவு என்ன என்பதை உணர்ந்துகொள்வதற்கு வேண்டிய ஆரம்ப அறிவைத்தானும் பெற்றுள்ளார்கள் என்று கூறமுடியாதிருக்கின்றது. இந்த நிலையிலே கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள நாம் நமது சாதனைகளைப்பற்றிப் பெருமைப்பட்டுக்கொள்வதற்கு எத்தகைய காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

பரீட்சை என்ற அளவு கோலுக்கடங்கிய பல துறைகளிலேயே அவர்களுடைய கல்வி அமைந்து கிடக்கிறது. உயிரற்ற வெற்று உண்மைகளைச் சேகரிப்பதைத்தவிர 'உள்ள விடுதலைக்கான' மார்க்கங்களில் நமது கல்வியமையவில்லை. 'உண்மையான கல்வியின் நோக்கம் உள்ளத்தின் விடுதலையே' என்று கல்விமான்கள் கூறிய அந்த உயர்ந்த நிலையை நமது பட்டதாரிகள் எய்தவோ, எய்த எத்தனிக்கவோ முடியவில்லை. வாசாலகமான பிரசாரங்களுக்கும் குறுகிய சாதி, சமூகக் கட்டுப்பாடுகளுக்கும் நாம் தலைவணங்குவதில்லையா? நமது சாதாரண வாழ்விலே கல்லாதவர்கள் அரைகுறைக் கல்வியுள்ளவர்களிலும் பார்க்கப் படித்தவர்கள் என்றிருப்பவர்கள் கூடுதலான சகிப்புத்தன்மையையாவது காட்டுகிறார்களா?

வாழ்க்கைக்குத் தேவையானதும், அநுபவரீதியானதுமான கல்வியை விடுத்து வெறும் பள்ளிப்படிப்பினால் என்ன பயன் என்று கல்வி நிபுணர்கள் குறை கூறிவரும் இந்தக் காலத்திலே, அன்று கிரேக்க நாட்டுப் பேரறிஞர்களான பிளேட்டோவும்(Plato) அரிஸ்டோட்டலும் (aristotle) முதன் முறையாகக் கூறிய 'உள்ள விடுதலைக்கான கல்வி' என்ற வரைவிலக்கணம் பொருத்தமற்றதாகத்தான் இருக்கும். ஆனால், அவர்கள் கூறிய சிறந்த இலட்சியத்தை நாம் நன்குணரவேண்டும். இன்று 'உபயோகமான' கல்வியை மாணவன் நன்றாகக் கற்று வாழ்க்கை வசதிகளை நன்கு அமைத்துக் கொள்ளட்டும். ஆனால், அதோடுகூடப் பாடசாலைகளிலும், உயர்தரக் கல்வி நிலையங்களிலும், அவை 'உபயோகம்' குறைந்தனவாகக்கருதும் அந்தத்துறைகளிலும் பயிற்சிபெற்றுப் பண்புள்ளவனாகவும், திறமையுள்ளவனாகவும், சிறந்த பிரசையாகவும் விளங்கட்டும்.

இலக்கியம், தத்துவம், சரித்திரம் என்பனவே மனித இனத்தின் பண்புகளையும், வாழும் வகைகளையும் போதிக்கின்றன. ஆனால், பௌதிகம், ரசாயனம், உயிரியல் போன்றவை விஞ்ஞான முறையான விதிமுறைகளை மாத்திரமே போதிக்கின்றன, ஆதலால் உள்ள விடுதலையைத் தரக்கூடிய கல்வியைப் பெறுவதற்கு அந்த 'உபயோகம்' குறைந்த பாடங்களே ஏற்றவையாக இருக்கின்றன. ஆனால், இச் சமூகக்கலைகளைக் கலைக்காகவும் அவற்றின் சிறப்புக்காகவும் பயிலாமல் பரீட்சையையும் பட்டத்தையுமே குறியாகக்கொண்டு பயில்வதானால் அவையும் உள்ள விடுதலைக்கேற்ற கல்வியாக அமையமாட்டா.

தத்துவம் சமயம் என்பவற்றிற் காணப்படும் வாழ்க்கைப் பிரச்சினைகள் அல்லது சரித்திர வாயிலாகப் பெறப்படும் முடிவுகள் என்பன சுட்டிக்காட்டும் உண்மைகளை உலகினைப்பற்றியும் மனித வாழ்வினைப்பற்றியும் அநுபவமடையாத இளம் மாணவன் முற்றாக விளங்கிக் கொள்ள முடியாதென்பது உண்மையே. ஔவையும், திருவள்ளுவரும் உலகுக்களித்த அமரத்துவம் வாய்ந்த நூல்களிற் கூறப்படும் உலகஞானமும் ஒழுக்கக் கோட்பாடுகளும் வாழ்க்கையில் அநுபவ முதிர்ச்சியடையும் போதுதான் நன்கு விளங்கும். பழம்பெரும் வரலாற்று நூலாசிரியர்கள் காட்டும் கருத்துக்களை இளமுள்ளங்கள் விளங்குவது கடினமே தான். ஆனால், காலத்தோடு ஒட்டிய சம்பவங்களால் தூவிய விதை மனிதனாக வளர்ந்து வாழுங்காலத்தில் பழுத்துப் பயன் தருமன்றோ? மாணவப் பருவத்திலே சாத்திரம், இலக்கியம், தத்துவம் என்ற பாடங்கள் சீர்தூக்கியறியும் அறிவைப் பலம்பெறச் செய்கின்றன: அவற்றிற் காணப்படும் உயர்ந்த லட்சியங்களும், சிறந்த பண்புகளும் அந்தப் பிஞ்சு உள்ளத்திலே பதிந்து விடுகின்றன.

சமயச்சார்பற்ற லௌகிகக் கல்விபற்றியெல்லாம் இப்போது பேசி வருகின்றோம். அதற்கு ஆதாரமாகப் பல பெரியார்களுடையை கூற்றுக்களை எடுத்துக்காட்டாகவும் கொள்கின்றோம். அந்த லௌகிகக் கல்வி மாணவனுடைய சமூகத்தின் மதகலாசாரபாரம்பரியத்தை ஒதுக்கிவைத்துள்ளதா? தன்னைச் சுற்றியுள்ள மதகலாசாரச் சூழலிலிருந்து மாணவன் ஆத்மீகச் செல்வத்தைப் பெறுவதற்கு உரிமையற்றவனா? சேவை உணர்ச்சியை, உயர்நதலட்சியத்தை அவ்வாத்மீக உணர்ச்சி மாணவனுடைய உள்ளத்திலே வளரச்செய்யாதா? சமயம் கலாசாரம்

சமூகநீதி என்ற தற்காலக்கொள்கை என்பன யாவுமே இந்த உயர்ந்த குறிக்கோளைத்தான் வற்புறுத்துகின்றன. இத்தகைய பண்புகளை, ஆத்மீக செல்வத்தை மாணவனுடைய உள்ளத்தில்-அவன் சைவனானால் திருமுறைகளிலிருந்தும், கிறிஸ்தவனானால் பைபிளிலிருந்தும், பௌத்தனானால் தர்மபதத்திலிருந்தும், முகமதியனானால் குரானிலிருந்தும் பதியச்செய்வதே கல்வியின் நோக்கமாகும். பாடசாலைக் கல்வியென்பது அவன் அங்கே சம்பாதித்துக்கொள்ளும் அறிவன்று. பாடசாலையையோ சர்வகலாசாலையையோ மாணவன் விட்டுவிலகும்போது மேலும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டுமென்று அவனுடைய உள்ளத்தில் எழும் ஆர்வமே உண்மையான கல்வியாகும். பாடசாலையிலாரம்பித்த கல்வி, வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து செல்கிறது. அதற்கு முடிவில்லை. 'படித்த அனைத்தையும் மறந்தபின் எஞ்சிநிற்பது எதுவோ அதுவே கல்வி' என்று ஒரு பழமொழியும் உண்டு. அங்ஙனம் எஞ்சிநிற்பது எது? 'எப்பொருளைக்கேட்டாலும், அப்பொருளில் மெய்ப்பொருளைக் காண்பதுவே அது.'

இயற்கையன்னை இந்தநாட்டிலே நமக்கு எல்லாவகையான செல்வங்களையும் தந்திருக்கிறாள்: லௌகிகம், கலை, மனிதவாழ்வு இவையனைத்துக்கும் ஏற்றவளங்கள் பலவற்றை அள்ளிச் சொரிந்திருக்கிறாள். ஆனாலும் எங்களிற் பெருந்தொகையானவர்கள் தேசியச் செழிப்பிலும் வறுமையினால் வாடுகிறோம். அறிவு மிகுந்த ஒரு யுகத்திலே அறியாமையால் வாடுகிறோம்: வைத்தியசாஸ்திர அறிவு முன்னேறியுள்ள ஒரு காலத்திலே நோய்களால் நலிவடைகிறோம். எவ்வளவு காலத்துத்தான் இந்த மாறுபட்ட நிலையைக் கல்விமான்கள் பார்த்துக்கொண்டிருக்கப்போகிறார்கள்?

இரண்டு கருத்துக்கள் நமது கவனத்துக்கு வருகின்றன. உண்மையான மாணவனுக்குரிய மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல் - அதாவது அறிவைத் தேடுவதில் தணியாத ஆர்வமும் குன்றாத ஊக்கமும் கொள்ளுதல் ஒன்று. நம்மோடு கூடவாழும் மக்களின் சாதி-சமய-நிற-வகுப்பு வேறுபாடுகளைப் பாராது உண்மையான மனிதாபிமானத்தை வளர்த்துக் கொள்ளுதல் மற்றது. அறிவும் மெய்ஞ்ஞானமும் இணையவேண்டும்: விவேகமும் அன்பும் ஒன்றுகூடவேண்டும். அங்ஙனம் கலந்து பரிணமிக்கும்போதுதான் குறுகிய மனப்பான்மைக்கு ஏதுவான ஆசாபாசங்களைக் கடந்து நிற்கும் மனத்திண்மையும் ஆக்கபூர்வமான சக்தியும் நமக்குக் கிடைக்கும். சமூகத்தின் பாரம்பரியமான கட்டுப்பாடுகள் மாறுபட்டாலும் உண்மையின் வழியிலே நீதியின் முன்னணியிலே நம்மை இட்டுச்செல்ல உதவுவதும் அந்த மன உறுதியேயாகும்.

நன்றி: சைவமகாசபை பொன்விழாமலர்.



Residential and Commercial

# Mortgages

90% வரை இரண்டாம் அடமானம்

கடன் அனைத்துக்கும் ஒரு மாதாந்த கட்டணம்

கிறடிற் ஸ்கோர் குறைவானாலும் மோட்கேச் பெறமுடியும்



416-283-2377 EXT 218

1st Mortgage

2nd Mortgage to 90%

Debt Consolidation

Refinancing

CMP Canadian Mortgage Awards 2010

OBSIDIAN

MOHAN CANAGASABAI

Mortgage Agent Lic #M08009713

DIRECT 647-273-3766 FAX 416-283-5820

35 GRAND MARSHALL DRIVE, SCARBOROUGH ON M1B 5W9

Some Conditions Apply. Rates may chance without notice. Brokerage Lic #10473

# அகவை எழுபது கடந்த காரைநகர் மணிவாசகர்சபை

ஆறுமுகம் செந்தில்நாதன்
(முன்னைநாள் செயலாளர் காரைநகர் மணிவாசகர் சபை
முன்னைநாள் செயலாளர் அருள்மிகு சிவன் கோவில் - சூரிச் சுவிற்சர்லாந்து
தலைவர் சுவிஸ் - காரை அபிவிருத்திச்சபை - சுவிற்சர்லாந்து)

இற்றைக்கு முப்ப∴து வற்சரத்தின்
முன்புசைவ மிலங்கி யோங்கக்
கற்றறிந்தார் வாழ்காரை நகரின்மணி
வாசகப்பேர் கழகந் தோன்றி
உற்றசிவ நெறிப்பனுவல் வெளியிட்டும்
பாடங்க ளோது வித்தும்
மற்றறிவிற் றேர்ச்சிபெறு மாணிகட்குப்
பரிசளித்தும் வருமானன்றே.
(ஈழத்துச்சிதம்பரபுராணம்-விழாவயர் சருக்கம்-1970)

உலகம் உய்வதற்கும் மனிதனை நல்வழியில் வாழவைப்பதற்குமாக தோன்றியதுதான் மதம் என்கின்ற நீதிவழியாகும். இதனை கச்சியப்பர் "மேன்மைகொள் சைவநீதி" என்றும், "நீதியே செல்வத்திருப்பெருந்துறையில" என்று மணிவாசகரும் எடுத்தியம்பியதை நோக்கற்பாலதாகும். அதில் அநாதியான சமயம் என்று சொல்லப்படுவது சைவசமயமாகும். இந்த சைவசமயவழிபாட்டில் பல வழிகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றே சரியையும்,(சரியை-திருத்தொண்டு) சங்கமம் (சங்கமம்-அடியார்திருக்கூட்டம்) வழிபாடும் ஆகும்.

இவ்வழிபாட்டில் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வழிகாட்டி சென்றவர்கள்தான் சமயகுரவர்கள் என்கின்ற நாயன்மார்கள் ஆவர். அதிலும் ஞானமார்க்கத்தில் நின்று வழிபாடியற்றியவர் மணிவாசகர் என்கின்ற மாணிக்கவாசகர் ஆவார். இவரது பெயரினாலே தொடங்கப்பட்ட ஆன்மீக சபைதான் காரைநகர் மணிவாசகர்சபை ஆகும். இதனுடைய ஸ்தாபகராக விளங்குபவர் திருஉத்தரகோசமங்கை என்கின்ற திருப்பெருந்துறையிலிருந்து (தமிழ்நாடு, இந்தியா) வருகைதந்து ஈழத்துச்சிதம்பரநாதனுக்கு மலர்சாத்துகின்ற பெருந்தொண்டாற்றிய இராமசாமிஐயர்-சுந்தரேஸ்வரஐயர்-சரவணபவக்குருக்கள்-கணபதீஸ்வரக்குருக்கள் இவரது இளைய புத்திரர் பண்டிதர் கலாநிதி சிவசிறி **க. வைத்தீஸ்வரக்குருக்கள்** ஆவார். சடையாளி என்னும் குறிச்சியில் 01-01-1940 இல் இச்சபை தொடங்கப்பட்டது. இச்சபையின் நோக்கம் காரைநகரில் உள்ள சிறுவர்களிடையே சைவசமயப் பற்றினை வளர்ப்பதுவும் பெரியவர்களிடம் ஆன்மீகத்தினை தெளிவுபடுத்துவதுமாக விளங்குகின்றது. பல ஆண்டுகளாக சைவசமயப் பணி ஆற்றிவருகின்ற இச்சபையின் ஆரம்பகால தலைவராக பதவிவகுத்தவர். சிவசிறி க. வைத்தீஸ்வரக்குருக்கள் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

### மணிவாசகர் விழா

சபை ஆரம்பித்து பதினைந்து ஆண்டுகளின் பின்னரே ஈழத்துச்சிதம்பரத்தில் மணிவாசகர்விழா (1955) ஆரம்பமானது. அன்றைய நாள் மகாவித்துவான் சி. கணேசையர் நந்திக்கொடியினை ஏத்திவைக்க அக்காலப்பகுதியில் அமைச்சராகவிருந்து சேர். கந்தையா வைத்தியநாதன் தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்க பெருவிடயமாகும். காரைநகர் மணிவாசகர் சபையானது நடராஜப்பெருமான் திருநடம் புரிகின்ற ஈழத்துச் சிதம்பரம் என்று எல்லோராலும் போற்றப்படுகின்ற காரைநகர் சிவன் கோவிலில் மார்கழிமாத திருவெம்பாவை உற்சவத்தின் 6ஆம் நாள் மணிவாசகர் விழா என்ற பெயருடன் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறுவது வழக்கம்.

### திருவாசகத்திருமுறை ஊர்வலம்.

மணிவாசகர்விழாவின் முதலாம்நாள் திருவாசகத்திருமுறை ஊர்வலமாக சிவசிறி ச. கணபதீஸ்வரக்குருக்களினது திருவாசக ஏடும், மாணிக்கவாசகர் திருவுருவப்படமும் பிற்பகல் 3 மணிக்கு சடையாளி ஞானவைரவர் ஆலயத்திலிருந்து பூசைவழிபாட்டுடன் ஆரம்பமாகி மாப்பாணவூரி, இலகடி, சயம்புவீதி வழியாக மடத்துக்கரை அம்மன் ஆலயத்தை அடைந்து அங்கு பூசைவழிபாடுகள் இடம்பெற்று அங்கிருந்து கணக்கணார்கண்டி, சம்பந்தர்கண்டி, நடுத்தெரு,

பண்டித்தாழ்வு, பெரியமணல், சடையாளி ஊடாக ஈழத்துச்சிதம்பர தேவஸ்தான வசந்தமண்டபத்தை சென்றடைந்து அங்கு மங்களவாத்தியம், திருமுறை ஓதலுடன் பிரதம சிவாச்சாரியரினால் தீபாராதனை செய்யப்படும். (இந்த ஊர்வலத்தின்போது இப்பகுதிவாழ்மக்கள் தமது வீடுகளின் முன்பாக பூரண கும்பம்வைத்து வரவேற்று திருவாசகத்திருமுறை ஊர்வலத்திற்கு வழிவாடு செய்வது வழக்கம்) ஆலயத்தில் நடராஜப்பெருமானுக்கு இரவு திருவெம்பாவை ஓதல் முடிந்த பின்னர் வசந்தமண்டபத்தில் மணிவாசகர்விழா ஆரம்பமாகி இலங்கையிலும் இந்தியாவிலிருந்தும் பேரறிஞர்கள் வருகைதந்து சொற்பொழிவாற்றுவார்கள்.

இவர்களை வரிசைப்படுத்துவதானால் மகாவித்துவான் ச.தண்டபாணிதேசிகர், உயர்திரு தொ.மு.பாஸ்கரத்தொண்டமான் செஞ்சொற்கொண்டல் பேராசிரியர் சொ. சிங்காரவேலன், தருமையாதீனப்புலவர் வி.சா. குருசாமி தேசிகர், பேராசிரியர் கு. சுந்தரமூர்த்தி, டாக்டர் இரா. செல்வகணபதி, திருமதி சந்திரா செல்வகணபதி, உயர்திரு. க. வச்சிரவேலுமுதலியார், புலவர் சி. குழந்தையம்மாள், வித்துவான் கி.வா. ஜகந்நாதன், வித்துவான் ப.நீலா,கிருபானந்தவாரியாரின் வாரிசு தேச.மங்கையற்கரசி இவர்களுடன் இலங்கையின் சிறந்த பேச்சாளர்களும் இணைந்து கொள்வார்கள். சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முப்பது வருடங்களுக்கு மேலாக தொடர்சொற்பொழிவும் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன், தமிழருவி த. சிவகுமாரன், இ.ஜெயராஜ் (அகிலஇலங்கை கம்பன்கழகம்), சம்ரகமூவா பல்கலைக்கழக விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன், பண்டிதர் க. மயில்வாகனம், ஆத்மஜோதி நா. முத்தையா நல்லை திருஞானசம்பந்த ஆதீனமுதலாவது குருமுதல்வர் சுவாமிநாதத் தம்பிரான்(மணிஐயர்),இரண்டாவதுகுருமுதல்வர் சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியசுவாமிகள், (இன்றும் ஆரம்பவிழாத் தலைவராக இருந்து வருகிறார்) வித்துவான் மு. சபாரத்தினம், வித்துவான் க. முருகேசன், யாழ். இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் ந. சபாரத்தினம், செஞ்சொற்செல்வன் ஆறுதிருமுருகன், புலவர் ஈழத்துச்சிவானந்தன், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம், பேராசிரியர் சுப்பிரமணிய ஐயர், கலாநிதி ப. கோபாலக்கிருஸ்ணஐயர், யாழ் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு க. சிவராமலிங்கம், திரு. க. பாலசுப்பிரமணியம் பிரதேசசபை காரைநகர், இன்னும் பலர் எழுத்திலடங்காத பெரியார்கள் இச்சபையில் சமய சொற்பொழிவாற்றியுள்ளார்கள். காரைநகர் மணிவாசகர்சபையினது தலைப்பு வாசகமாக என்றும்உள்ளது. "வேண்டத்தக்க தறிவோய் நீ" என்ற திருவாசகம் ஆகும். இதற்கு ஒரு பெரிய சந்திப்பு உண்டு. அதனை இங்கு சுருங்கக் கூறுகின்றேன். சிவத்திரு. க. வைத்தீஸ்வரக்குருக்கள் அவர்கள் தனது மனதில்உருவான சிந்தனையை யோகர் சுவாமிகளிடம் கூறியபோது அவர் ஆசிகூறி "வேண்டத்தக்கதறிவோய் நீ" என்ற திருவாசகத்தைப் பாடினார். இதுவே காரைநகர் மணிவாசகர் சபைக்குரிய தாரகமந்திரம் ஆகும். இச்சபையின் ஆரம்பகால உறுப்பினர்கள் பலர் திருவாளர்கள் ந.அருளையா, த. இராசரத்தினம், வி. சுப்பிரமணியம், சு. வே. ஆறுமுகம், வே. ஆறுமுகம் (எனது தந்தையார்) அ.சுந்தரம்பிள்ளை, அ. மாணிக்கம் (இருவரும் சிவபதமெய்திய ஈழத்துச்சிதம்பர ஆதீனகர்த்தா அப்பாக்குட்டி ஆண்டிஐயாவினது தம்பிமார்) வே. ச. கந்தையா வே. ச.வேலுப்பிள்ளை, ச. ஆசைப்பிள்ளை, வீ.வன்னியசிங்கம், சி. வேலுப்பிள்ளை, மு அம்பலவாணர், சி.ஆறுமுகநாதன், க.சிற்றம்பலம், ந. சபாரத்தினம், நா. கனகசுந்தரம் (நாகமுத்துப்புலவரின் மகன்), வைத்தியகலாநிதி கு. தண்டாயுதபாணி ஆவார்கள். தொடர்ந்து இன்றுவரை பற்பல அன்பர்கள் இச்சபையில் பணி செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சபையின் பணிகள்

என்நினைவில் உள்ளவை 19-08-1970 பண்டிதை தங்கம்மா அப்பாக்கட்டி அவர்களுக்கு சிவத்தமிழ்ச்செல்வி என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தமை.

உவப்புடன் உலகோ ரெல்லாம் உளமகிழ்ந் தினிது வாழ்த்த
தவப்பயன் தலைசேர் நங்கை **தங்கம்மா** இற்றை நாளில்
**சிவத்தமிழ்ச் செல்வி** யென்னுஞ் சீரியல் பட்டம் சூடல்
நிவப்புறு மலைமேற் றீப நிறைசுடர் நிகர்க்கு மாலோ.

(மங்கல வாழ்த்துப்பாக்களில் 1வது பாடல்)

ஆத்மீகவள்ளல் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் காரைநகரிலுள்ள ஆலயங்களுக்கு திருத்தலயாத்திரை, மதமாற்றத்தை தடுக்க "சைவமக்களே விழித்திருங்கள்" என்ற யாழ்குடா நாடு முழுவதும் துண்டுப்பிரசுரம். 19-09-1990 - 29-09-1990 வரை "ஓம் சாந்தி பிரார்த்தனை" 27-12-2001 இந்து கலாச்சார அமைச்சராகவிருந்த தியாகராச மகேஸ்வரனை பாராட்டுச் செய்தமை, 28-12-2001 அருட்கவி சீ வினாசித்தம்பி அவர்களுக்கு பாராட்டு செய்தமை, வட்டுக்கோட்டை புலவர்மணி க.மயில்வாகனார் அவர்களுக்கு நாற்கவிராசர் என்று பட்டமளிக்கப்பட்டமை

01-01-2010 தமிழ்நாடு இந்தியா தேச. மங்கையற்கரசி அவர்கட்கு பைந்தமிழ்ச்செல்வி பட்டம் வழங்கியமை, 08-10-1961இல் பண்டிதமணி சுவாமிநாதன் அருளம்பலவனாருக்கு பாராட்டுச்செய்தமை, 04-12-1985 நல்லூர் வீதியிலிருந்த ஆறுமுகநாவலர் சிலை நகர்த்தியமைக்கு கண்டனத்துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டமை, 16-06-2004 கனடா சைவசிந்தாந்த மன்றத்தலைவர் தி. விஸ்வலிங்கம் அவர்களுக்கு பாராட்டுசெய்யப்பட்டமை என சபையின் பணிகள் நீண்டுகொண்டே செல்கின்றன. இவைகளுடன் வருடாவருடம் கார்த்திகை மாதம் காரைவாழ் சைவ மாணவர்களுக்கு (ஆண்டு 3 முதல் ஆண்டு 11 வரை) சைவசமயபாடப்பரீட்சை நடாத்தி சித்தி பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு பரிசில்களும் அதிகூடிய புள்ளி யைப்பெற்ற மாணவர்களுக்கு தங்கப்பதக்கமும் ஈழத்துச்சிதம்பர வசந்தமண்டபத்தில் திருவாதிரைத் தேரிலன்றுஇரவு நடைபெறுகின்ற மணிவாசகர் விழாவில் வழங்கப்படுகின்றது.

## வெளியீடு

ஈழத்துச்சிதம்பர சுந்தரேஸ்வரர் திருப்பதிகம், திருவாதிரைமலர் 5, பொன்விழாமலர், ஆண்டிகேணி ஐயனார்புராணம், தமிழ்நாட்டிலிருந்து வருகைதந்து சொற்பொழிவாற்றியவர்களது தலைமைப்பேருரை.

இத்துடன் தற்பொழுதும் பிரதிவெள்ளிக்கிழமை தோறும் ஈழத்துச்சிதம்பரத்தில் காலை 8மணி முதல் பிற்பகல் 2மணிவரை திருவாசக முற்றோதல், சிவராத்திரிவிழா, மணிவாசகர்பூசை என்பன சபையால் நடாத்தப்பட்டு வருகின்றது.

## காரைநகர் மணிவாசகர்சபையில் தொண்டாற்றிய தலைவர்கள்

| | ஆண்டு | | ஆண்டு |
|---|---|---|---|
| சிவசிறி க. வைத்தீஸ்வரக்குருக்கள் | 1940 | திரு ஆ. தியாகராஜா M.A.,M.Litt | 1958 |
| திரு நா. கனகசுந்தரம் | 1941-1943 | திரு அ. கனகசபை J.P.U.M | 1959 |
| திரு து. விசுவநாதன் | 1944 | திரு ஆ. விநாயகசிவம்பிள்ளை | 1960 |
| திரு சி. ஆறுமுகநாதன் | 1945 | திரு இ. கந்தையா | 1961 |
| திரு ச வேலுப்பிள்ளை | 1946 | திரு க. நல்லதம்பி | 1962 |
| திரு நா. கனகசுந்தரம் | 1947 | திரு ச. சபாபதி | 1963 - 1965 |
| திரு ச. அம்பலவாணர் | 1948 | சட்டத்தரணி திரு செ. இராசையா | 1966 - 1974 |
| திரு வே. சுப்பிரமணியம் | 1949-1952 | திரு க. சிற்றம்பலம் | 1975 - 1977 |
| திரு நா. கனகசுந்தரம் | 1953-1954 | பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை | 1978 - 1980 |
| திரு வே. சுப்பிரமணியம் | 1955 | திரு செ. தேவதாசன் B.A., Dip. In Edu. | 1981 - 2000 |
| திரு ந. சபாரத்தினம் B.A. | 1956 | பண்டிதர் மு.சு. வேலாயுதபிள்ளை | 2000 - 2010 |
| பேராசிரியர் இ. கனகசுந்தரம் | 1957 | | தொடர்கிறது |

காரைநகரிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்தபோது 1991இலிருந்து சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வர தேவஸ்தானத்திலிலும்,வழக்கம்பரை முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திலும், நல்லையாதீன கலாமண்டபத்திலும் விழா நடைபெற்றது என்பதனை இங்கே சுட்டிக்காட்டுகின்றேன். தற்பொழுது மு.சு வேலாயுதபிள்ளை தலைவராகவும் து. நாகேந்திரன் செயலாளராகவும், திரு. ந. பாரதி பொருளாளராகவும் கொண்ட நிர்வாகசபை வருகின்றது.

மேன் மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

துணைநூல்கள்: காரைநகர் மணிவாசகர் சபை பொன்விழா மலர், காரைநகர் மான்மியம், திருவாதிரை மலர், ஈழத்துச்சிதம்பரம், ஈழத்துச்சிதம்பரபுராணம்.

# கனடா-காரை கலாச்சார மன்றம் Aug 8இல் 2010 நடாத்திய தமிழ்மொழித்திறன் போட்டி - 2010இல் பங்கு பற்றியோர் விபரம்

1. ஜனகன் செந்தூரன்
2. மலரோன் ஜெயக்குமார்
3. ஹரிணி விநாயகமூர்த்தி
4. சயந்தன் கணேசலிங்கம்
5. ராகுலன் செந்தூரன்
6. வாசுகி தயானந்தராஜா
7. பவிசா மோகனேந்திரன்
8. கிரீஷன் பிறைசூடி
9. துர்க்கா சிவகுமார்
10. மாதங்கி மகாராஜா
11. துளசி தவராஜா
12. கிருஜாணி நடனசபேசன்
13. செழியோன் சோதிநாதன்
14. சங்கர் ஜெயச்சந்திரன்
15. தனுஷன் மகாராஜா
16. மீரா வில்வராஜா
17. சேயோன் ஜெயக்குமார்
18. அபிஷா சர்வநாதன்
19. ராகுல் ஜீவானந்தராஜா
20. ஹரிணி தயானந்தராஜா
21. ஆரபி ராஜமோகன்
22. தனுஸ்காந்த் யோகேஸ்வரன்
23. துளசி யோகேஸ்வரன்
24. யாவின் மோகனகுமார்
25. கார்த்திக் சிவகுமார்
26. அனோஜன் சுதாகரன்
27. பவன் புஸ்பலிங்கம்
28. ஆர்த்தி ரமேஷ்
29. துர்க்கா விக்னேஸ்வரன்
30. சிந்தியா வில்வராஜா
31. கீர்த்தனன் ஜீவானந்தராஜா
32. சுபத்திரா உதயகுமார்
33. நிலுக்ஷன் தயானந்தராஜா
34. மாதுமை யோகராஜா
35. லக்ஷிகா மோகனேந்திரன்
36. கீர்த்திகா புஸ்பலிங்கம்
37. மதுரன் காந்திநாதன்
38. நிலானி பரமானந்தராஜா
39. கார்த்திக் விக்னேஸ்வரன்
40. தாரணி தேவகுமார்
41. நிஷாந்தி கணேசலிங்கம்
42. சாரங்கன் விக்னேஸ்வரன்
43. காயத்திரி பரமேஸ்வரன்
44. நிதுஷா பரமானந்தராஜா
45. சிரோமி காந்திநாதன்
46. மதுரா சோதிநாதன்
47. மயூரா சோதிநாதன்
48. நிவேதிகா புஷ்பலிங்கம்


1
2
3
4
5
6
7
8
9
10
11
12
13
14
15
16
17
18
19
20
21
22
23
24
25

26

27

28

29

30

31

32

33

34

35

36

37

38

39

40

41

42

43

44

45

46

47


கனடா-காரை கலாச்சார மன்றம் Aug 8இல் 2010 நடாத்திய
தமிழ்மொழித்திறன் போட்டி - 2010இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்


## பண்ணிசை போட்டி





### பாலர் பிரிவு
முதலாம் இடம் - வாசுகி தயானந்தராஜா
இரண்டாம் இடம் - பவிசா மோகனேந்திரன்
மூன்றாம் இடம் - ஜனகன் செந்தூரன்




### கீழ்ப் பிரிவு
முதலாம் இடம் - ஆர்த்தி ரமேஷ்
இரண்டாம் இடம் - ஆரபி ராஜமோகன்
இரண்டாம் இடம் - தனுஷ்காந்த் யோகேஸ்வரன்
மூன்றாம் இடம் - துளசி யோகேஸ்வரன்




### மத்திய பிரிவு
முதலாம் இடம் - மாதுமை யோகராஜா
இரண்டாம் இடம் - சுபத்திரா உதயகுமார்
மூன்றாம் இடம் - நிலானி பரமானந்தராஜா




### மேற் பிரிவு
முதலாம் இடம் - தாரனி தேவகுமார்
இரண்டாம் இடம் - காயத்திரி பரமேஸ்வரன்
மூன்றாம் இடம் - நிதுஷா பரமானந்தராஜா




### அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - சிரோமி காந்திநாதன்
இரண்டாம் இடம் - மயூரா சோதிநாதன்
மூன்றாம் இடம் - மதுரா சோதிநாதன்




### உயர் பிரிவு
முதலாம் இடம் - நிவேதிகா புஸ்பலிங்கம்

கனடா-காரை கலாச்சார மன்றம் Aug 8இல் 2010 நடாத்திய
தமிழ்மொழித்திறன் போட்டி - 2010இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்

## வாசிப்புப் போட்டி





பாலர் பிரிவு
முதலாம் இடம் - வாசுகி தயானந்தராஜா
இரண்டாம் இடம் - துளசி தவராஜா
மூன்றாம் இடம் - ஜனகன் செந்தூரன்




கீழ்ப் பிரிவு
முதலாம் இடம் - அனோஜன் சுதாகரன்
அபிஷா சர்வநாதன்
இரண்டாம் இடம் - ஹரினி தயானந்தராஜா
துளசி யோகேஸ்வரன்
மூன்றாம் இடம் - ராகுல் ஜீவானந்தராஜா




மத்திய பிரிவு
முதலாம் இடம் - துர்க்கா விக்னேஸ்வரன்
இரண்டாம் இடம் - கீர்த்தனன் ஜீவானந்தராஜா
நிலானி பரமானந்தராஜா
மூன்றாம் இடம் - நிலுக்சன் தயானந்தராஜா
லகஷிகா மோகனேந்திரன்
கிருத்திகா புஸ்பலிங்கம்




மேற் பிரிவு
முதலாம் இடம் - கார்த்திக் விக்னேஸ்வரன்
இரண்டாம் இடம் - நிதுஷா பரமானந்தராஜா
மூன்றாம் இடம் - நிஷாந்தி கணேசலிங்கம்




அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - மதுரா சோதிநாதன்
இரண்டாம் இடம் - மயூரா சோதிநாதன்




உயர் பிரிவு
முதலாம் இடம் - நிவேதிகா புஸ்பலிங்கம்

கனடா-காரை கலாச்சார மன்றம் Aug 8இல் 2010 நடாத்திய
தமிழ்மொழித்திறன் போட்டி - 2010இல் வெற்றி பெற்றோர்கள் பற்றிய விபரம்

பேச்சுப் போட்டி



பாலர் பிரிவு
முதலாம் இடம் - துளசி தவராஜா
இரண்டாம் இடம் - பவிஷா மோகனேந்திரன்
மூன்றாம் இடம் - ஜனகன் செந்தூரன்
ஹரிணி விநாயகமூர்த்தி



கீழ்ப் பிரிவு
முதலாம் இடம் - பவன் புஸ்பலிங்கம்
தனுஷ்காந்த் யோகேஸ்வரன்
இரண்டாம் இடம் - ஆரபி ராஜமோகன்
மூன்றாம் இடம் - துளசி யோகேஸ்வரன்



மத்திய பிரிவு
முதலாம் இடம் - நிலானி பரமானந்தராஜா
இரண்டாம் இடம் - கீர்த்தகா புஸ்பலிங்கம்
மூன்றாம் இடம் - துர்க்கா விக்கினேஸ்வரன்



மேற் பிரிவு
முதலாம் இடம் - நிஷாந்தி கணேசலிங்கம்
இரண்டாம் இடம் - காயத்திரி பரமேஸ்வரன்
மூன்றாம் இடம் - கார்த்திக் விக்கினேஸ்வரன்
நிதுஷா பரமானந்தராஜா



அதிமேற் பிரிவு
முதலாம் இடம் - மதுரா சோதிநாதன்



உயர் பிரிவு
முதலாம் இடம் - நிவேதிகா புஸ்பலிங்கம்.

# காரை வசந்தம் 2010 சிறப்புற வாழ்த்துகள்

*With the best compliments*

*from*

புவது ஆண்டில்

வெற்றி நடை போடுகின்றான்

உதயன்

UTHAYAN
உதயன்

தித்திக்கும் தமிழ் உலகின்
எத்திக்கும் கதிர் வீசும்

வாரசெய்தி இதழ்

Tel: 416.752.1524

Fax: 416.752.6703



# வருடாந்த கோடைகால ஒன்றுகூடல் 2010




































# காரை முற்றம் 2009





































# காரை விழுதுகள் 2009



































MARKVILLE
TOYOTA
TOYOTA
Markville
Kumar Jegasothy
Product Advisior Sales & Leasing
416 451 0565
MARKVILLE TOYOTA
5362 HWY. #7 (Just East of McCowan Road)
905-294-8100
1-800-828-6585

# ஸ்ரீ கற்பக விநாயகர் கிரியாபீடம்



திருமணம், பதிவுத்திருமணம், உட்பட அனைத்து இந்து மத கிரியைகளும், ஆகம விதிமுறைப்படி செய்துகொள்வதுடன் திருமணத்திற்கு வேண்டிய முத்துமணவறை, பூமணவறை போன்ற அனைத்து ஒழுங்குகளும் செய்துகொள்ள நாடுங்கள்.

சிவஸ்ரீ. ஐயம். ஆரிஹரக்குருக்கள் (ஹரி ஐயா)
(உரும்பிராய் - கைதடி)

**905-458-9990**

**416-989-9797**

**647-892-6780**

# கூட்டங்கள் தவறாகப் போவதைத் தடுப்பது எப்படி?

அமெரிக்க ஆய்வாளர்கள் பல்வேறுபட்ட பெரிய அமைப்புகளுடன் மேற்கொண்ட ஆய்வில் கூட்டங்கள் தவறாகப் போவதற்கு ஏதுவாகவுள்ளதென பதினாறு முக்கிய காரணிகள் இனங்காணப்பட்டன. இத்தகைய தவிர்க்கப்பட வேண்டிய பதினாறு காரணிகளும் கீழே தரப்பட்டுள்ளன.

1. நிகழ்ச்சி நிரலும் இலக்குகளும் கிடையாமை. ஒரு கூட்டத்தினுடைய இலக்குகள் S.M.A.R.T என்கின்ற ஐந்து எழுத்துக்ளைக் கொண்டதாக இருக்கவேண்டும்.
    - S - Specific - குறிக்கப்பட்ட
    - M - Measurable - அளக்கக்கூடிய
    - A - Attainable - பெறக்கூடிய
    - R - Reliable - உண்மைநிலையாக
    - T - Time Wise - காலரீதியான
2. முன்மாதிரித் தந்திதிரோபாயங்களில்லாமை. (இலக்குகளை அடையும் முறைகள் தெளிவாக வைக்கப்படவேண்டும்)
3. ஆரம்ப தயார்படுத்தல் இல்லாமை.(தகவல், ஆய்வு, எண்ணம்)
4. நேரம் பிந்தி வருதல்.
5. கலந்தாலோசிக்கப்படும் விடயத்தில் இருந்து வேறுபடுதல்.
6. கூட்டத்திற்கு அதிக நேரம் எடுத்தல்.
7. கூட்டத்திற்கு ஒழுங்கான அணுகுமுறை இல்லாமை. கலந்துரையாடலின் ஒவ்வொரு விடயத்தையும் தர்க்கரீதியாகப் பிரஸ்தாபிப்பது நல்லது.
8. முடிவில்லாத கலந்துரையாடல். ஒவ்வொரு கலந்துரையாடலும் கூட்ட அறிக்கையில் உண்மையாக எப்படி அமைக்கப்பட்டுள்ளதென்பதைப் பரிசீலிப்பதால் இரண்டு நன்மைகள் ஏற்படும், ஒன்று தப்பபிப்பிராயங்கள் ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மற்றயது அதேநேரம் கூட்டத்தில் பங்குகொள்வோர் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாகத் திருப்திப்படுவார்கள்.
9. தலைமை தாங்கி நட்த்துவதற்கான தகுதியின்மை. கூட்டத்தை நடத்தும் தலைவர் கூட்டம் சுறுசுறுப்பான முறையில் தர்க்கரீதியான ஒழுங்கில் நிகழ்கின்றதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். குறித்த விடயம் சம்பந்தமான பிரச்சினைகளில் இருந்து வேறுபடுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.
10. 'நானாவிதம்' விடயங்கள், ஏதாவது வேறு விடயங்கள், அதாவது கூட்ட நோக்கத்தோடு நேரடியாகச் சம்பந்தப்படாத நிகழ்ச்சி நிரலில் வேறு விடயங்கள் என்ற பகுதியில் எழுதப்படலாம்.
11. நேரத்தை வீணாக்கல்
12. எதிர்பாராத குறுக்கீடுகள். இது மன ஒருமைப்பாட்டைக் குறைக்கும்.
13. தீர்மானங்களின்மை - கலந்துரையாடல் முடிவில்
14. தொடர்பற்ற கலந்துரையாடல்
15. தனி ஒருவரின் ஆதிக்கம் - கூட்டத்தில் அல்லது கலந்துரையாடலில்.
16. தொடர் நடவடிக்கைகள் இல்லாமை

    ஒவ்வொரு கூட்டத்தையும் முன்னைய கூட்டத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். முன்னைய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் செயல்படுத்தப்பட்டனவா? அப்படியானால் எப்படி? உண்மையில் ஒன்றைத் தொடர்ந்து செயற்படுத்தாவிடில் கலந்துரையாடுவதால் என்ன பிரயோசனம்? முன்னைய கூட்டத்தில் என்ன நடந்தது என்று பார்த்தால் கூட்டத்திற்கு ஒரு முன்னேற்றத்தைக் கொடுத்து கலந்துரையாடல்களிலும் மற்றும் குறிக்கப்பட்ட குழுவினரின் எண்ணங்களிலும் உறுதியை வலுப்படுத்தும்.

ஒரு நல்ல கூட்டத்தை அமைப்பது தலைவரின் பொறுப்பாகும். எனினும் பங்களிப்பவர்களுடைய - தனி ஒருவருடையதும் - எல்லோருடையதுமாகும். கூட்டத்தில் சமூகம் கொடுக்காதவர்களுடைய கூட்டு முயற்சி பயன் உள்ளதாகவும் இலக்கைத் திருப்த்திகரமாக அடையக்கூடியதாகவும் இருப்பதற்கு ஒவ்வொருவரும் கூட்டத்தில் ஏற்படும் தவறுகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்.



HomeLife / Winners
Realty Inc., Brokerage*
Each office Independently owned & Operated

Bus: 905-454-7770

**Kamaljit Duggal**
Sales Representative

**Dir: 416-671-7873**
E-mail: duggal67@hotmail.com

Are you thinking of Buying or Selling?
Call Kamaljit for Honest & Professional Services

## For VIP Sellers:

Make a move... To a new Dream

* Technology Driven Selling Process
* Free Market Evaluation
* Professional Negotiation For Top Dollars
* Professional Services-Virtual Tours, Flyers & Opern Houses
* Constant Feed Back And Maximum Exposure Until SOLD.

## For VIP Buyers:

Make a move......Be a proud Home Owner

* Comprehensive Buyers Package
* Access To Professionals-Lawyers, Home-Inspectors Mortgage Consultants
* Professional Negotiators
* Personal Touck And A Sincere Service
* Special Package For New Immigrants, First Time Home Buyers

*"The referral of your friends and family is the greatest compliment you can give me, Thank you for your trust"*

காரை வசந்தம் சிறப்புற வாழ்த்துக்கள்

*With the best compliments*

*from*

# யசோ சின்னத்துரை

சட்ட நிறுவனம்

**2100 Ellesmere Road, Suite 202**
**(Markham & Ellesmere)**
**Scarborough, ON. M1H 3B7**

**TEL:416-265-3456 FAX: 416-265-2770**

# ABLE AIR MECHANICAL

## Heating Cooling Gas Services



- Residential
- Commercial
- Industrial

Sales
Service
Install

**Thiruchelvam K (Thiru)**
TSSA Certified Technician

**Phone: 416.561.7232**
**Fax: 905.554.0230**
**Email: ableairheat[illegible]mail.com**

# DURCAA SUPERMARKET

QUALITY YOU CAN TRUST



**Tel: 905.796 6762**



86 Kennedy Road
Brampton, ON

# நெஞ்சம் நிறைந்த நன்றிகள்

காரை வசந்தம் 10வது ஆண்டு கலைவிழாவில் கலந்து கொள்ள வருகைதந்த அனைத்து கனடாவாழ் காரைநகர் மக்களுக்கும், ஏனைய நாடுகளில் இருந்து வருகை தந்தோரிற்கும், அறிஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் அந்தணப்பெருமக்களுக்கும் முதற்கண் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துள்ள வைத்தியக் கலாநிதி சாயுச்சியதேவன் அவர்களுக்கும் அவர்தம் பாரியாரிற்கும் எமது நன்றிகள்.

இன்றைய காரை வசந்தம் 2010 விழாவினை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்த திரு. திருமதி சிவகுரு கந்தையா திரு. திருமதி தம்பிராஜா ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

இவ்விழாவில் கடவுள் வாழ்த்து, கனேடிய தேசிய கீதம், தமிழ் தாய் வாழ்த்து, மன்ற கீதம் பாடிய மாணவர்களுக்கும் இவற்றை பயிற்றுவித்த ஆசிரியர் சங்கீத பூஷணம் காரை ஆ.புண்ணியமூர்த்தி அவர்களுக்கும்.

இந்த காரைவசந்தம் 10வது ஆண்டின் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட டாக்டர் வி. விஜயரட்ணம், லண்டனில் இருந்து வருகை தந்துள்ள காரை நலன்புரிச் சங்கத் தலைவர். வி.நாகேந்திரம், மற்றும் லண்டனில் இருந்து வருகை தந்த திரு. ஐ.தி. சம்பந்தன் அவர்களுக்கும், சைவசத்தாந்த மன்றத் தலைவர் திரு. தி. விசவலிங்கம் அவர்களுக்கும், ஆதி அருள் நெறி மன்றத் தலைவரும் பல்வைத்திய நிபுணரும், டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம் அவர்களுக்கும், பல்வைத்திய நிபுணர் டாக்டர் தவமணி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களுக்கும்,

விழாவினை அலங்கரித்த முதல் நிகழ்வான கணபதி துதி நடனமாடிய நங்கையரிற்கும் அவர்தம் ஆசிரியர் பாலவிமல நர்த்தனாலய அதிபர், பரத கலா வித்தகர் திருமதி சித்திரா தர்மலிங்கம் அவர்களுக்கும்,

வாத்திய பிருந்தாவை தயாரித்து வழங்கிய சப்தஸ்வரா கே. உதயகுமார் அவர்களுக்கும், இந்த வாத்திய பிருந்தாவில் கலந்து கொண்ட கனடா காரைநகர் இளங்கலைஞர்களுக்கும்.

தீம் தில்லானா நடனத்ததை வழங்கிய நடன கலா பாரதி, நாட்டியக் கலைமணி செல்வி நிருத்திகா சித்திரவடிவேல் அவர்களுக்கும் அவர்தம் மாணவர்களுக்கும்

காரை மணிவண்ணனின் நெறியாள்கையில் Face Book நகைச்சுவை நாடகத்தை வழங்கிய , ஜெனனி சுப்பிரமணியம், ராகவன் சுப்பிரமணியம், திருவாதர் தருமராஜா அவர்களுக்கும்

தோற்ற மாயை சமூக நாடகத்தை நெறியாள்கை செய்து வழங்கிய திரு. நா. சாந்திநாதன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து அந்த நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்களுக்கும், இந்நாடகத்தை உருவாக்கிய சிவசாந் அவர்களுக்கும்

Luxury வறுமை சமூக நாடகத்தை உருவாக்கம் செய்த இரா.சம்பந்தன் அவர்களுக்கும், இந்நாடகத்தை நெறியாள்கை செய்து திறம்பட நடித்துத் வழங்கிய கனடா காரை கலாசார மன்றத்தின் கலைப்பிரிவினருக்கும்

திரையிசை நடனத்தை வழங்கிய இளம் கலைஞர்களுக்கும்

விழாவுக்கான மாலைகள், மங்கல விளக்கு ஆகியவற்றை வழங்கிய வாகீசர் ஐயாவுக்கும் எமது நன்றிகள்

கடந்த ஆகஸ்ட மாதத்தில் நடைபெற்ற தமிழ்த் திறன் போட்டிகளில் பங்கு பற்றிய சிறார்களுக்கும், இந்த போட்டிகளுக்கு நடுவர்களாக கடமையாற்றிய ஆசிரியப்பெருமக்களுக்கும், பண்ணிசை போட்டி நடுவர்களாகக் கடமையாற்றிய சங்கீத ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும்

இவ்விழாவை நடத்துவதற்கு மண்டபத்தை வழங்கி சிறந்த முறையில் ஒலி, ஒளியமைப்பு செய்த Chinese Cultural Centre நிர்வாகிகளுக்கும்

விழாவுக்கான பிரதான அனுசரனையாளர்கள் டாக்டர் வி. விஜயரத்தினம், Double Seal Insulation நிறுவன அதிபர் திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம், காசிப்பிள்ளை சக புத்திரர்கள் நிதி நிறுவன அதிபர் திரு. முருகேசு காசிப்பிள்ளை, Home Life / Gta Reality Inc முகவர் திரு. ரவி ரவீந்திரன், Capreit திரு. கோபால் மயில்வாகனம், Nano Micro Computer & Home Life Future Reality Inc. திரு. ராஜ் நடராஜா, RBC Insurance முகவர் திரு. குமார் கதிரவேலு, AAS Customs Services Inc உரிமையாளர் திரு.கே.சிவபாதசுந்தரம், K.K. Electronics நிறுவன அதிபர் திரு.குழந்தைவேலு பொன்னம்பலம், மற்றும் அம்மா Takeout and Catering உரிமையாளர் திரு. மகாராஜா,

விழா விளம்பரங்களை விளம்பரங்களை வெளியிட்டு உதவிய CMR, TVI, Tamil One, ATN, CTBC உதயன், தாய்வீடு பத்திரிகை ஆகியோருக்கும்

இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய S. தவராஜா, P.S சுதாகரன், பா. ஞானபண்டிதன்

இவ்விழாவின் ஒருங்கிணைப்பாளர், திரு. கோடீஸ்வரன் ஆறுமுகம் அவர்களுக்கும்

மற்றும் சிற்றுண்டிச்சாலையில் கடமையாற்றிய தொண்டர்கள் அனைவருக்கும். காரை வசந்தம் விழா சிறப்பாக அமைய உதவிகள் புரிந்த நலன்விரும்பிகள் அனைவரிற்கும்

இவ்விழா நிகழ்ச்சிகளை வருடா வருடம் ஒளிப்பதிவு செய்து வரும் K.K.Electronics நிறுவனத்தினருக்கும், ஊழியர்களுக்கும், புகைப்பட அனுசரனை வழங்கும் பாரத் ஸ்ருடியோ நிறுவன உரிமையாளர் திரு. சோமா அவர்களுக்கும்

காரை வசந்தம் 10ஆண்டு சிறப்புமலரை வெளியிடுவதற்கு உதவிய மலர் குழுவினருக்கும் மற்றும் அழகிய வண்ணத்தில் அட்டைப்படத்தை உருவமைத்துத் வழங்கிய திரு. ஞானபண்டிதன் பாலசுப்பிரமணியம் அவர்களுக்கும், விளம்பரங்களை வடிவமைப்பதில் உதவிய திரு. மாறன் அவர்களுக்கும், சிறந்த முறையில் அச்சுப்பதிவு செய்த Bright Sun Printers நிறுவனத்தினருக்கும், இவ்விழாமலரிற்கு கனடாவிலிருந்தும், காரைநகரிலிருந்தும், மற்றும் ஏனைய நாடுகளிலிருந்தும் வாழ்த்துச் செய்திகளை வழங்கியோருக்கும், காரைநகரிலிருந்து வாழ்த்துச் செய்திகளைப் பெற்றுத்தந்த எமது நிருபர் ஐங்கரன் பத்மநாதன் அவர்களுக்கும்

Karianagar.com இணையத்தள ஆலோசகர் திரு. விமலசிறி குலசேகரம் அவர்களுக்கும், தினமும் இணையத்தள பராமரிப்பு செய்யும் K.K. Electronics உரிமையாளருக்கும். Karianagar.com இணையத் தளத்திற்கு காரைநகரிலிருந்து உடனுக்குடன் செய்திகளை வழங்கும் செய்தி நிருபர்களாகிய ஐங்கரன் பத்மநாதன், தியாகலிங்கம் ஆறுமுகம் ஆகியோருக்கும், தனிப்பட்ட முறையில் செய்திகளையும், கட்டுரைகளையும், படங்களையும், வழங்கிய காரைவாழ் மக்களுக்கும், இணையத்தளத்தை வரவேற்று மின்னஞ்சல் மூலமாகவும், கடிதம் மூலமாகவும் வாழ்த்துக்களையும், ஆதரவுகளையும், நிறைகுறைகளையும் வழங்கி வரும் உலகம் வாழ் காரைநகர் வாசகர்களுக்கும்,

எமது மன்றத்தின் காரைநகர்த் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு உறுதுணையாக இருந்துவரும் காரைநகரிலுள்ள காரை அபிவிருத்திச்சபையினருக்கும்

மற்றும் எமது மன்றத்தின் பல செயற்திட்டங்களுக்குப் பணஉதவிகள் செய்து வரும் பெயர் குறிப்பிட விரும்பாத, மற்றும் பெயர் குறிப்பிட்ட நலன்விரும்பிகள் அனைவரிற்கும்

இவ்விழாவின் வெற்றிக்கும் பொலிவிற்கும் அயராது உழைத்த மன்ற உறுப்பினர்கள், தொண்டர்கள் அனைவருக்கும் கனடா காரை கலாசார மன்றம் தனது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.




**Ravi R. Raveendran** BSc.(Eng)
Real Estate Broker
**416.817.8479**

HomeLife/GTA Realty Inc.
1711 McCowan Rd., Suite 206,
Toronto, ON M1S 3Y3
Bus: 416-321-6969

HOMELIFE
HIGHER STANDARDS



# காரை வசந்தம் 2010
## சிறப்புற எனது வாழ்த்துக்கள்

வைத்திய கலாநிதி
**V. விஜயரட்னம்**

**Dr. V. Vijayaratnam M.D**
M.R.C.P(UK), M.R.C.P.C.H., F.R.C.P (C),
F.A.A.P, D.C.H. (LONDON), D.C.C.H (EDIN)

**3430 FINCH AVE. EAST, UNIT 6A**
SCARBOROUGH, ON. M1W 2R5
**TEL: 416.496.1990**
FAX: 416.496.1984

**600 SHERBOURNE ST.**
TORONTO, ON. M4X 1W4
**TEL: 416.929.0929**
FAX: 416.929.8084